# முல்லை

முனைவர் வி.சி. சசிவல்லி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி.ஐ.டி. வளாகம், தரமணி,
சென்னை - 600 113.

# முல்லை

முனைவர் வி.சி. சசிவல்லி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சி. ஐ. டி. வளாகம், தரமணி, சென்னை - 600 113.

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | : | MULLAI |
| Author | : | **Dr. V.C. Sasivalli** |
| Publisher | : | International Institute of Tamil Studies,<br>C.I.T. Campus, Tharamani,<br>Chennai - 600 113. |
| Publication No | : | 300 |
| Language | : | Tamil |
| Date of Publication | : | 1998 |
| Edition | : | First |
| Paper used | : | TNPL 16 Kg Super Printing |
| Size of the book | : | 1/8 Demy |
| Printing types | : | 10 points |
| No. of pages | : | IV+105 |
| Price | : | Rs. 25/- (Rupees Twenty Five Only) |
| No. of Copies | : | 1000 |
| Printed by | : | **SHRI VIGNESH PRINTS**<br>158/5. Lake View Road. West Mambalam.<br>Chennai - 600 033. Ph: 484 8486 |
| Subject | : | Pastoral Poems of Sangam Period |

**முனைவர் ச.சு. இராமர் இளங்கோ**
**இயக்குநர்**
**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
**சென்னை-600 113**

# அணிந்துரை

பண்டைக் காலத்து நில இயல்புகளும், மக்கள் ஒழுகலாறும் வாழ்க்கைப் பண்பாடும் பிறவும் அறிதற்குச் சங்ககாலப் பழந்தமிழ் நூல்களான பத்துப்-பாட்டும் எட்டுத்தொகையும் நல்ல சான்றுகளைத் தம்பாற் பொதிந்து கொண்டுள்ளன. அவற்றை ஆதாரமாகக் கொண்டு பண்டைத் தமிழரின் அரசியல் சமுதாய வாழ்வியலைப் பற்றிய பல அரிய நூல்கள் அறிஞர் பலரால் எழுதப்பட்டுள்ளன. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சங்ககால நூல்களை அடிப்படையாகக் கொண்ட பல நூல்களை வெளியிட்டுள்ளது. தமிழர் ஆடை-கள், தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும், தமிழர் உணவு, தமிழர் கண்ட மனம், தமிழர் எண்ணங்கள் போன்றவை குறிப்பிடத்தக்கன.

சங்க இலக்கியப் பாடல்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் அன்பின் ஐந்திணைப் பாடல்களாக அமைந்தவையாகும். அவற்றுள் முல்லைத் திணைக்குரிய பாடல்களை அடிப்படையாகக் கொண்டு ‘ முல்லை ’ என்ற இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பண்டைத் தமிழரின் சிறந்த பண்பாட்டிற்கும் வாழ்க்கை நெறிக்கும் அடித்தளமாக அமைந்த முல்லைத் திணையின் ஒழுக்கமான இருத்தல் எனும் உரிப்பொருள் இந்நூலில் விரிவாக ஆராயப்-பட்டுள்ளது. இந்நூலினை எழுதிய நிறுவனத்தில் முதுநிலை ஆய்வாளராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற முனைவர் வி.சி. சசிவல்லி அவர்களைப் பாராட்டு-கின்றேன்.

இந்நிறுவனச் செயல்கள் அனைத்திற்கும் ஆக்கமும் ஊக்கமும் தருகின்ற நிறுவனத் தலைவர் மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி பண்பாட்டுத்-துறை **அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன்** அவர்கட்கும், தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத்துறைச் செயலாளர் **திரு. த. இரா. சீனிவாசன் இ.ஆ.ப.** அவர்கட்கும் எங்கள் நன்றி என்றும் உரித்து.

இந்நூலினை நல்ல முறையில் அச்சிட்டுத் தந்த **விக்னேசு** அச்சகத்-தார்க்கு எங்கள் நன்றி.

28.07.98

**இயக்குநர்**

# உள்ளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| | அணிந்துரை | I |
| | முன்னுரை | 1 |
| 1. | முல்லை | 4 |
| 2. | முல்லை - உரிப்பொருள் | 27 |
| 3. | முல்லை நிலமக்கள் | 65 |

# முன்னுரை

பண்டைத் தமிழரின் வாழ்வியலையும் அரசியலையும் பிறவற்றையும் அறிதற்கு உறுதுணையாகப் பழந்தமிழ் இலக்கண நூலான தொல்காப்பியமும், சங்ககால நூல்களான பத்துப்பாட்டு எட்டுத்தொகை நூல்களும் தம்பாற் சிறந்த சான்றுகளைக் கொண்டுள்ளன. இவற்றை ஆதாரமாகக் கொண்டு பண்டைத்-தமிழரின் அரசியல் சமுதாய வாழ்வியலைப் பற்றிய பல அரிய நூல்கள் அறிஞர் பலரால் எழதப்பட்டுள்ளன. பண்டைத் தமிழர் வாழ்ந்த நிலம் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல், பாலை என ஐவகையாகப் பகுக்கப்பட்டிருந்ததைத் தொல்காப்-பியப் பொருளதிகாரத்தின் வழி அறியலாம். அவற்றுள் காடும் காடு சார்ந்த இடமும் முல்லை எனப்படும். மலையும் மலைசார்ந்த இடமும் குறிஞ்சி எனப்-படும். வயலும் வயல்சார்ந்த இடமும் மருதம் எனவும்; கடலும் கடல்சார்ந்த இடமும் நெய்தல் எனவும் படும். முல்லையும் குறிஞ்சியும் தம்முள் திரிந்த இடம் பாலை எனப்படும். தொல்காப்பியர் உலகில் உள்ள காட்சிப் பொருள், கருத்துப் பொருள் ஆகியவற்றை முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருள் என மூன்று வகையாகப் பகுத்துக்கொண்டு, இந்த ஐந்து நிலங்களில் வாழும் மக்களின் வாழ்க்கை முறைகளை வகுத்துரைத்துள்ளார். ஐவகை நிலங்களுக்கும் உரிய கருப்பொருள்களை நோக்கும்பொழுது பண்டைத் தமிழர் வழிபட்ட கடவுளர், நில அடிப்ப டையில் மக்கள் மேற்கொண்ட தொழில்கள், அவ்வந்நிலங்களில் தோன்றிய பொருள்கள் ஆகியவைப் புலப்படும். ஐவகை நிலங்களிலும் வாழ் மக்கள் தலைமக்கள் என்றும் பொதுமக்கள் என்றும் இரண்டு வகையினர். அந்நாளில் மக்கள் தொழில்கள் பெரும்பாலும் உணவு தேடுதலை ஒட்டியே அமைந்தன. அத்தொழில்களை வைத்தே மக்கள் வேறுபாடு ஆதியிலிருந்தது என்று கூறலாம். இந்த ஐவகை நிலங்களிலும் இயற்கைப் பொருள்களும், தொழில்களும், பழக்க வழக்கங்களும் வெவ்வேறாக இருந்தமையால் சங்க இலக்கியப் பாடல்கள் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என ஐந்திணைப் பாடல்களாக அமைந்தன. அவற்றுள் சங்க இலக்கிய மருதத்திணைப் பாடல்களை முனைவர்பட்ட ஆய்வு நூலாக முனைவர் வி.டி. மாணிக்கம் அவர்கள் ‘மருதம்’ என்ற தலைப்பிலும் நெய்தல் திணைப் பாடல்களைச் ‘சங்க இலக்கியத்தில் நெய்தல்திணை’ என்ற தலைப்பில் முனைவர் முத்துக்கண்ணப்பர் அவர்களும்; பாலைத்திணைப் பாடல்களின் ஆய்வாகப் ‘பாலை’ என்ற தலைப்பில் முனைவர் கு.நாகு அவர்களும் ஆய்வுநூல் எழுதியுள்ளனர். முனைவர் ஐ. அண்ணாமலை முல்லைத்திணைப் பாடல்களைச் ‘சங்க, இலக்கியத்தில் முல்லைத்திணை’ என்ற தலைப்பில் முனைவர் பட்ட ஆய்வேடு

எழுதியுள்ளார். மேலும் சங்க இலக்கிய முல்லைத்திணைப் பாடல்களை ஆதாரமாகக் கொண்டு 'முல்லைப்பாடல்கள்', 'முல்லைத்திணை', 'முல்லைவாழ்க்கை', 'முல்லைக்கொடி' போன்ற சில நூல்கள் அறிஞர் பெருமக்களால் எழுதப்பட்டுள்ளன. இவற்றையெல்லாம் ஆதாரமாகக் கொண்டும் இவற்றினின்றும் அணுகுமுறையில் சிறிது வேறுபட்டும் **முல்லை** என்ற இந்நூல் அமைந்துளது.

இந்நூல் மூன்று இயல்களாகப் பிரித்து எழுதப்பட்டுள்ளது. முதல் இயலான முல்லை என்பதில் முல்லை என்பதன் சொல்விளக்கம்; முல்லை என்ற சொல்லுக்கு ஆளப்பட்ட பிறபொருள்கள் தரப்பட்டுள்ளன. முல்லை எவ்வாறு வாழ்வியல் மலராக மக்கள் வாழ்க்கையில் ஒவ்வொரு நிலையிலும் ஒன்றிநின்றது என்பதும் ; அகத்திணைப் பாடல்களில் முல்லை எவ்வாறு குறியீடாகப் பயன்பட்டது என்பதும் தக்க சான்றுகளுடன் விளக்கப்பட்டுள்ளன.

'முல்லை உரிப்பொருள்' என்ற இரண்டாம் இயலில் முல்லைப் பெயர்க் காரணம், கைகோள், முல்லை சான்ற கற்பு, இருத்தல் இருத்தல்நிமித்தம் என்பவை விளக்கப்பட்டுள்ளன. முல்லைத் திணையின் உரிப்பொருளான இருத்தலும் இருத்தல் நிமித்தமும் என்பதற்குத் தொல்காப்பிய உரையாசிரியர்களும் தற்காலத் திறனாய்வாளர்களும் **ஆற்றியிருத்தல்** என்றே விளக்கம் கூறியுள்ளனர். ஆனால் முல்லை நிலத்தில் தொடங்கிய தலைவன் தலைவியது இனிய இல்லற ஒழுக்கத்தை இவர்கள் முல்லையின் உரிப்பொருளான இருத்தல் என்பதிலடக்கி ஏன் கூறவில்லை என்ற வினா எழுகின்றது. இவ்வினாவிற்கு விடை காணும் முயற்சியாக முல்லைத்திணைப் பாடல்களில் தலைவன் தலைவி இணைந்திருந்து நடத்தும் இனிய இல்லறச் சிறப்பைக் கூறும் பாடல்களை 'இருத்தல்' என்பதிலும், பிரிவுக் காலத்தில் தலைவன் தலைவியது ஆற்றாமையைப் புலப்படுத்தும் பாடல்களை 'இருத்தல் நிமித்தம்' என்பதிலும் அடக்கிக் கூறினால் முல்லையின் உரிப்பொருளான இருத்தல் என்பதற்கு ஆற்றியிருத்தல் என்ற பொருள் கொள்ள வேண்டியதில்லை என்பது விளக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் இயலான 'முல்லைநில மக்கள்' என்ற தலைப்பில் முல்லைநிலத்தார் தலைமக்கள், மக்கள் என இருபிரிவாகப் பிரிக்கப்பட்டு, முதற்கண் தலைமக்கள் என்ற பிரிவில் சங்க இலக்கியப் பாடல்களின் துணைகொண்டு தலைவன் தலைவியது பண்புநலன் விளக்கப்பட்டுள்ளது. பின்னர் இவர்களோடு தொடர்புள்ள தோழி, செவிலி, பாணன், பாகன் ஆகியோரது உற்றுழி உதவும்

பண்பும், அன்பும், அறிவும், ஆற்றலும் விவரிக்கப்பட்டுள்ளன. மக்கள் என்ற பிரிவில் முல்லைநிலப் பொதுமக்களான ஆயர்களின் வாழ்வியல் சித்தரிக்கப்-பட்டுள்ளது. ஆயர்களது உணவு, உடை உறையுள் ஆகியவை கூறப்பட்டு, அவர் களது தொழிலான ஆநிரைமேய்த்தல் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. ஆயர்கள் வீரத்தையும் காதலையும் மதித்துப் போற்றினர். பழந்தமிழ் மக்களுள் முல்லை-நில ஆயர்களிடமே ஏறுதழுவி மணமுடிக்கும் முறை காணப்படுகிறது. ஏறுதழுவல் காட்சிகளும் சங்ககால இலக்கியங்களில் முல்லைக்கலியில் மட்டுமே மிக அழகாக வருணிக்கப்பட்டுள்ளது. இவர்களிடமே பழங்கலைகளுள் ஒன்றான இசைக்கலை முகிழ்த்தது. இவர்கள் தமது மனமகிழ்ச்சியை வெளிப்படுத்தப் பொழிலிடத்தே குரவைக் கூத்தாடினர். அப்பொழுது தங்கள் வேந்தனான பாண்டியமன்னனையும் தங்கள் குலதெய்வமான திருமாலையும் போற்றி வழிப்பட்டனர். இவ்வாறு பலநிலைகளில் சிறப்புற்ற முல்லைநில மக்களின் நாகரிக, பண்பாட்டு வளர்ச்சி மருதநில வளர்ச்சிக்கு முன்னோடியாய் அமைந்ததில் வியப்பில்லை.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் முதுநிலை ஆய்வாளராகப் பணி புரியும் போது 'முல்லை' என்ற தலைப்பில் ஆய்வு நூல் எழுதும் பணி எனக்கு அளிக்கப்பட்டது. நான் நிறுவனப்பணியினின்றும் ஓய்வுபெற்ற நிலையிலும் இந்நூலை எழுதி முடிக்குமாறு என்னை ஊக்குவித்த நிறுவன இயக்குநர் **முனைவர் ச.சு. இராமர் இளங்கோ** அவர்கட்கு என் உளம் நிறைந்த நன்றியைக் கூறக்கடமைப்பட்டுள்ளேன். இந்நூலினைச் செம்மையாக அச்சிட்டு உதவிய அச்சக உரிமையாளருக்கும் என் நன்றி உரித்தாகும்.

**சென்னை**
1998

**வி.சி. சசிவல்லி**

# இயல் - ஒன்று
## முல்லை

பழந்தமிழ் இலக்கண நூலாரான தொல்காப்பியர் "எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே" என்றார். தமிழ்ச்சொல் எல்லாம் ஒரு பொருள் உணர்த்-துதலைக் கருதியே நடக்கும். தமிழ் மொழியில் உள்ள அடிச்சொல் ஒவ்வொன்-றிலிருந்தும் சொற்கள் பல உருப்பெற்றுச் சொற்குடும்பங்கள் பெருகியுள்ளன. அவற்றுள் முல்லை என்னும் சொல் ஒரு மூலக் குடும்பத்தில் உருப்பெற்று வளர்ந்-ததாகும்.

முல்லை என்ற சொல்லின் அடிச்சொல்லாக 'முல்' என்பது அமை-கின்றது. என்றாலும் இந்த 'முல்' என்பது சுட்டெழுத்துகளின் அடியாக உண்டா கும் அடிச்சொற்களில் ஒன்றான 'உல்' என்பதனின்றும் உருவாகும். இந்த 'உல்' என்ற அடிச்சொல் குல், சுல், துல், புல், நுல், முல் முதலிய முதனிலைகட்கு மூல மாகும். 'உல்' என்பதன் பொருள் வளர்ச்சியாகிய உலவு, சுற்று, திருகு, முதலிய பொருள்களிலேயே 'முல்' என்பதும் அமையும். சொல் வளர்ச்சியில் இந்த 'முல்' என்பது முள், முர், முன் என மாற்றம் பெறுதலைக் காணலாம். அவ்வகை யில் 'முல்' என்பதற்குத் திருகிய அமைப்பு, சுற்றும் அமைப்பு போன்ற பொருள் கள் வரும். சொல்லமைப்பில் இந்த முல் -> முள் எனவரும் போது கூர்மை என்ற பொருளைப் பெறும். முல் -> முர் எனவாகும் போது முர் -> முருகு என வளர்ச்சி பெற்று மணம் என்ற பொருளைத் தரும். முல் -> முன் என வளரும் போது முதன்மை என்ற பொருளைப் பெற்று வருதலைக் காணலாம். இந்த முல் -> மெல் என மாறுதலும் உண்டு. அப்பொழுது மென்மை என்ற பொரு ளைப் பெறுகிறது. இவ்வாறு முல், முர், முள், முன், மெல் ஆகிய அடிச்சொற்க ளுக்குக் கூறப்பெறும் பொருள்களை எல்லாம் தன்னுள் அடக்கி, 'ஐ' என்னும் விகுதி பெற்றுக்கிளைத்த அருந்தமிழ்ச் சொல்தான் **முல்லை** என்பது. பொதுவாக முல்லை என்ற சொல் நம்செவியல் ஒலித்ததும் நம் உள்ளத்தில் மலர்வது மென்மையானதும், கூர்மையான திருகிய வடிவமைப்புள்ளதும், மணம் வீசுவதுமான முல்லை மலரன்றோ! 'மூர்த்தி சிறிதாயினும் கீர்த்தி பெரிது' என்றொரு வழக்குத் தமிழிலுண்டு. அதுபோல இந்த முல்லை மலர் வடிவில் சிறியதேயாயினும் மக்கள் வழக்காற்றில் முல்லை பெறுமிடம் பெருமளவினது. இந்த முல்லை என்ற சொல் காலப்போக்கில் மக்களால் தம்மோடு தொடர்புடைய பல்வேறு பொருட்களைப் புலப்படுத்தக் கையாளப்பட்டது. காட்டாக, சென்னைத் தமிழ்ப் பேரகராதி (தொகுதி - ஆறு ; பக்கம் 3280) முல்லை என்ற சொல்லுக்குத்

தந்துள்ள பொருள்கள் பலவாம். அவை முறையே 1. கொடிவகை ; 2. காட்டு மல்லிகை ; 3. ஊசி மல்லிகை ; 4. ஈசுரமூலி ; 5. முல்லை நிலம் ; 6. முல்லை நிலப் பண்வகை ; 7. உரிப்பொருள்களில் ஒன்றாகிய இருத்தல் ; 8. கற்பு ; 9. சிறப்பியல்பு ; 10. வெற்றி ; 11. முல்லைக் குழல் ; 12. முல்லைப்பாட்டு ; 13. முல்லைச்சூட்டு ; 14. முல்லையாளர் என்பனவாம்.

## முல்லைமலர்

முல்லை மலர்க்குடும்பத்தில் கொடிப்பூ வகையைச் சேர்ந்தது. முல்லை மலர் வெண்மைநிறங்கொண்டது. இம்மலர் அரும்பின் இதழ்கள் ஒன்றன்மேல் ஒன்றாய் பொருந்தியுள்ளமை நன்கு முறுக்கிவைத்தது போல் தோன்றும். அதனால் முல்லை அரும்பின் முனை கூர்மையாக இருக்கும். இதனை 'புரிநெகிழ் முல்லை' (கலி : 61:2) என்றும், 'முல்லை வைநுனை' (அகம். 4:1) என்றும் பாடப் பட்டுள்ளதால் அறியலாம். இக்கூர்மையான முல்லையரும்பு பூனைக்குட்டியின் பல்லைப் போன்றது என்ற பொருளில்

பிள்ளை வெருகின் முள்ளெயிறு புரையும்
பாசிலை முல்லை முகைக்கும் .... (புறம். 117: 8-9)

எனப் புறநானூற்றுப் பாடலில் சித்தரிக்கப்பட்டுள்ளது. முல்லைமலர் சிறிய வடிவகைக் கொண்டது ; நல்ல நறுமணம் உள்ளது என்பது 'சிறுவீ முல்லை பெரிதுகமழ் அலரி' (நற்:361:1) என்றதால் புலனாகும் ; மலர்களில் முல்லை மலர் தனித்தன்மை வாய்ந்தது. தூய்மை,வெண்மைநிறம், வடிவு, மணம், மென்மை, கூர்மை போன்ற நல்லியல்புகளைக் கொண்டது. முல்லையில் செம்மைநிற மலரும் உண்டு. இம்மலர் **தளவம்** என்ற சொல்லால் குறிக்கப்-பெற்றது. இது செம்முல்லை என்றும் அழைக்கப்படும். 'தளவின் இதல்முள் செந்நனை' (அகம். 23:3) என்னும் அகநானூற்றுப் பாடலடியால் அறியலாம்.

முல்லைமலர் அரும்பும் காலம் கார்காலம் ; மலரும் பொழுது மாலைப் பொழுது. 'காரும் மாலையும் முல்லைக்குரிய' என்பது தொல்காப்பியம். இது முல்லைத் திணைக்கு வகுக்கப்பட்ட காலமாகக் குறிக்கப்பட்டாலும் முல்லை மலரும் காலமும் பொழுதும் அவையே ஆவன இதனை,

"கார்நயந்து எய்தும் முல்லை" - ஐங்குறு : 454

“ கார்புறந் தந்த நீருடை வியன்புலத்துப்
பல்லா புகுதரூஉம் புல்லென் மாலை
முல்லை வாழியோ முல்லை நீநின்
சிறுவெண் முகையின் முறுவல் கொண்டனை” - குறுந் : 362

“ முல்லை அரும்புவாய் அவிழும் பெரும்புன் மாலை” - நற் : 369
“ எல்லறு பொழுதின் முல்லை மலரும் மாலை என்மனார் . . .” -
குறுந் : 234

என்றதால் அறியலாம்.

## வழிபாட்டு மலர்

மலரினங்களில் பண்டுதொட்டே நறுமணமும் தூய்மையுங் கொண்ட முல்லைமலர் வழிபாட்டிற்கும் வாழ்த்திற்கும் உரிய மலராகக் கருதப்பட்டது. சங்க இலக்கியமான முல்லைப்பாட்டில் ஒரு காட்சி. அதில் போர்வினைமேற் சென்ற தலைவன் திரும்பவருவதாகக் கூறிய கார்காலம் தொடங்கியது. மாலை நேரத்தில் தலைவி துயருறுகின்றாள். தலைவியைத் தேற்றுவதற்காகப் பெருமுது பெண்டிர் தெய்வத்தை வணங்கி விரிச்சி (நற்சொல்) கேட்டு நிற்கின்றனர். அவ்வாறு தெய்வத்தை வாழ்த்தி வணங்கி விரிச்சி கேட்கும் போது ஆடவரின் உழைப்பின் பயனாகக் கருதப்படும் நெல்லையும் கற்பின் சின்னமாகிய அரும்ப விழ்ந்த முல்லைமலரையும் கலந்த கலவையை நாழியில் எடுத்துச்சென்று தூவி வாழ்த்தினர். இதனை,

நெல்லொடு நாழிகொண்ட நறுவீ முல்லை
அரும்பவிழ் அலரிதூஉய்க்கை தொழுது,
(முல்லைப்பாட்டு : 8 -10)

என்ற பாடலடிகள் சித்தரிக்கும்.

மேலும் மங்கலப் பெண்டிர் நாள்தோறும் மாலைப்பொழுதில் இல்லத்தை மங்கலமாக்குவர். மலர்தூவி விளக்கேற்றி வைத்து இல்லுறை தெய்வத்தை வணங்குவர். இதனை.

நெல்லும் மலரும் தூஉய்க்கை தொழு
மல்லல் ஆவண மாலையயர (43-4)

எனவரும் நெடுநல்வாடையால் அறியலாம்.

அகநகர் எல்லாம் அரும்பவிழ் முல்லை
நிகர்மலர் நெல்லொடு தூஉய்ப் பகல்மாய்ந்த
மாலை மணிவிளக்கம் காட்டி (9: 1-3)

என இளங்கோவடிகளின் காவியமான சிலப்பதிகாரம் இயம்புவதைக் காணலாம். அதில் நெல்லொடு ஒளியுடைய முல்லை தூவப்பட்டதைக் காணலாம்.

**வாழ்வியல் மலர்**

பண்டைத்தமிழர் தெய்வத்தைப் பரவும் போதுமட்டுமல்லாமல் தங்கள் வாழ்வில் நடைபெறும் சில முக்கிய நிகழ்ச்சிகளிலும் மங்கலச் சின்னமாகக் கருதவும் வாழ்த்தவும் முல்லை மலரைப் பயன்படுத்தினர். சங்க இலக்கிய அகநானூற்றில் (86 : 15-17) திருமணக்காட்சி ஒன்று இடம் பெற்றுள்ளது. திருமண நிகழ்ச்சியின் முன் மணமகளை நீராட்டுவது ஒரு மங்கல நிகழ்ச்சி. அப்பொழுது முல்லை மலரை நெல்லொடு நீரில் கலந்து மணமகள் நீராட்டப்படுகின்றாள்.

நீரொடு பொலிந்த ஈரிதழ் அலரி
பல்லிருங் கூந்தல் நெல்லொடு தயங்க
வதுவை நன்மணம் . . .

என்ற அடிகளில் ஈரிதழ் அலரி என்றது ஈரம் தோய்ந்த, மலர்ந்த முல்லை மலரைக் குறிக்கும்.

திருமணம் நிறைவேறியதும்,

'சின்மலர் கொடுதூவி மங்கல நல்லமளி' ஏற்றுவர். இதனை அகநானூறு தலைநாள் இரவு என்று குறிக்கும். மணமக்கள் படுக்கும் இடமும் முல்லை மலரால் தூவப்படும்,

முல்லைப் பல்போது உறழப் பூநிரைத்து
மெல்லிதின் விரித்த சேக்கை. (நெடுநல் : 130-31)

இவ்வாறெல்லாம் முல்லைமலர் வாழ்த்தவும், வழிபடவும், மங்கலமாகக் கருதவும் பண்டைத் தமிழரால் பெரிதும் போற்றப்பட்டது.

## அகத்திணையில் முல்லை

வாழ்வியல் மலர்களில் ஒன்றாகிய மணமிகு முல்லைமலர் அரும்பும் காலமும் பொழுதும், மலரின் தன்மையும், வழிபடவும் வாழ்த்தவும் முல்லைமலர் பயன்பெறுமிடமும் இதுவரை நோக்கப்பட்டன. இனி முல்லை மலர் பண்டைத்தமிழர் வாழ்வியலோடு இன்றியமையா ஒன்றாகக் கருதிப்-போற்றப்பெற்றதால் அம்முல்லைமலர் ஒரு சிறந்த குறியீடாகப் போற்றப்-பட்டதைக் காணலாம்.

வாழ்க்கைக்கும் இயற்கைக்கும் இடையே அமைந்துள்ள தொடர்-பினைத் தெளிவாக உணர்ந்தவர்கள் பண்டைத் தமிழ்ச் சான்றோராவர். இதனைப் பழந்தமிழ் இலக்கணமும் இலக்கியமும் நன்றாக எடுத்துக்காட்டுவன. தமிழ் மக்களின் வாழ்வியல் நிகழ்ச்சிகள் அகம் என்றும் புறம் என்றும் இரு-திணைகளாகப் பாகுபாடு செய்யப்பட்டன. அவற்றுள் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப்பொருள்களும் அடங்கின. இவ்விருவகை ஒழுக்கங்களில் அகவொழுக்கம் வாழ்க்கைக்கு அடிப்படையாய் அமைந்து இன்பம் பயப்பது. அந்த அகவொழுக்கம் அன்பின் ஐந்திணை எனச் சிறப்பிக்கப் பட்டது. அவை குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என விரிந்து முறையே புணர்ச்சி, இருத்தல், பிரிவு, ஊடல், இரங்கல் என்னும் ஒழுங்கங்களை உணர்த்தின. இங்கு, தொல்காப்பியர் முல்லை, குறிஞ்சி, மருதம்,நெய்தல் என்பன உலகத்தைக் குறித்தன என,

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே. (அகத்.5)

என்ற நூற்பாவில் குறிப்பிடுகின்றார். எனவே குறிஞ்சி முதலிய நிலம், ஒழுக்கம் என்னும் இரண்டையும் குறிக்கும் என்பது புலனாகும். தொல்காப்பிய உரை-

யாசிரியரான இளம்பூரணர் அவ்வந்நிலத்துச் சிறந்த கருப்பொருள் காரணமாக அவ்வந்நிலங்களின் பெயர் அமைந்தன என்றார். ஒரு நிலத்து வாழும் மக்கள் ஆங்குக் காணப்படும் பொருள்களையே முதலில் அறிவர். ஆதலின் கருப்பொருள்களை உணர்ந்த மக்கள் அவ்வப்பொருள்கள் தோன்றும் நிலத்துக்குப் பொருள்களால் பெயர் சூட்டினர் என்றார். எனவே திணை என்ற சொல் நிலம், பொருள், ஒழுக்கம் என்ற் மூன்றையும் குறிக்கும் என்பது பெறப்படும். அவ்வகையில் இங்கு முல்லைத்திணை என்று குறிப்பிடும்போது முல்லைநிலம் (முதற்பொருள்); முல்லைமலர் (கருப்பொருள்) ; முல்லை ஒழுக்கம் (உரிப்பொருள்) என்ற மூன்றையும் குறிக்கும்.

## முல்லைநிலம்

தொல்காப்பியர் அன்பின் ஐந்திணைகளில் இடம்பெறும் ஒழுக்கத்திற்கு ஏற்ற பின்புலம் அமைதல் உரிப்பொருளுக்கு மேலும் பொலிவு தரும் எனக்கருதுகிறார். முதற்பொருள், கருப்பொருள் என்ற இரண்டுமே பின்புல வருணனைக்காகத் தொல்காப்பியரால் கூறப்பட்டவை ஆகும்.

சங்ககால அகப்பாடல்களில் ஐந்திணைகளுக்குரிய நிலவருணனை என்று வரும்போது, குறிஞ்சிநிலமாகிய மலை சார்ந்த இடமோ, மருதத்திற்குரிய வயல்வரப்புகளோ, நெய்தலின் கடல், கடற்கரை வருணனையோ அதிகம் இடம் பெறவில்லை ; ஆனால் பாலைநிலம் அவ்வழிச் செல்வோர்க்கு எத்தகைய கொடிய வழி என்றும் வேனிற் காலத்தில் எவ்வளவு வறண்ட நிலமாகக் காட்சிதரும் என்றும் மிகத் தெளிவாகச் சித்தரிக்கப்பட்டிருக்கும் ; அதுபோலக் கார்கால வருகையினால் முல்லைநிலம் எவ்வெவ்வாறெல்லாம் குளிர்ச்சியும் பல்வேறு இயற்கை அழகுகளும் மிளிர எழில்பெற்றுக் காட்சிதரும் என்றும் பாடப்படும். இவ்வாறு நிலவருணனைக்காக நிலம் சித்தரிக்கப்படுவது இவ்விரு திணைகளி லேயே காணப்படுகிறது. இன்பம் துன்பம் என்ற இரண்டு முக்கிய உணர்ச்சிகளில் இன்பவுணர்வுக்கு முல்லையும், துன்பவுணர்வுக்குப் பாலையும் பின்புலமாக அமைந்தன என்றும் கூறலாம்.

ஐவகை நிலங்களுள் காடும் காடு சார்ந்த இடமும் முல்லை எனப்பட்டது. இந்நிலத்தில் முல்லைமலர் சிறந்திருந்தமை பற்றி முல்லை எனப்பெயர் பெற்றது. முல்லை ஒழுக்கத்திற்கு உகந்த இடமாக முல்லைநிலம் சிறப்பிக்கப்பட்டது. இந்த முல்லைநிலம் கண்ணைக்கவரும் எழில்பெறத் துணைநிற்கும்

இயற்கைகள் கார்காலமும் இனிய மாலைப் பொழுதும் ஆகும். கார்காலத்தை மக்கள் விரும்பி ஏற்றனர். அதற்குக் காரணம் கார்காலத்தில் பெய்யும் மழையி னால் ஏற்படும் நன்மைகள் ஆகும். மழைபெய்யும் கார்காலத்தில் வேனிலின் வெம்மை தணிந்து குளிர்ச்சி ஏற்பட உயிரினமும் பயரினமும் மகிழ்ச்சியில் திளைக்கும். ஓராண்டின் வசந்த காலமாகிய கார்காலந்தான் ஒன்றுபட்ட இருவுள்ளங்கள் இணைந்து மகிழும் காலமாகிறது. வினைமேற் சென்ற ஆடவ ரும் வினைமுடித்துத் திரும்பும் காலம் கார்காலமாகும். எனவே கார்காலப் பின் னணி முல்லைத் திணைக்குப் பொருத்தமாக அமைந்துள்ளது. பெரும்பாலும் முல் லைநில வருணனை என்று பார்க்கும் போது கார்கால வருணனையையும் இணைத்தே செந்நாப்புலவர்கள் பாடிமகிழ்ந்துள்ளதைக் காணலாம். இந்த முல்லை நிலத்தைக் குறிக்கச் சங்க இலக்கியங்களில் காடு, கானம், குறும்பொறை, கொல்லை, செந்நிலம், செஞ்சுவல், புறவு, புனம், புன்புலம், மென்புலம், முரம்பு, வன்புலம் போன்ற பிறபெயர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. காடும் காடுசார்ந்த இடமுமாகிய முல்லைநிலம் கார்காலத்தில் அழகுறத் திகழ்வதனை ஐங்குறுநூற்றில் புறவணிப்பத்து என்ற பகுதி சிறந்த எடுத்துக்காட்டாய் நின்று விளக்குகின்றது. அகநானூற்றில் இடம்பெறும் நாற்பது முல்லைத்திணைப் பாடல்களில் முல்லைநிலம் சிறப்பிக்கப்படக் காரண மான கார்காலமும், மழைபொழிவால் தளிர்த்த முல்லைநில அழகும், அங்கு வாழும் உயிரினங்களின் எழிச்சியும் எழிலும் சுவைத்து மகிழுதற்கு உகந்தவாறு மிகச்சிறப்பாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. முல்லைநிலக்காடு மதுரை மருதங்கிழார் மகனார் பெருங்கண்ணனார் போன்ற புலவர்களால் பின்வருமாறு படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளது.

"திசைகள் எல்லாம் மறையும்படி எங்கும் முகில்கள் பரவி மழைக்கால் இறக்கி இடியுடன் கூடிய பெரிய மழையைப் பொழிந்தன; அதனால் மகிழ்ந்து வரிகளையுடைய தேரைகள் பள்ளங்கள் தோறும் கழைக்கூத்தர் கூத்தாடுகின்ற களத்தில் ஒலிக்கின்ற பறைபோல ஒலித்தன ; நீண்ட பூங்கொத்துகளையுடைய கொன்றை மரங்களோ காடுகள் அழகுபெறும்படி ஒருங்கே அழகிய பொன்னால் இயற்றிய ஒளிவிடுகின்ற அணிகலன்களைத் தொங்கவிட்டது போலக் காட்சியளிக்கின்றன. சுடர்போன்ற தோன்றிப் பூக்கள் புதல்களின் உச்சியெல்லாம் மலர்ந்து அழகைக் கொள்ளா நிற்ப ; எவ்விடத்தும் முல்லைக் கொடிகளும் தோற்றா மரங்களும் ஒருங்கே மலர்ந்து விளங்கின. கல்நிலத்தில் பிளந்த வாயையுடைய பசிய சுனைகள் தம்பால் விலங்குகள் கரையில் நின்றே நீர்பருகும் அளவிற்கு நீரால் நிரம்பி நின்றன." (அகம்: 364).

இவ்வாறு மழைபொழிந்த வைகறைப் பொழுதிலே சிற்பக்-கலைவல்லான் ஒருவன் செய்துவிட்டாற் போன்று தோன்றுகின்ற செம்மண்நிலத்தில் மான்கள் குருந்தமர நிழலில் கிடக்கின்றன. குறிய வயிற்றையுடைய இந்திர கோபங்கள் நீலமணிகளோடு உருளுகின்ற பவளம் போலக் குறுகுறு நடந்து அழகிய காயாவினது பழைய பூவை மிகவும் மறைத்தன (அகம்.374).

"மரங்கள் அடர்ந்த காடு வளம் மிகுதற்குக் காரணமான மழை பெய்யப்பெற்ற களர்நிலத்தின்கண் வீசுகின்ற குளிர்காற்றுப் படுந்தோறும், நிலவொளி போன்று செறிந்த மொட்டுகள் மலர்ந்த முடம்பட்ட கால்களை-யுடைய பிடவஞ் செடிகளோடு அழகிய விறலியர் கையால் மாட்சிமைபட ஆடுகின்ற 'தோளி' என்னும் கூத்தை ஒப்ப மெல்ல மயில்கூட்டங்கள் கூத்-தாடுகின்றன." (344).

"முல்லைக் கொடிகள் படர்ந்த அழகிய முல்லைநிலத்தில் சிறிய நெல்லிக்காய் போன்ற குறிதாக விழித்த கண்களையுடைய குறுமுயல்கள் வரகினது பருத்த சூலினைத்தின்று வளைந்த அழகிய செவிகளை உடைய வாய்க்காய்த்துள்ள கொடிகளின் கீழே மறைந்து உறங்கிப் பின்னர் தத்தம் காதல் துணையோடு இணைபிரியாது சென்று முற்றத்திலே சிறிதாகத் தெளிந்து நிற்கும் நீரை ஆராய்ந்து உண்டன" (அகம் : 284).

"செவ்வரக்கினை ஒத்த சிவந்த நிலத்தில் செல்லும் பெருநெறியில் காயா மலரின் வாடிய பூக்கள் பரவிக்கிடக்க, தம்பலப் பூச்சிகள் பலவும் வரிவரியாக ஊர்ந்த செல்லவும், அவை பவளத்தொடு நீலமணி நெருங்கியிருந்தாலன்ன காட்சிதரும் குன்றம் சூழ்ந்த அழகிய காட்டிடங்களில் மடப்பத்தினையுடைய பெண்மானைத் தழுவி கொம்பினையுடைய ஆண்மான் புல்லை அருந்தித் தாவிச் செல்ல, பசுக்கூட்டங்களை அகன்ற முல்லை நிலத்திலே பரவி மேயவிட்டு ஆயர்கள் சிறிய குன்றிடத்து நறுமணமுள்ள பூக்களை மாலையாகக்கட்டி மகிழ்ந்-திருக்க ; அறுகம் புல்லாய உணவினை அருந்திய வலிய நடையினை உடைய நல்ல ஆனினங்கள் பருத்த மாண்புற்ற மடி இனிய தீம்பாலைச் சொரிய கன்றை நினைந்து அழைக்கும் குரலினவாய் மன்றுகளில் நிறையச் செல்லும்" (அகம்: 14).

முல்லைநிலம் குளிர்ந்த மழைபொழிந்து பசுமையுற்ற காலத்தில் பசிய முல்லைக்கொடியின் மெத்தென்ற செவ்வியை உடைய மென்மைப்பதம் வாய்ந்த நன்றாகிய மிகப்பல புதிய மலர்கள் வெள்ளிய களராகிய அறல்பட்ட மணலில்

தாவிக்கிடப்ப, வண்டுகள் அரும்பினை மலர்த்தக் குளிர்ந்த நறுமணம் எங்கும் தவழ்ந்தது (அகம்:74).

முல்லைநிலத்தே ஆழமான நீரையுடைய பள்ளங்களில் உள்ள பிளந்த வாயினையுடைய தேரைகள் நீண்ட வழியெல்லாம் சிறிய பலவாகிய வாத்-தியங்களைப் போல ஒலித்தன. குறிய புதராகிய பிடவின் நீண்ட காம்பினை-யுடைய மலர்கள் செம்மண்ணாகிய நிலத்திடத்து நுண்ணிய மணலில் உதிர்ந்து அழகு செய்தன. கொடிய சினமுடைய பாம்பின் படம் மேலே உயர்ந்தது போன்ற தண்ணென மணக்கின்ற காந்தள் பூவினது தாது கட்டவிழ்ந்து விரிந்தன. இவ்வாறு நறிய முல்லைப்பூவுடன் செங்காந்தள் பூவும் வேறுபல பூக்களும் ஒருங்கு மலர முல்லைக்காடு முழுமையும் மலர்களின் நறுமணம் பரவிப் பொருந்தியது. இவ்வாறு மரஞ்செடி கொடிகள் மழைவளம் பெற்றுத் தளிர்த்து அரும்பு மலர்ந்து புத்தழகுடன் மணம்வீசிப் பொலிவதால், "காண்தரு புதுநலம் பெற்ற வெய்து நீங்கு புறவாக" முல்லைநிலம் காட்சி தந்தது (அகம் : 224)

## முல்லை ஒழுக்கம்

அகப்பொருளில் திணை என்ற சொல் முதல், கரு, உரிப்பொருள்களைக் குறிக்கப் பயன்பட்டது. காட்டாக முல்லைத்திணை என்பது காடும் காடுசார்ந்த நிலப்பகுதியான முல்லை நிலத்தையும், அங்கு தோன்றும் முல்லைமலராகிய கருப்பொருளையும், அந்நிலத்திற்குரிய இருத்தல் ஒழுக்கமாகிய உரிப்-பொருளையும் உணர்த்திநின்றது. முல்லைநிலத்திற்குரிய ஒழுக்கமாகிய அல்லது உரிப்பொருளாகிய இருத்தல் என்பதும் முல்லை என்ற சொல்லால் ஆளப்பட்டது. இனி முல்லைநில உரிப்பொருளான இருத்தல் என்ற முல்லைக்கும் முல்லைமலருக்கும் இடையே அமைந்த இன்றியமையாத தொடர்-பினைக் காண்போம்.

அன்பின் ஐந்திணைகளுள் ஒத்த தலைவனும் தலைவியும் புணர்கின்ற இடமாக மலையும் மலைசார்ந்த இடமாகிய குறிஞ்சிநிலம் வகுக்கப்பட்டது. குறிஞ்சி நிலத்திற்கு அங்குப் பூத்துக் குலுங்கும் குறிஞ்சி மலர்களின் சிறப்பு நோக்கி, குறிஞ்சி எனப் பெயரிட்டு முன்னோர் வழங்கினர். அந்நிலத்திற்குரிய உரிப்பொருளாகிய புணர்தலுக்கும் குறிஞ்சி மலருக்கும் இடையே அறிஞர் சிலர் ஓர் ஒப்புமைக் காட்டுவர். அதாவது குறிஞ்சிமலருக்குரிய ஒரு சிறப்பு அம்மலர்கள் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மலரும்

தன்மையது. குறிஞ்சிமலருக்குரிய இப்பண்பு ஓரிளம்பெண் திருமண நிகழ்ச்சிக்கு ஏற்ற பருவம்அடைகின்ற வயதைக் காட்டுவதாகக் கூறுவர். எனவே குறிஞ்சி (புணர்தல்) ஒழுக்கத்திற்கு அடையாளப் பூவாகக் குறிஞ்சிமலர் பயன்பட்டது. இவ்வாறு செயலை ஒரு பூவால் குறிக்கும் பழக்கம் மேலை நாட்டிலும் உண்டு. காதலன் காதலியைப் பிரியுங்கால் "Forget me not" என்னும் மலரைத் தந்து செல்வதாகக் கூறுவர். இவ்வாறு உரிப்பொருள் அடிப்படையில் முல்லை மலருக்கும் முல்லை ஒழுக்கத்திற்கும் இடையே காலப்போக்கில் எழுந்த சிந்தனைகளைக் காணலாம்.

தமிழர்தம் வாழ்வியலில் குறிஞ்சி மலரையும் குறிஞ்சி ஒழுக்கத்தையும் பெண்ணுடன் பொருத்திக் காட்டுவது போலவே முல்லை மலரையும் முல்லை ஒழுக்கத்தையும் நம் முன்னோர் ஒப்பிட்டுக்காட்டுவர். ஒரு பெண் பெதும்பைப் பருவம் கடந்து மங்கைப் பருவமடைதல் அப்பெண் இல்லறநெறியில் ஈடுபடத் தகுதிபெறும் காலமாகும். பொதுவாக ஒரு பெண்ணின் வயது பதினோராண்டு பத்துத் திங்கள் ஆகும்போது பருவமடைவாள் என்பது ஓர் எல்லைக்காலம். அப் பருவத்தில் அவள்தன் வீட்டுத் தோட்டத்தில் ஒரு முல்லைக்கொடியை வைத்து வளர்க்கத் தொடங்குவாள். இது முல்லைநிலத்தவரது மரபாகக் கொள்ளப்பட்டுப் பின் மற்றவராலும் பின்பற்றப்பட்டது. இவ்வாறு நடப்படும் முல்லை இரண்டு திங்களில் தழைத்து வளர்ந்து அரும்புகள் அரும்பும். அரும்பியதன் அடையாளம் அம்முல்லைக்கொடியை வளர்த்த பெண்ணும்பருவமடைந்தாள் என்பதை மற்றவர்க்குத் தெரிவித்து நிற்கும். முல்லை இவ்வாறு அரும்பிப் பூப்பது அவள் பருவமடைந்ததன் அறிவிப்பாயிற்று. முல்லை பூத்தால் அக்கொடியை வாழ்த்துவது மரபு. அம்மரபு பூத்த மங்கையும் பொலிக என வாழ்த்துவதாயிற்று. இக்கருத்துத் திருத்தக்கதேவரின் சீவகசிந்தாமணி எனும் காப்பியத்தில் இடம்பெற்றுள்ளது. அதில் பதுமை என்பவள் மங்கைப்பருவமடைந்து முல்லைக் கொடியை நடுகின்றாள். அம்முல்லை இரண்டு திங்களில் தழைத்துவளர்ந்து முறுவல் செய்வது போன்று அரும்புகின்றது. இதனை,

> புகழ்கொடி தன்பேர் பொறித்தோர் கன்னிமுல்லை
> அகழ்கடல் தானை வேந்தே அணிஎயிறு ஈந்தது (பாடல்.1268)

என்ற பாடல் உணர்த்தும். இவ்வாறு முல்லை அரும்பிப் பூப்பதுகொண்டு ஒரு பெண் பருவமடைவதும் பூப்பு எனப்பட்டது. உரிய வயது வந்தும் பருவமடை

யாதாள் பூவாதாள் எனப்பட்டாள். சிறுபஞ்சமூலம் எனும்நூல்

"பூவாதாள் பூப்புப் புறங்கொடுத்தாள்" (42) என்று குறிப்படுகிறது. பரிபாடலில் வையை ஆறு பல்வேறு பூக்களுடன் பொலிந்து வருவதை இரு-பொருள் பெறும்படி ஆசிரியர் "பூத்தனள் நங்கை பொலிக " எனப் பாடியுள் ளார். இதனைச் சீவகசிந்தாமணி "கொம்பலர் நங்கை பூத்தாள் பொலிக " (1269) என்றது. இவ்வாறு ஓரிளம்பெண் முல்லை வளர்ப்பதையும்; அம்முல்லை அரும் புவதையும் அதற்கும் சேர்த்து முழக்கத்தோடு விழாநிகழ்வதையும் நைடதம் குறிப்படுகின்றது.

அல்லியங் கோதை மாதர்
அன்புடன் வளர்த்த முல்லை
மெல்லரும்பு ஈன்ற தென்னா
விழா . . . . . . . . . .(நைடதம் : நாட்டுப்படலம்.. 18)

இதன் உரையாசிரியர் அதற்கு (முல்லைக்கு) விழாவாவது பருவப்பெண்ணிற்கு முதல் பூப்பிலே செய்யப்படும் சிறப்பை அதன் (முல்லையின்) முதல் பூப்பிலே செய்தல் என்று முல்லைக்கு முதல்பூப்பு விழாவைக் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு தமிழர் முல்லை வளர்த்தலை ஒரு மரபாகக் கொண்டுத் தம்வாழ்வோடு என்றும் தொடர்புடைய ஒன்றாக இணைத்துக் கொண்டதை உணரலாம். இதுமட்டு-மல்லாமல் இக்கருத்தைக் கடவுளர்மேலும் ஏற்றிப்பாடினர். காஞ்சிப்புராணத்தில்,

அன்னை தன்கரத்து
அன்பினால் வளர்த்த மாலதி (முல்லை)யும் (திருக்கண்.167)

என்றும் ;

தக்கயாகப்பரணியில்,

தேவி கொற்றவை கைவிடாது வளர்த்த
முல்லைக்கொடி நூறாயிரம் கிளைவிட்டுத்
தழைத்தது (75)

என்றும் பாடியுள்ளனர்.

சங்க இலக்கியமான முல்லைக்கலியில் ஒரு பாடல் ஏறுதழுவல் நிகழ்ச்சியைச் சித்தரிக்கின்றது. இளைஞன் ஒருவன் தன் ஆற்றல் தோன்றத் தன்காதலிக்குரிய காளையை அடக்கினான். அந்நிலையில் முல்லைமலர் கொண்டு கட்டி இளைஞன் குடுமியில் சூடியிருந்த மாலையைச் சினமிகுதியால் அக்காளைத் தன்கோட்டினால் ஈர்த்து எறிய அம்மாலைப் பரண்மீது அமர்ந்து அவனையே பார்த்துக் கொண்டிருந்த பெண்ணின் கூந்தலில் வீழ்ந்தது. அப்பெண் அதனை எடுத்து ஆர்வமோடு தன் கூந்தலில் சூடிக்கொண்டாள். இதனைக் கண்ணுற்ற அவளது பெற்றோரும் மற்றவரும் இவனே இவள் கணவன் எனத்தமது குலதெய்வமாகிய திருமால் நேர்நின்று காட்டியதாகக் கருதினர்.

.... சென்னிக் குவிமுல்லை
.... அப்பூ வந்து என்
கூழையுள் வீழ்ந்தன்று மன்.
மண்ணி மாசற்ற நின்கூழையுள் ஏறு அவன்
கண்ணி தந்திட்டது எனக்கேட்டுத் திண்ணிதாத்
தெய்வமால் காட்டிற்று இவட்கு என நின்னைஅப்
பொய்யில் பொதுவற்கு அடைசூழ்ந்தார். (கலி : 7)

இந்த முல்லைமலர் திருமணச்சடங்கின் போது மணப்பெண்ணை நெல்லொடு முல்லையுங் கலந்த நீரால் நீராட்டினர் என்ற விடத்தும்; திருமணமான முதல்நாளில் தலைவனும் தலைவியும் துயிலும் சேக்கை முல்லை மலரால் பரப்பபப்பட்டது என்றவிடத்தும் இன்றியமையா ஒன்றாய் இடம்பெற்றுள்ளது புலப்படும்.

“மணம் கமழ்வதில் பெருமைபெற்றது முல்லைமலரேயாம். இம்மணம் ஓர் இன்பக் கிளர்ச்சியை எழப்பவல்லது ; காதல் உணர்வைத் தூண்டுவது ; காமனது கணைகளில் ஒன்று முல்லை ; முல்லை அரும்பும் ; மங்கையும் காதல் அரும்பப்பெறுவாள். அதுபூக்கும் ; அவள் பூப்படைவாள். அது மணக்கும் ; அவளும் மணப்பாள். மணத்தல் என்றால் கூடுதல் என்று பொருள். இருவரையும் கூடவைத்தது முல்லை மலர்தானே. இத்தொடர்பில்தான் அவர்களது வாழ்க்கை இணைப்பு நிகழ்ச்சி மணம் என்று பெயர் பெற்றது. அது வதுவைமணம் ஆயிற்று. அதுகாலப்போக்கில் ‘திரு’ பெற்றுத் திருமணம் ஆயிற்று. எனவே முல்லைமணம் ஈந்த சொல்லே திருமணம்” என்று கவிஞர் இளஞ்சேகரன் குறிப்பிட்டுள்ளார் (இலக்கியம் ஒரு பூக்காடு, ப.162).

அன்பின் ஐந்திணைகளுள் ஒன்றாக முல்லை, ஒழுக்கத்தைக் குறித்து நிற்கும் போது **இருத்தல்** என்னும் பொருளில் அமைகிறது. முல்லை நிலத்துக்காதல் வாழ்வு உணர்த்துவது இருத்தல் என்னும் உரிப்பொருளை. பழந்தமிழ்ச் சமுதாயத்தில் சமூகம் என்ற அமைப்பு அரும்பத்தொடங்கிய நாளில் சேர்ந்து வாழும் போக்கு மெல்லத் தோன்றியது. இந்தச் சேர்க்கை வாழ்க்கை ஓர் அமைப்பாக உருவாகும்வரை இல்லறம் என்ற இன்றியமையாத சமூக அமைப்பு உருவாகவில்லை. தமிழில் குறிஞ்சிச் சமுதாயத்தை அடுத்துத் தோன்றிய முல்லைச் சமுதாயத்தில் இல்லறம் என்ற கற்புநெறி உருப்பெற்றிருத்தல் வேண்டும். இதனைத் தொல்காப்பியர் **இருத்தல்** என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார். ஆகவே இருத்தலை இலக்கணமாகக் கொண்ட முல்லை வாழ்க்கைக்கு மற்ற திணைக்குரிய வாழ்க்கைகளுக்கு இல்லாத சிறப்பும் பெருமையும் உண்டு எனலாம். இருத்தல் என்ற சொல்லும் முல்லை என்ற சொல்லும் ஒன்றை ஒன்று சார்ந்து இரண்டும் ஒருபொருள் பொதிந்த தன்மையில் ஆளப்பட்டுள்ளதைச் சங்க இலக்கியத்தில் காணமுடிகிறது. இதனைப் பத்துப்பாட்டுள் ஒன்றான முல்லைப்பாட்டிற்கு உரையெழுதிய நச்சினார்க்கினியர், "இப்பாட்டிற்கு முல்லை என்று பெயர் கூறினார் ; முல்லை சான்ற கற்புப்பொருந்தியதனால் . இல்லறம் நிகழ்த்துதற்குப் பிரிந்து வருந்துணையும் ஆற்றியிருவென்று கணவன் கூறிய சொல்லைப் பிழையாமல் ஆற்றியிருந்து இல்லறம் நிகழ்த்திய இயற்கை முல்லையாம் என்று இச்செய்யுட்கு நப்பூதனார் பெயர் கூறினமையில் கணவன் வருந்துணையும் ஆற்றியிருந்தாளாகப் பொருள் கூறலே அவர் கருத்தாயிற்று " (முல்லைப்பாட்டு, நச். உரை., பத்துப்பாட்டு, ப. 272) என்று கூறியுள்ளதனின்றும் அறியலாம். மேலும் 'முல்லை சான்ற முல்லையம் புறவு' ; 'முல்லை சான்ற கற்பு' என்ற தொடர்கள் பலயிடங்களில் சங்கப்பாடல்களில் இடம்பெற்றுள்ளன. இருத்தல் பொருந்திய இல்லற ஒழுக்கம் என்று பொருள் கொள்வதே இத்தொடர்களுக்கு அமையும் பொருத்தமான பொருளாகும்.

முல்லைமலர் திருமணமான மகளிரை அடையாளம் காட்டும் குறியீடாகப் பயன்படுத்தப்பட்டமையைப் பேராசிரியர் வ.சுப. மாணிக்கம் தம் ஆய்வில் விளக்கியுள்ளார். அழகிய நெற்றியையுடைய தலைவி முல்லைமலர் சூடித் தன்பக்கத்தே மகனோடு வீற்றிருக்கத் தலைவன் இனிது இருந்தனன் என்று ஐங்குறுநூற்று முல்லைப்பாடல் (4) குறிப்பிடுகிறது.

ஒரு பார்ப்பன வீட்டிலிருக்கும் தலைவி முல்லைமலரைச் சூடிக்கொள்கிறாள். அவள் கணவன் அவள் அருகில் இருக்கின்றான். இதனைச்

சாரளத்தின் வழியே தலைவனைப் பிரிந்திருந்த தலைவி ஒருத்திப் பார்க்கின்றாள். தானும் அந்தப் பார்ப்பனமகளைப் போல் இல்லாமையை நினைந்து வருந்து-கின்றாள். இவ்வாறெல்லாம் நடக்கமென்று பிரிந்துள்ள இடத்தில் தலைவன் நினைத்துப்பார்க்கின்றான். தன் எண்ணத்தைத் தேர்ப்பாகனிடம் கூறி, தலைவி யின் துயர்தீர்க்கத் தேரை விரைந்து ஓட்டுக எனக் கூறுகின்றான் (நற்றிணை : 321).

செந்நிறப் புறவின் புன்மயிர்ப் புருவை
பாடின் தெண்மணித் தோடுதலைப் பெயரக்
கான முல்லைக் கயவாய் அலரி
பார்ப்பன மகளிர் சாரற்புறத்து அணியக்
கல்சுடர் சேருங் கதிர்மாய் மாலைப்
புல்லென் வறுமனை நோக்கி மெல்ல
வருந்துங் கொல்லோ திருந்திழை அரிவை
வல்லைக் கடவுமதி தேரே சென்றிக (நற்: 321)

தான்குறித்துச் சென்ற நாளில் திரும்பிவரும் முல்லைநிலத் தலைவன் ஒருவன் சிறிய மலரையுடைய முல்லையினது பெரிதும் மணம் வீசுகின்ற மலரைத் தானும் சூடினான் ; அவனுடன் வந்த இளைஞரும் சூடினர்.

சிறுவீ முல்லைப் பெரிதுகமழ் அலரி
தானும் சூடினான் இளைஞரும் மலைந்தனர் (நற் : 361)

அகப்பாடல்களில் தலைவனையும் தலைவியையும் இணைத்து மகிழ-வைத்த முல்லைமலர் அவர்களின் பிரிவின் போது, தானும் பிரிந்து நின்று முறுவல் பூப்பதாகச் சங்கப்புலவர்கள் பாடிய பாடல்கள் படித்து இன்புறத்தக்கவை. வினைமேற் செல்லும் தலைவன் கார்காலத் தொடக்கத்தில் வருவேன் என்று கூறிச் செல்வான்

"சிறுவீ முல்லைத் தேங்கமழ் பசுவீ
, தண்புதல் அணிபெற மலர வண்பெயல்
கார்வரு பருவம் என்றனர்" . . . (நற்:248)

கார்காலத் தொடக்கத்தில் முல்லை மலரும். இதனைப் பார்த்ததும் தலைவன் இன்னும் வாராமைகண்டு தலைவி வருந்துவாள். தலைவியின் தனிமை

நினைந்து தலைவனும் வருந்துவான். இவ்வாறு முன்னர் இருவரையும் மகிழ வைத்த முல்லைமலர் அவர்களின் துயர்கண்டு தனித்துநின்று ஏளனப்புன்னகை பூக்கும்.

பெயல்புறந் தந்த பூங்கொடி முல்லை
தொகுமுகை இலங்கெயிறு ஆக
நகுமே தோழி நறுந்தண் காரே (குறுந் : 126)
கார்புறந் தந்த நீருடை வியன்புலத்துப்
பல்லா புகுதரூஉம் புல்லென் மாலை
முல்லை வாழியோ முல்லை நீநின்
சிறுவெண் முகையின் முறுவல் கொண்டனை
நகுவை போலக் காட்டல்
தகுமோ மற்றிது தமியோர் மாட்டே. (குறுந். 362)

இவ்வாறு மக்கள் வாழ்க்கையில் திருமணப்பருவம் எய்தத் தொடங்கும் நாளிலிருந்து ஒவ்வொரு நிலையிலும் முல்லைமலர் தொடர்பு-படுத்திப் பார்க்கப்பட்டது. தலைவன் தலைவியிடையே சிறுபிரிவு நேரும்போது கற்பனையாக் அவர்கள்நிலை கண்டு முல்லை முறுவல் கொண்டதாகப் புலவர்-களால் வருணிக்கப்பட்டது. இப்பெருமைக்குரிய முல்லைமலர் அணியப்படாது விடுக்கப்படும் காலமும் ஆங்காங்கே புலவர்களால் சுட்டப்பட்டுள்ளன. தலைவன் வினைவயின் பிரியும் போது தலைவி விரும்பி மலர் சூடமாட்டாள். மேலும் யாரையாகிலும் இழக்கநேரிடும்போது அவ்வூரிலுள்ள யாருமே மலர் அணியமாட்டார்கள். அதிலும் குறிப்பாக முல்லைமலர் சூடமாட்டார்கள். அதற்கான குறிப்பு புறநானூற்றுப் பாடலொன்றில் காணப்படுகிறது. பெருஞ்-சாத்தன் என்பவன் ஒல்லையூரில் வாழ்ந்தவொரு குறுநிலமன்னன். அவன் போரில் இறந்துபடுகின்றான். அம்மன்னன் மேல் ஆராக்காதலுடைய புலவர் குடவாயில் கீரத்தனார்,

இளையோர் சூடார் வளையோர் கொய்யார்
நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான் பாடினி அணியாள்
ஆண்மை தோன்ற வாடவர்க் கடந்த
வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே. (புறம்.242)

என்று துயரமிகுதியால் பாடியுள்ளார். இப்பாடலால் யார்யார் துன்பக் காலத்தில்

முல்லை சூடார் என்பதையும் அறியமுடிகின்றது.

## முல்லையும் இசையும் :

இசை இன்பத்தால் உயிரினங்கள் அனைத்தும் மயங்கவல்லன. இசை என்னும் வித்து முளைத்தது முல்லைநிலப் பகுதியிலாகும். இந்த இசைக்கு மூலம் இசைக்கருவி. இசைக்கருவியில் முதற் கருவி குழல். அதற்கு வடிவமும் உயிரும் தந்தவன் முல்லை நிலத்து ஆயன். குழல் வழியே கருவியாம் யாழ் எழுந்தது. அதனையும் கண்டு மகிழ்ந்தவன் முல்லைநிலத்தவன். இவற்றால் பண்ணும் பாடலும் தோன்றி வளர்ந்த இடம் முல்லைநிலமே என்பதில் ஐயமில்லை. இதனைப் பத்துப்பாட்டில் ஒன்றான பெரும்பாணாற்றுப்படையில் ஆசிரியர் உருத்திரங்கண்ணனார் முல்லைநில ஆயர் எவ்வாறு குழலும் யாழும் அமைத்து அவற்றில் இனிய பண்களை ஏற்றி இசைத்தனர் என்று அழகாக விளக்குகின்றார். “ஆயன் கன்றுகளை விரும்பும் ஆநிரைகளோடு புல்லுநிறைந்த அகன்ற முல்லைக் காட்டிலே தங்கி, தீக்கடைகோலால் உண்டாக்கிய கடைக்-கொள்ளியாலே துளையிட்ட கரிய துளையினையுடைய குழலால் எழுப்பின மிகவும் இனிய பாலை என்கிற பண்ணைத் தான்வெறுத்தால், குமிழினது உட்பொய்யாகிய கொம்பிடத்தே வளைத்துக் கட்டின மரலின் கயிறாகிய நரம்பி னையுடைய வில்லாகிய யாழினை விரலாலே எறிந்து குறிஞ்சிப்பண்ணை இசைப்ப, அதனைத் தம் சுற்றத்தின் ஒலியாகக் கருதி வண்டுகள் செவிமடுத்துக் கேட்கும்” என்று அருமையாகக் கூறியுள்ளார்.

> . . . . இடையன்
> கன்றமர் நிரையொடு கானத்தல்கி
> அந்நு ணவிர்புகை கமழக் கைமுயன்று
> ஞெலிகோற் கொண்ட பெருவிறல் ஞெகிழிச்
> செந்தீத் தோட்ட கருந்துளைக் குழலின்
> இன்றீம் பாலை முனையிற் குமிழின்
> புழற்கோட்டுத் தொடுத்த மரற்புரி நரம்பின்
> வில்யாழ் இசைக்கும் விரலெறி குறிஞ்சி (பெரும்பாண்.175-182)

இந்த மேற்கோளைக் காட்டி யாழ்நூல் இயற்றிய விபுலானந்த அடிகளாரும் முல்லை நிலத்தவரே இசைக்கருவிகளின் மூலத்தர் என்று குறிப்பிட்டுள்ளார். முல் லை அகப்பொருள் இலக்கணத்தில் தன்நிலத்தாலும் காலத்தாலும் முதலிடம்

பெறுவது போல் ஆதிகலைகளுள் ஒன்றான இசையிலும் முதலிடம் பெறு-கின்றது. பண்வகைகளுள் முல்லைப்பண்ணாம் சாதாரிக்கு உரிய பருவம் கார்காலமும், பொழுது மாலை நேரமுமாகும்.

முல்லைமலர் தன்தாயாம் முல்லைக்கொடியையும் குழலில் பின்னி முல்லையந் தீங்குழல் என்று பெயர் வாங்கிக்கொடுத்தது. குழலின் வளைவாய் இடத்தில் முல்லைக்கொடியை முப்புரியாகத் திரட்டி வளைவாகப் பண்ணிச் செறிப்பர். இது முல்லைக்குழல் என்றும் அழைக்கப்பட்டது.

“முல்லையந் தீங்குழல் கேளாமோ தோழி (சிலம்பு. 17:21) என்று சிலப்பதிகாரம் இசைக்கின்றது. குழல்வழி எழுந்த யாழிலும் முல்லையாழ் உண்டு. இது இசைத்துறையில் அடித்தளம் அமைத்தவற்றில் ஒன்று. இதனையே செவ்வழியாழ் என்பர். பண்ணைத் தெரிக்கும் யாழ் நால்வகைப்படும். அவற்றுள் ஒன்று முல்லையாழ். அது வழங்கும் பண்,

> நோதிறம், பெயர்திறம், சாதாரி முல்லையென
> நாலும் செவ்வழி நல்யாழ் திறனே (பிங்கலநிகண்டு. 1379)

என்றதால் அறியலாம். முல்லை இசைக்கருவியாகவும் பண்ணாகவும் திகழ்வதைக் ‘கொன்றை ஆம்பல் முல்லை என்பனசில (இசைக்கருவி) இனி அவற்றைப் பண் என்று கூறுப எனில் அங்ஙனம் கூறுவாரும் ஆம்பலும் முல்லையுமே பண்-ணாதற்குப் பொருந்தக்கூறின் அல்லது கொன்றை என்றொரு பண் இல்லை ’ (சிலம்பு. 17:20 விளக்கவுரை) என அடியார்க்குநல்லார் சிலப்பதிகாரத்தில் விளக்கியிருப்பது கொண்டும் உணரலாம்.

இவற்றிற்கெல்லாம் சிகரமாக முல்லைத் தன் மணத்தையும் இசையில் கமழச் செய்தது. இசை ஏழிற்கும் எழுவகை மணம் விதிக்கப்பட்டது. அவற்றுள் துத்தம் என்ற இரண்டாவது இசை முல்லை மணத்திற்கு உரியதாகக் கூறுவர். முதல் இசையான குரல் என்பது முல்லையின் இனக்குடும்பத்தைச் சார்ந்த மௌவல் மணம் கமழ்வதாக அமைந்தது. இதனை நிகண்டுகள் யாவும் காட்டுகின்றன.

## முல்லைச்சூட்டு

பழந்தமிழ் மக்களிடையே திருமணச் சடங்கின் போது மணமகளை முல்லை மலரும் நெல்லும் இடப்பெற்ற மங்கலநீரால் நீராட்டும் பழக்கம் காணப்படுகிறது. பின்னர் மலர்களின் அரும்புகளோடு விரவித்தொடுத்த வெள்ளிய காப்புநூலை அணிவிப்பர்.

மென்பூ வாகை புன்புறக் கவட்டிலை
பழங்கன்று கறித்த பயம்பு அமல் அறுகை
மண்ணுமணி யன்ன மாயிதழ்ப் பாவைத்
தண்ணுறு முகையொடு வெண்ணூல் கட்டி (அகம்.136:10-13)

இவ்வாறு மலருடன் பிணைத்து வெண்ணூல் கட்டும் மரபு காலப்போக்கில் முல்லைமலரால் செண்டுபோல் கட்டி நெற்றியில்படுமாறு மணமகளின் தலையில் அணிவிக்கும் பழக்கமேற்பட்டது. இது முல்லைச்சூட்டு என்று போற்றப்பட்டது. ஆனால் இதற்கான குறிப்பு சங்கப்பாடல்களில் இடம்பெறவில்லை. இடைக்கால இலக்கியங்களான பெருங்கதை, சீவகசிந்தாமணி, போன்ற காப்பியங்களில் இம்முல்லைச்சூட்டு தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. முல்லைமலர் கற்பின் குறியீடாகப் போற்றப்பட்டது. அரும்பும் இலையும் இடையிடையே இட்டுக் கட்டிய முல்லைச் சூட்டைக் கற்பிற்கறிகுறியாகச் சூட்டும் மரபு இவற்றால் தெரியவருகிறது. பெருங்கதை ஆசிரியரான கொங்குவேளிர், "முல்லை அம்கோதை சில்சூட்டு அணிந்து" (1:42:149) என்று கூறியுள்ளார். மேலும் இது மங்கல அணியாக அணியப்படுவது மரபு என்பதை, "மங்கல நறுஞ் சூட்டு மரபின் அணிந்து" (3:22:211) என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆசிரியர் திருத்தக்கதேவர் சீவகசிந்தாமணியில் பலயிடங்களில் முல்லைச்சூட்டு அணிவிப்பதைக் கூறியுள்ளதனின்றும் அக்காலத்தில் முல்லைச்சூட்டு அணிவிக்கும் மரபு தவறாமல் மேற்கொள்ளப்பட்டதை உணரமுடிகின்றது. காட்டாக, கந்தருவதத்தையை மங்கல நன்னீராட்டி ஒப்பனை செய்யும் போது,

பண்நிறச் சுரும்பு சூழும்
பனிமுல்லைச் சூட்டு வேய்ந்தார் (624)

என்றும்

சீவகசிந்தாமணிக் காப்பியத்தில் சீவகன் இறுதியாக வீடுபேறு அடை-கின்றான். இதனை ஒரு திருமண நிகழ்ச்சியாகவே ஆசிரியர் விளக்குகின்றார். அதில் மணமகள் கேவலமடந்தை (வீடுபேறு) ஆவாள் ; மணமகன் சீவகன். இங்கு வீடுபேறு என்னும் மணமகளும் முல்லைச்சூட்டு அணிந்ததாகக் குறிப்-பிடுகின்றார். இதனை,

கேவல மடந்தை என்னுங்
கேழ்கிளர் நெடிய வாட்கண்
பூவலர் முல்லைக் கண்ணிப்
பொன்னொரு பாக மாக . . . (3117)
முல்லையஞ் சூட்டு வேயின்
முரிந்துபோ நுசுப்பி னல்லார். . . (3119)

என்றும் ;

இலக்கணையார் இலம்பகத்தில்,
கரும்புந் தேனும் மமிழ்தும் பாலும்
கலந்த தீஞ்சொல் மடவாள்
கரும்பும் மிலையு மயக்கி யாய்ந்த
முல்லைச் சூட்டு மிலைச்சி (2438)

என்றும் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம்.

குலமகளிர் தங்கற்பொழுக்கத்திற்கு அறிகுறியாக முல்லைமலர் சூடுதல் தமிழ்மரபு. இதனை முல்லை சான்ற கற்பின் (சிறுபாண்;30 ) என்றும் ; 'வாணுதல் அரிவை முல்லை மலைய' (ஐங்; 408) என்றும் ; முன்னர் கொற்றவை கன்னியாக இருந்து முல்லை வளர்த்ததையும், வளர்த்தவளுக்கு முல்லைச்சூட்டுச் சூட்டப்-பட்டதை,

'முடிசூட்டு முல்லையோ முதற்கற்பு முல்லையோ (தக்கயாகப்பரணி: 119) என்று ஒட்டக்கூத்தரும் ;

'முல்லையந் தொடை அருந்ததி ' (பிரபுலிங்கலீலை : கைலாய.27) என்றும் ;

'வண்முல்லை சூடுவ் தேநலங் காண்குல மாதருக்கே' (குலோத்துங்க சோழன் கோவை : 168) ; என்றும் ; முல்லைச்சூட்டு அணியும் மரபு தொடர்ந்து வழங்கியதைக் காணமுடிகிறது.

**கற்புமுல்லை**

காடும் காடுசார்ந்த இடமுமான முல்லைநிலம் முல்லைமலரின் இயல்பு மிகுதி தோன்ற அப்பெயர் பெற்றது. இந்த முல்லை அந்நிலமக்களோடு தொடர்புடைய ஒன்றாகச் சிறப்புற்றுப் பின் எல்லா நிலமக்களுக்கும் சிறப்புடைய ஒன்றாகப் போற்றப்பட்டது. அதிலும் முல்லைமலர் மகளிர் வாழ்வோடு பெரிதும் தொடர்புடைய ஒன்றாக அக்காலத்திலிருந்து இக்காலம் வரை புலவர்-களால் ஒப்புமைப்படுத்திப் பாடப்பட்டு வருகிறது. முல்லை வளர்தலும் ஒரு-பெண் வளர்தலும் ; முல்லைப் பூப்பதும் பெண் பருவமடைதலும் ; ஒரு பெண்ணின் முறுவலுக்கு முல்லையின் முறுவலை ஒப்பிட்டும் ; ஒரு பெண்ணின் திருமண நீராட்டில் முல்லைமலர் இடம்பெறதலும் ; கன்னியான ஒரு பெண்தன் கூந்தலிலே முல்லைமலர் சூடினாலே அவள் ஒருவனது மனைவியாகிவிட்டாள் என்று கூறுவதும் ; என்ற அளவிற்கு முல்லை மலரின் மரபு மக்களிடையே வளர்ந்தது. ஒரு பெண் இல்லறநெறியில் சிறப்புற்று விளங்குபவள் என்ற கருத்-தமையப் பாட விழையும் புலவர்கள் முல்லை மலரைக் கற்பின் குறியீடாக்கிப் பாடினர்.

முல்லை சான்ற கற்பின் மெல்லியல் - சிறுபாண் : 30
முல்லை சான்ற கற்பின் குறுமகள் - நற் : 142 ; அகம் : 274

இவ்வாறு பல்வேறு இலக்கியங்கள் ஒரேவகை தொடரால் முல்லையொடு கற்பை இணைத்துப் பாடியுள்ளதைக் காணலாம். இந்தத் தொடருக்கு உரை எழுதி-யவர்கள் 'முல்லை சூடுதற்கு அமைந்த கற்பு' ; 'கற்பின் மிகுதிதோன்ற முல்லை சூடுதல் இயல்பு' என்று பொருள் கூறியுள்ளதைக் காணலாம். இவற்றால் எந்த அளவிற்கு முல்லை கற்பின் சின்னமாகப் போற்றப்பட்டு வந்தது என்பதை அறியலாம்.

இவ்வாறு முல்லை மலரையும் கற்பையும் தொடர்புபடுத்திப் பாடும் மரபு வளர்ந்து பின்னர் முல்லை என்ற சொல்லுக்குக் கற்பு என்று பொருள் கூறு-மளவிற்கு வளர்ந்தது. சீவகசிந்தாமணியில் கட்டியங்காரன் அனங்கமாலை என்பவளைப் புணரும் நெறியறியாது புணர்ந்தான் என்று கூறுமிடத்து ஆசிரியர்,

தானுடை முல்லை யெல்லாம்
தாதுகப் பறித்திட் டானே (686)

என்று பாடியுள்ளார். முல்லைக்கு உள்ள சொற்களுள் 'கற்பு' என்ற சொல்லும் ஆளப்பட்டதை, 'மௌவலும் தளவமும் கற்பும் முல்லை' - என்று சேந்தன் திவாகரம் குறிப்பிடுகின்றது. இவ்வாறு முல்லைமலர் சிறந்தமலர் என்று முதன்மை பெறுவதோடு கற்பின் குறியீடாக வழங்கப்பெறும் பெருமையும் பெற்றது.

## புறத்திணையில் முல்லை

அகப்பொருள் இலக்கணத்தில் முல்லை என்பதைப் போற்றும் தொல்காப்பியர் புறத்திணையில் முல்லை என்ற சொல்லைக் குறியீடாக எங்கும் பயன்படுத்தவில்லை. ஆயின் பிற்காலத்தெழுந்த புறத்திணை இலக்கணத்தில் முல்லை, வாகையின் ஒரு பிரிவாகக் கருதப்பட்டது. பன்னிருபடலம் கணிவன் முல்லை என்ற துறைகூறி முல்லைக் குறியீட்டைப் பயன்படுத்தியுள்ளது. பன்னிருபடலத்தை முதல் நூலகக் கொண்ட புறப்பொருள் வெண்பாமாலை முல்லைக் குறியீட்டை மிகுதியாக ஆள்கின்றது. ஆயின் புறத்திணை இலக்கணத்தில் முல்லை வாகையின் ஒரு கூறாகக் கருதப்பட்டது. ஆதலின் முல்லை, வாகை என்ற இரண்டு சொற்களுக்கும் பொருள் வேறுபாடு உண்டா எனக் காண வேண்டியுள்ளது.

புறப்பொருள் வெண்பாமாலை அரசமுல்லை, அவையமுல்லை ஆகிய இருதுறைகளிலும் 'இயல்புரைத்தன்று' என்ற நடையை ஆள்கின்றது; மூதின் முல்லை, வல்லாண் முல்லை, காவன் முல்லை ஆகிய மூன்றிலும் 'மிகுத்தன்று' என்ற நடையைக் கையாண்டு ஒன்றன் மிகுதியைக் குறிப்பிடுகின்றது. பிற துறைகளில் உரைத்தன்று, புகழ்ந்தன்று என்ற தொடர்களை ஆள்கின்றது. எனவே இயல்புமிகுதி என்ற பொருள் சில துறைகளிலேயே காணப்படுவது புலனாகிறது. வாகைக் குறியீடுபெற்ற துறைகளான அரசவாகையும், அறிவன் வாகையும் இயல்புரைத்தன்று என்ற நடையில் அமைகின்றன. ஆதலின் இயல்புரைத்தன்று என்ற நடை முல்லைக்கு மட்டுமே உரித்தில்லை என்பது புலனாகும். அதுபோலவே முல்லைத் துறைகளின் பாடுபொருள்களில் ஏறாண் முல்லை, வல்லாண் முல்லை என்பன வீரத்தொடர்பின. அவையமுல்லை, கணிவன் முல்லை, குடைமுல்லை, சால்புமுல்லை முதலியன வீரத்தொடர்பு இல்லாதவை. எனவே முல்லைக் குறியீடு ஒரு வரையறுத்த பொருளுக்கேயன்றி, வீரம், வெற்றி, பிறநிலைகள் அனைத்திற்கும் பொதுமையாகின்றது எனக்கருதலாம்.

புறத்திணை நூல்களாகிய புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகியவற்றில் முல்லை எனப்பெயரிய துறைகள் சில காணப்படுகின்றன. காட்டாக, வெற்றி-நிலையில் அரசமுல்லை போன்றவற்றாலும் ; கார்காலச் சிறப்பைக் கார்முல்லை என்றும் ; கற்பின் சிறப்பைக் கற்புமுல்லை என்றும் கூறுவதைக் காணலாம். இவ்-விடங்களில் முல்லை என்ற சொல் புகழ், பெருமை, சிறப்பு, மேம்பாடு போன்ற பொருள்களில் ஆளப்பட்டுள்ளது.

சங்ககால இலக்கியங்களுள் ஒன்றான பதிற்றுப்பத்தில் பெருங்குன்றூர்-கிழார் பாடியுள்ள பாடல் முல்லை என்னும் துறையில் அமைந்துளது. அகத்-திணையைச் சார்ந்த முல்லைப் பட்டல்களில் பாணன் தலைவனிடம் தூதாக வந்து தலைவியின் நிலைகூறி அவளைக்காணப் புறப்பட வேண்டுதாகக் கூறுவதுண்டு. அத்தகைய அகத்திணை அமைப்பைப் புலவர் பெருங்குன்றூர்கிழார் எடுத்துக்-கொண்டு சேரமன்னனைப் புகழ்கின்றார். பதிற்றுப்பத்து (81) முல்லைத் துறை-யில் அமைந்த இப்பாடலில் புலவர் மன்னனைப் பாசறையில் சந்தித்துப் போர்த்தொழில் முடித்து மனைவியைக் காணச் செல்லும்படி வேண்டுவதாக அமைந்துள்ளது.

புறநானூற்றுப் பாடல்களில் வல்லாண் முல்லை, மூதின்முல்லை, ஏறாண் முல்லை, முல்லை, காவல்முல்லை ஆகிய துறைகள் காணப்படுகின்றன. புறத்-திணை முல்லைப்பாடல்களை நோக்கும்போது அவை முல்லைப் பின்னணி-யிலேயே தோன்றியுள்ளமை புலனாகும். காட்டாக, வல்லாண் முல்லைப்-பாடல்களுக்கும் அகத்திணையிலுள்ள முல்லைப் பாடல்களுக்கும் நெருங்கிய ஒற்றுமைக் கூறுகள் காணப்படுகின்றன. 1. குடும்பவாழ்வு சித்தரிக்கப்படல் 2. வேந்தனுக்காகத் தலைவன் போர்செய்யச் செல்லல் 3. மனையோள் சிறப்புப் பேசப்படல் 4. விருந்து பேணுதல் 5. பாணர்மரபு பேசப்படல் ஆகிய ஒற்றுமைகள் உள்ளதால் வல்லாண் முல்லையும் முல்லைப்பாடலும் ஒரே இடத்தில் ஒரே இனத்தில் தோன்றின எனலாம். ஔவையார், கோவூர்கிழார், ஒக்கூர் மாசாத்தியார் போன்றோர் வல்லாண் முல்லை, முல்லைப் பாடல்கள் இரண்டையும் பாடியுள்ளனர். முல்லைப்பாடல்கள் அகம், புறம் இரண்டிலும் ஒரே அமைப்பினைக் கொண்டுள்ளதாகவே கருதயியலுகிறது.

அகப்பொருளில் முல்லை மணத்தில் முடிந்தது. கற்பின் குறியீடாகி இல்லறம் போற்றப்பட்டது. வாழ்வு பெருமையுற்றது. அகவாழ்வின் பெருமைக்-குக் காரணமான முல்லையின் பண்புகள் மக்கள் மனதில் ஆழவேரூன்ற அதன் காரணமாகப் புறத்திணையுள்ளும் முல்லைப் பெயரில் துறைகள் அமைக்கப்-

பட்டன என்று கொள்ளுதலே பொருத்தமாகும். இவ்வாறு முல்லை தமிழர் வாழ்வோடுவொன்றி அகம், புறம் என்ற இருபொருளிலும் இடம்பெறும் பெருமை பெற்றது.

காலப்போக்கில் நான்கு வருணத்தாருக்குரிய மலராக நால்வகை மலர்களைக் குறிக்கும் மரபு ஏற்பட்டது. அவற்றுள் முல்லைமலர் அந்தணர்க்குரியதாகப் போற்றப்பட்டது. இதனைப் பின்வரும் பாடல் உணர்த்திநிற்கும்.

முல்லை அந்தணர் ; குறிஞ்சி அரசன்
மல்லல் மருதம் வாணிக னென்ப
நெய்தல் சூத்திரன் ; நினையுங் காலைப்
பல்குலம் என்ப பாலை யானே.

(யாப்பருங்கல விருத்தி, ஒழிபியல், நூற்பா.2. எடுத்துக்காட்டு).

# இயல் - இரண்டு
## முல்லை - உரிப்பொருள்

தமிழ் இலக்கண நூல்கள் இலக்கியக் கொள்கைகளை ஒரு பிரிவாகக்-கொண்டு விளங்குவதைத் தொன்மை வாய்ந்த தொல்காப்பியம் தொடங்கிப்-பிற்கால இலக்கண நூல்கள்வரை காணலாம். எழுத்து, சொல், பொருள் என முப்பிரிவுகளாக அமைந்த நிலையில் எழுத்தின் இலக்கணம் அடிப்-படையாகவும், சொல்லின் இலக்கணம் எழுத்தின் வளர்ச்சியாகவும், சொற்களால் இயற்றப்படும் இலக்கியங்களைப் பற்றிய இலக்கணம் பொருளாகவும் கொள்ளப்பட்டன. சிறந்த புலவரொருவரால் இயற்றப்படும் செய்யுளுக்கு வேண்டியனவாக முப்பத்தினான்கு உறுப்புகளைச் செய்யுளியலின் முதல் நூற்பாவில் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார்.

மாத்திரை எழுத்தியல் அசைவகை எனாஅ
.. .. .. ..
திணையே கைகோள் பொருள்வகை எனாஅ
.. .. .. ..
நல்லிசைப் புலவர் செய்யுள் உறுப்பென
வல்லிதிற் கூறி வகுத்துரைத் தனரே (செய்: 1)

என்று தொல்காப்பியரால் கூறப்படும் செய்யுள் உறுப்புகளுள் பொருள் சார்ந்த திணைச் செய்திகள் அகத்திணை, புறத்திணை என இருயியல்களாகவும் ; கைகோள் என்பது களவியல், கற்பியல் என இருயியல்களாகவும் ; பொருள் என்பது பொருளியலாகவும் ஐந்து இயல்களில் விரிவாகக் கூறப்படுகின்றன. இலக்கியத்தில் மரபு என்பது இன்றியமையாத ஒரு கூறாகும். உலகவழக்காகிய சமுதாயமரபு இலக்கியத்தின் அடிப்படையாக அமைகிறது. 'வழக்குவழிப்-படுதல் செய்யுட்குக் கடனே' (தொல்.பொருளியல்.21) என்பர் தொல்காப்பியர்.

இவ்வாறு இலக்கியங்களில் பயின்றுவரும் வழக்குகளை நெறிப்-படுத்தி இலக்கியக் கொள்கைகளாகக் கூறப்பெறுகின்றன.

பாடலுட் பயின்றவை நாடுங்காலை . . .
பாடல் சான்ற புலனெறி வழக்கம் (தொல்.அகத்திணை.53)

என்ற தொல்காப்பிய அடிகள் மூலம் இலக்கியத்திலிருந்தே அதன் கொள்கைகள் பெறப்படுகின்றன என்பதை அறியமுடிகிறது.

## தொல்காப்பியப் பொருளதிகாரம்

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் மக்களின் மன இயல்பாகிய அகமும், வீரமும், சுவைகளும், உவமங்களும், பாவின் பண்புகளும், மரபு-முறை முதலியயாவும் ஒருங்கே முற்றமுடிய எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. அவற்றுள் அகத்திணையியல் காதலர்கள் வாழ்க்கைத் தொடங்கும் நிலப்பாகுபாடு, முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள்களை எடுத்துக்காட்டும் விளக்க நூலாய் நிலநூல் என்று கருதுமளவிற்கு உள்ளது எனலாம். இந்த அகப்பொருள் என்பது 'பெரும்பொருள்' எனச் சிறப்பிக்கப்படுகிறது. நம்பியகப்பொருள் பாயிரம்,

" தொல்காப் பியனருள் ஒல்காப் பெரும்பொருள்
அகப்பொருள் இலக்கணம் " - என்று கூறுவதாலும்,

நம்பியகப் பொருள் 251- ஆம் நூற்பா உரையில்,

'பெரும்பொருளகத்து உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே' என்று உரைப்பதாலும் அறிந்து கொள்ளலாம். மேலும் தொல்காப்பியரே பொருளியலில் (நூற்பா.23) மிக்க பொருள் என்பார். அதற்கு உரையாசிரியர் இளம்பூரணர் மிக்கபொருள் என்றது அகப்பொருள் என்று விளக்கம் கூறுவர்.

தமிழ்மொழியில் மட்டுமே அகம், புறம் என்னும் இருதிணைப் பொருள் பொதிந்த பாகுபாடு காணப்படுகிறது. தமிழ்மக்கள் பொருளை அகம், புறம் எனப் பகுத்து இவ்விரு பிரிவினுள் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு உறுதிப் பொருள்களையும் அடக்கினர். அவற்றுள் இன்பம் அகப்பொருளிலும், மற்றவை புறப்பொருளிலும் அடங்குவன. இவ்விருவகை ஒழுக்கங்களில் அகவொழுக்கம் வாழ்க்கைக்கு அடிப்படையாய் அமைந்து மகிழ்ச்சியைத் தருவது. புறவொழுக்கம் அகவாழ்க்கைக்குத் துணையாவது. உலகில் உயிர்களின் தோற்றத்திற்கும் அகவொழுக்கம் காரணமாவது. இதனைத் தொல்-காப்பியர்,

எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தான் அமர்ந்து வரூஉம் மேவற் றாகும் (பொருளியல்: 27)

என்ற நூற்பாவின் வழி கூறியுள்ளார்.

அகத்திணை வடித்துக்காட்டும் காதற்பாங்கு அன்பின் ஐந்திணை எனப்பட்டது. ஐந்திணைநெறி குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்ற ஐவகை நிலங்களில் நிகழ்வதாகச் சான்றோர் செய்யுள் இயற்றுவது மரபு. ஒருவகையான் உலகத்துப் பொருள்களை எல்லாம் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூவகையாக்கி, ஐந்திணை நெறியளாவிய பாடல்களில் இம்முப்பொருள்களும் உடையனவாய் அமைக்கப்பட்டன. திணைக்குரிய நிலமும் பெரும் பொழுதும், சிறு பொழுதும் முதற்பொருள் ஆவன. அவ்வந்நிலங்களில் தோன்றி வளரும் உயிரினங்கள், உணவு, தொழில் போன்றன கருப்பொருள்களாவன. நேரசைக்கும் நிரையசைக்கும் உரிய அசைகள் உரியசை என்றும் ; வெண்பா முதலிய பாக்களுக்கு உரியசீர் உரிச்சீர் என்றும் கூறப்படுவது போன்று குறிஞ்சி முதலிய நிலங்களுக்கு உரிமைப்படுத்தப்பட்ட பொருள்கள் (ஒழுக்கங்கள்) உரிப்பொருள்கள் எனப்பட்டன.

இந்த ஐந்திணை ஒழுகலாறுகள் எல்லா நிலத்தும் எல்லாக்காலத்தும் நிகழ்வதற்கு உரியனவே எனினும் இவை ஒவ்வொன்றும் சிறப்புரிமை உடைய நிலமும் பொழுதும் கருப்பொருளும் துணையாக மேம்பட்டுத் தோன்றுமெனத் தமிழ்ப்பொருளிலக்கண ஆசிரியர்கள் பண்டைக்காலத்தே தமது நுண்ணுணர்வால் ஆராய்ந்தறிந்து இலக்கணம் வகுத்துள்ளனர்.

கதிரவனிலிருந்து சிதறி வீழ்ந்த ஒரு நெருப்புக்கோளமே நிலவுலகம் என்பர் நிலநூல் வல்லார். அதில் முதலில் தோன்றிய (பாறை) மலை, அம்மலையைச் சார்ந்து அமைந்த மண்பகுதியில் தோன்றிய காடு, மலையினின்றும் தோன்றிய ஆறுகளின் வாய்க்கால்களால் வளம்பெற்ற வயல், ஆறுகள் முடிவிற் சென்று கலந்த கடல் என்று இயற்கைத் தன்மைகளை அடிப்படையாக வைத்தே பண்டைத் தமிழ்ச் சான்றோர் முறையே மலை (குறிஞ்சி), காடு (முல்லை) வயல் (மருதம்) கடல் (நெய்தல்) என நிலப்பாகுபாடு செய்தனர். மலையும் காடும் வெப்பத்தால் தம் இயல்பு அழிந்து மாறும் வறண்ட நிலப்பகுதி பாலை எனப்பட்டது. எனவே இதனைத் தனிநிலமாகக் கருதாது நிலம் நானிலமாகவே கொள்ளப்பட்டது.

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்

வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே.
(தொல்.அகத்.5)

இந்த முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற நானிலங்களுடன் வறண்ட நிலப்பகுதியான பாலை என்பதும் சேர்ந்து அகப்பாடல்களில் அன்பின் ஐந்திணை எனப்பட்டது. இந்த ஐந்திணைகளுக்குரிய ஒழுக்கத்தை அல்லது உரிப்-பொருளைத் தொல்காப்பியர்

புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே.
(தொல்.அகத்.14)

என்றார். என்றாலும் இந்நூற்பாவிலோ வேறு இடத்திலோ குறிஞ்சிக்குப் புணர்-தலும்; பாலைக்குப் பிரிதலும் ; முல்லைக்கு இருத்தலும் ; மருதத்திற்கு ஊடலும் ; நெய்தலுக்கு இரங்கலும் உரிப்பொருளாம் என்று வலியுறுத்திக் கூறவில்லை என்பது கருதத்தக்கது. இந்நூற்பாவிற்கு உரை எழுதிய உரையாசிரியர்களும் தேருங்காலை என்றதனால் குறிஞ்சிக்குப் புணர்ச்சியும், பாலைக்குப் பிரிதலும் அவ்வந்நிமித்தங்களும் உரித்தென்று ஆராய்ந்துணர்க என்று கூறியிருந்தாலும் அவ்வமைப்பிற்கு உரிய பொருத்தமான காரணம் என்ன என்பதை அறிந்து கொள்வது அரிதாகவே உள்ளது. ஐந்திணைகளுள் முல்லைத் திணைக்கு உரிப்-பொருளாகக் கூறப்பட்ட இருத்தல் ஒழுக்கும் குறித்துக் காண்போம்.

## முல்லை பெயர்க்காரணம்

"கைக்கிளை முதலாப் பெருந்திணையிறுவாய்" என ஒழுக்கங் குறித்த தொல்காப்பியர் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்பன உலகத்தைக் குறித்தன என 'மாயோன்மேய' என்ற நூற்பாவில் குறிப்பிடுகின்றார். எனவே முல்லை குறிஞ்சி முதலியன ஒழுக்கம், நிலம் என்னும் இரண்டையும் குறித்தன என்பது புலனாகும். அப்படியெனில் முல்லை குறிஞ்சி என்பவை முதலில் ஒழுக்கம் குறித்தனவா அல்லது நிலம் குறித்தனவா என்ற எண்ணம் எழும்.

இச்சொற்கள் முதலில் ஒழுக்கம் குறித்து எழுந்தன என்று கொண்டால் பின்னர் அவை ஆகுபெயராய் நிலத்தையும், பின்னர் நிலத்திலுள்ள பொருளையும் குறித் தனவாகக் கொள்ளல் வேண்டும். திணை என்ற சொல் நிலம், கருப்பொருள், ஒழுக்கம் என்ற மூன்றையும் குறிப்பது.

அன்பின் ஐந்திணைகளான முல்லை, குறிஞ்சி என்ற பெயர்கள் அவ்-வந்நிலத்திற்குரிய பூக்களால் பெயர்பெற்றன என்று ஒருசாராரும் ; அவ்வந்நிலத் திற்குரிய ஒழுக்கங்களால் பெயர்பெற்றன என்று ஒருசிலரும் விளக்கங் கூறியுள் ளனர் . இது வித்திலிருந்து மரமா அல்லது மரத்திலிருந்து வித்தா என்று வினா-விற்கு விடைகாண்பது போலாகின்றது. தொல்காப்பியத்தின் முதல் உரை-யாசிரியரான இளம்பூரணர் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்னும் மலர்-களின் பெயரே அவை குறிக்கும் ஒழுக்கங்கட்கும் பெயராயின என்றார். மலரின் பெயரே ஒழுக்கத்தைக் குறித்து நின்றது என்ற தமது கருத்தை இளம்பூரணர் பின் வருமாறு கூறியுள்ளார்.

“முல்லை குறிஞ்சி என்பன இடுகுறியோ, காரணக்குறியோ எனின், ஏகதேச காரணம் பற்றி முதலாசிரியர் இட்டதோர் குறி என்று கொள்ளப்படும். என்னை காரணம் எனின் ,

நெல்லொடு,
நாழிகொண்ட நறுவீ முல்லை
அரும்பவிழ் அலரி தூஉய் . . . (முல்லைப்பாட்டு : 180)

என்றமையால் காடுறை உலகிற்கு முல்லைப்பூ சிறந்தது ஆகலானும்,

கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே (குறுந்.3)

என்றவழி மைவரை உலகிற்குக் குறிஞ்சிப்பூ சிறந்தது ஆகலானும்,

இறாஅல் அருந்திய சிறுசிரல் மருதின்
தாழ்சினை உறங்குந் தண்துறை ஊர (அகம்.286)

என்றவழி, தீம்புனல் உலகிற்கு மருது சிறந்தமையானும்,

பாசடை நிவந்த கணைக்கால் நெய்தல்
இனமீன் இருங்கழி ஓதம் மல்குதொறும் (குறுந்.9)

என்றவழி, பெருமணல் உலகிற்கு நெய்தல் சிறந்தமையானும் இந்நிலங்களை இவ்வாறு குறிப்பிட்டார் என்று கொள்ளப்படும்.

பாலை என்பதற்கு நிலம் இன்றேனும், வேனிற்காலம் பற்றி வருதலின் அக்காலத்துத் தளிரும் சினையும் வாடுதலின்றி நிற்பது பாலை என்பதோர் மரம் உண்டாகலின், அச்சிறப்பு நோக்கிப் பாலை என்று குறிப்பிட்டார்." (இளம். உரை. ப. 10) இவ்வாறு இளம்பூரணர் அவ்வந்நிலத்துச் சிறந்து விளங்கிய கருப்பொருள் காரணமாக அவ்வந்நிலங்களின் பெயர் அமைந்தன என்றார்.

மற்றொரு அகப்பொருள் இலக்கணமான இறையனார் களவியல் உரையில், குறிஞ்சி, முல்லை முதலியன ஒழுக்கங்களின் பெயரென்றும் பின்னர் அவை முறையே நிலங்கட்கும் அந்நிலத்துப் பூக்களுக்கும் பெயராயின என்றும் கூறப்பட்டுள்ளது. 'ஒழுக்கமே திணை எனப்படும். குறிஞ்சியாகிய ஒழுக்கம் நிகழ்ந்த நிலமும் குறிஞ்சி எனப்பட்டது. என்னை, விளக்காகிய சுடர் இருந்த இடனும் விளக்கு எனப்பட்டது போல" என்பது இறையனார் களவியலுரை கூறுவதாகும்.

முல்லை குறிஞ்சி முதலியன முதலில் ஒழுக்கத்தை உணர்த்தும் பெயராய் அமைந்து, பின்னர் அவ்வொழுக்கம் நிகழும் நிலத்தையும், அந்நிலத்து மலரையும் குறித்தன என்று சிலர் விளக்கந்தருவர். குறிஞ்சி, முல்லை என்ற சொற்கள் முதலில் ஒழுக்கத்தைச் சுட்டிய பெயர்கள் என்பதை அவற்றின் பொருளே உணர்த்துவன. காட்டாக, குறிஞ்சி என்பது குறு+ஞ்+சி எனவரும். இதன்பொருள் குறுகுதல், நெருங்குதல், சேர்தல், அடைதல் எனவரும். தலைவியைத் தலைவன் கண்ணுற்று அணுகி நட்புறுதலே (குறுகுதலே) குறிஞ்சி என்ற ஒழுக்கப் பெயராயிற்று. இவ்வாறு ஒழுக்கத்தின் வழித்தோன்றிய குறிஞ்சி என்னும் பெயர் பின்னர்ப் புணர்தல் நிகழ்வதற்குச் சிறந்து விளங்கிய மலைக்கும் மலைசார்ந்த இடத்திற்கும் பெயராய் அமைந்து, பின்னர் அவ்விடத்துத் தோன்றிய மலருக்கும் பெயராயிற்று.

அதுபோல முல்லை என்பது இயல்புமிகுதி என்ற பொருளில் வரும். புறப்பொருள் வெண்பாமாலையில் வரும் ஏறாண்முல்லை, அரசமுல்லை போன்ற துறைகள் ஒன்றன் இயல்புமிகுதியை எடுத்தரைப்பனவாக உள்ளன.

அரசனது இயல்பை மிகுத்துக் கூறுதல் அரசமுல்லை எனப்படும். முல்லை என்ற சொல் அகப்பொருள் புறப்பொருள் இரண்டிலும் இயல்புமிகுதி என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வினைவழிப் பிரிந்துமீளும் தலைவனுடைய திறமெல்லாம் இல்லிருக்கும் தலைவி நினைக்கின்றாள். அவ்வாறு அவள் நினைக்கும் தன்மையை மிகுதிப்படுத்தலே முல்லையாகும். தலைவன் வினைமுடிந்து மீளுங்கால் தலைவியை நினைப்பான். இவர்களின் இன்ப நினைவை மிகுதிப்படுத்தற்கு உதவியாகக் கார்காலமும் மாலைப்பொழுதும் கானமும் விளங்கும். இத்தகைய இன்பகாலம் பிரிந்து இணைய நினைக்கும் தலைமக்களின் இன்ப உணர்வை மிகுதிப்படுத்துகிறது. ஆகவே இருவர்க்கும் காமக்குறிப்பு கழிபெரும் உவகையில் நிலவுவதால் முல்லை எனக்காரணப் பெயராயிற்று. இவ்வொழுக்கத்தின் பெயர் முறையே அது நிகழும் நிலத்திற்கும், அந்நிலத்து மலருக்கும் பெயராயிற்று என்பர். ஆனால் கருப்பொருளான மலரால் முறையே அம்மலருள்ள நிலத்திற்கும், ஒழுக்கத்திற்கும் பெயராயிற்று என்பது இளம்பூரணரின் கருத்தாகும்.

இனி ஒரு நிலத்தில் எத்தனையோ வகையான மலர்கள் இருக்க, முல்லை, குறிஞ்சி முதலிய மலர்களால் பெயர்பெற்றன இவ்வொழுக்கங்களெனின், அவ்வந்நிலங்களிலுள்ள ஏனைப் பூக்களும் பெயர்கூறுதலுக்கு உரியனவே என்று கேட்பவர்களுக்கு விடையின்மை உணர்க என்று நச்சினார்க்கினியர் கூறுவர். மேலும் குறிஞ்சிப் பூவிற்கு அப்பெயர் காரணப்பெயரா இடுகுறியா என்றும் இதுவரை யாரும் விளக்கந்தரவில்லை.

மேலும் வெட்சி, வஞ்சி, வாகை, உழிஞை, தும்பை என்பனவும் முறையே குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம், நெய்தல் என்ற நிலங்களுக்கு உரிய பொருள்கள் அல்லவா ? அவற்றையும் அவ்வந்நிலச் சொல்லால் குறிக்காமல் குறிப்பாகப் புணர்தல், இருத்தல், பிரிதல், ஊடல், இரங்கல் என்ற உரிப்பொருள்களை மட்டும் குறிக்கக் குறிஞ்சி முல்லை பாலை மருதம் நெய்தல் என்ற சொற்களால் குறிக்கப்பட்டனவே என்ற ஐயம் எழலாம். ஆனால் அகப்பொருளுக்குரிய அன்பின் ஐந்திணையை மட்டும் உணர்த்துவதற்கு இலக்கண நூலார் இவற்றைக் குறியீடாகக் கொண்டனர் என்பதே பொருத்தமாகும். புணர்தல் பிரிதல் ஆகிய அகவொழுக்கங்களுக்கும் நிலத்துக்கும் தொடர்பு உள்ளது என்பது நிலநூல், உடல்நூல், உளநூல் ஆகியவற்றின் துணைகொண்டு ஆராய்ந்த

அறிஞர்கள் கண்டதொரு முடிவாகும்.

ஒருபொருளின் மிகுதிபற்றி நிலத்துக்குப் பெயர் அமைந்தது என்பது போல, குறிப்பிட்ட ஓர் ஒழுக்கம் பெரும்பான்மை நிகழ்வதற்கு ஏற்ற இடம் என்ற சிறப்புநிலையில் ஒவ்வொரு ஒழுக்கமும் ஒவ்வொரு நிலத்திற்கு உரியதாகக் குறிப்பிடப்பட்டதாகக் கொள்ளலாம். மேற்கூறியவற்றால் திணை என்னும் சொல்லும், குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம் , நெய்தல் என்னும் சிறப்புச் சொற்களும் முதலில் பொருள் குறித்துப் பின்னர் நிலத்துக்கும், ஒழுக்கத்துக்கும் பெயராயின என்பதே பொருத்தமாகும். அதிலும் குறிஞ்சி, முல்லை முதலிய சொற்களை அன்பின் ஒழுக்கம் குறிப்பதற்கே குறியீடாக இலக்கண நூலாரால் ஆளப்பட்டது என்பது முந்தையோர் கொள்கையாகும்.

## கைகோள்

இது தொல்காப்பியரால் கூறப்படும் செய்யுள் உறுப்புகளுள் ஒன்றாகும். கைகோள் என்பது ஒழுக்கங்கோடலாகும். இது களவு கற்பு என இருவகைப்படும். அவற்றுள் களவாவது, அன்பு, அறிவு, அழகு, குடிபிறப்பு முதலியவற்றால் ஒத்து விளங்கும் தலைவனும் தலைவியும் நல்லூழின் செயலால் பிறர் கொடுப்பவும், அடுப்பவுமின்றித் தாமே எதிர்ப்பட்டு உலகத்தார் அறியாது மறைந் தொழுகுதலாகும். அறநிலை வழுவாமல் ஒத்த அன்புடைய ஒருவனும் ஒருத்தியும் தமது நெஞ்சக்கலப்பினைப் பிறர் அறியாதபடி மறைந்து ஒழிகினராதலின் கரந்த உள்ளத்தாராகிய அவ்விருவரது ஒழுகலாறு களவு என்ற சொல்லால் வழங்கப்பட்டது. இக்களவொழுக்கத்தை மறைந்த ஒழுக்கம். மறை, அருமறை என்ற சொற்களால் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். கைகோள் வகையில் களவு இன்னது என்பதை ,

> காமப் புணர்ச்சியும் இடந்தலைப் படலும்
> பாங்கொடு தழாஅலுந் தோழியிற் புணர்வுமென்
> றாங்கநால் வகையினும் அடைந்த சார்வொடு
> மறையென மொழிதல் மறையோர் ஆறே (செய்யுளியல் :178)

என்பர் தொல்காப்பியர். அதாவது ஒத்தார் இருவர் கூடுங்கூட்டம்; இயற்கைப்புணர்ச்சி புணர்ந்த தலைமகன் பிற்றை ஞான்றும் அவ்விடத்துச் சென்று எதிர்ப்படுதல் ; இப்புணர்ச்சி பாங்கனுக்கு உரைத்துப்பின் அவனது உதவியால்

தலைவியைச் சென்று கூடுதல்; பின்னர் இக்கூட்டம் நீடச்சேறல் வேண்டித் தோழியை இரந்து பின்னின்று அவள் வாயிலாகக் கூடுதல் என்ற நான்கு வகை யானும் அவற்றைச் சார்ந்து வருகின்ற கிளவியானும் வருவனவற்றைக் களவு என்ற சொல்லால் குறிப்பிடாது **மறை** என்றதனால் இது தீமை பயக்கும் களவன்று என்பது புலனாகும். இக்களவொழுக்கத்தினைத் தொல்காப்பியர் ஆரியரது எண்வகை மணங்களுள் காந்தருவத்தின் இயல்பினதாகும் என்றார்.

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்
கன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கில்
காமக் கூட்டம் காணுங் காலை
மறைஓர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்லியாழ்த் துணைமையோர் இயல்பே.
(களவியல் : 1)

கந்தர்வர்களில் ஒருவனும் ஒருத்தியும் எதிர்ப்பட்டஎவில் வேட்கை மிகுதியால் கூடிப்பின் அன்பின்றிப் பிரிந்து செல்லும் போக்கும் அவ்வகை மணத்திற்கு உண்டு. ஆனால் தமிழரின் களவொழுக்கமோ ஒருவரை ஒருவர் பிரிதலின்றி உலகோர் அறிய மணந்த இல்லறவாழ்வெனும் கற்புநெறியை மேற்கொள்வதாய் முடியும்.

களவில் இன்புற்ற காதலர்கள் சுற்றமும் நட்பும் அறியத் திருமணம் செய்து கொண்டுதான் இல்லறம் நடத்த வேண்டுமென்பது பண்டைத் தமிழரின் கொள்கை. எனினும் அக்காலச் சமுதாயத்தில் நடந்த எல்லாத் திருமணங்களும் களவொழுக்கம் நிகழ்ந்தபின் நடந்தவை என்று கருதுவதும் முற்றிலும் பொருந்-தாது. களவுமணம் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாக இருந்திருந் தால் அன்பால் ஒன்றுபட்ட தலைவனும் தலைவியும் மறைந்து ஒழுகவேண்டியி ராது. களவினைப் பற்றி அம்பலும் அலரும் தோன்றியிராது. தலைவி மணப்-பருவம் எய்தும் போது இற்செறிக்கப் பட்டிருக்கமாட்டாள். தலைவி பிறர் அறியாது தலைவனுடன் சென்றிருக்கமாட்டாள். அப்படியே களவொழுக்கத்தில் ஈடுபட்டாலும் தனது களவு வெளிப்படாது திருமணம் நடைபெறுதலையே தலை வியின் விருப்பமாய் அமைதலைக் காணமுடிகிறது. அதற்குரிய முதல் முயற்சியாக அமைவது வரைவுகடாதல் என்பது. இத்துறையமைந்த பாடல்கள் பல சங்ககால இலக்கியங்களில் உள்ளன. காட்டாக, வரைவு கடாவப்பட்ட தலைவன் ஒருவன் வரைவொடு வந்தமையும், சுற்றத்தினர் அவனுக்கே

தலைவியை நேர்ந்தமையுங் கண்டு தோழி மகிழ்வதாக கலித்தொகையில் பின்வருமாறு ஒரு பாடல் அமைந்துளது.

நன்றா கின்றால் தோழிநம் வள்ளையுள்
ஒன்றிநாம் பாட மறைநின்று கேட்டருளி
மென்றோட் கிழவனும் வந்தனன் நுந்தையும்
மன்றல் வேங்கைக் கீழிருந்து
மணநயந் தனன்நம் மலைகிழ வோற்கே (கலி :41)

இப்பாடல் களவு வெளிப்படாமல் வரைவு நேர்ந்தமைக்கு மகிழ்ந்து கூறியதாகும்.

சிலநேரங்களில் தலைவி தன்சுற்றத்தினரிடம் தோழியின் வாயிலாகக் களவினை வெளிப்படுத்தித் தன்களவுத் தலைவனோடு தன்மை வரைவினால் இணைக்கும் முயற்சியில் ஈடுபடுவதுண்டு. அது அறத்தொடுநிற்றல் என்ற துறையாகப் போற்றப்பட்டது. இவற்றில் தோழியின் கூற்று மிக்க நாவன்மையுடன் அமைந்து தலைவியின் களவுத்தலைவனைப் பெற்றோர் ஏற்றுக்கொள்ளுமாறு செய்கிறது. 'களவே ஆயினும் உன்மகள் கற்புக்கடம் பூண்டாள். எனவே அவனுக்கே மணம் செய்யாவிடில் இறப்புவரை இத்துன்பத்தைப் பொறுத்துக்கொள்வாளே தவிர, வேறோர் மணத்திற்கு அவள் உடன்படமாட்டாள். அறவழிப்பட்ட கற்பினைச் சான்றோரும் போற்றுவரன்றோ ?' என்று தலைவியின் நிலையைத் தோழி செவிலிக்கு உணர்த்துவாள். மேலும் தோழி செவிலியிடம் 'உன் மகளால் விரும்பப்பட்டவன் உருவத்தில் மட்டுமல்ல ; உள்ளத்தாலும் அழகன். உன்மகளே தன்மனைவி என்று அவளை விரும்பிய அன்றே கூறியவன்'.

அறம்புணை யாகத் தேற்றிப் பிறங்குமலை
மீமிசைக் கடவுள் வாழ்த்திக் கைதொழு
தேமுறு வஞ்சினம் வாய்மையிற் றேற்றி
அந்தீந் தெண்ணீர் குடித்தலின் . . .
(குறிஞ்சிப்பாட்டு :208.11)

என்று தலைவனது உயரிய பண்புகளைத் தோழி கூறுகின்றாள். மேலும் 'விருந்தினர் உண்டு எஞ்சிய உணவை உன்னோடு சேர்ந்து உண்பேன் ; இதுவே நாம் கடைப்பிடிக்க வேண்டிய உயர்ந்த அறம்' என்று கூறும் தலைவன்.

நேர்இறை முன்கை பற்றி நுமர்தர

நாடறி நன்மணம் அயர்கம் ; சிலநாள்
கலங்கல் ஓம்புமின் இலங்கிழையீர்
(குறிஞ்சிப்பாட்டு 231-33)

என்றும் கூறுவதனின்றும் தலைவியும் தலைவனும் களவில் ஈடுபட்டாலும் நாடறி நன்மணம் புரிதலையே விரும்பிய சமுதாய அமைப்பை உணர-முடிகிறது.

களவில் உறவுகொண்ட தலைமக்கள் நாடறி நன்மணம் புரிதலை விரும்புவது போலவே இவர்களது பெற்றோரும் தம்மக்கள் களவுமணம் மேற் கொண்டாலும் உடனே உலகத்தார் அறிய நன்மணம் செய்துவைக்கவே விருப்ப முடையவர்களாகக் காட்டப்பட்டுள்ளனர். தங்கள் காதலுக்குத் தடை ஏற்படும் போது தலைவி தலைவனுடன் சென்றுவிடுவாள். இந்த உடன்போக்கி னைத் தலைமக்கள் மேற்கொண்ட பின்னரும் தன்மகளின் நாடறி நன்மணம் தன்னில்லத்தில் நடைபெற வேண்டுமென விரும்புகின்றது தாயுள்ளம்.

நும்மனைச் சிலம்பு கழீஇ யயரினும்
எம்மனை வதுவை நன்மணம் கழிகென
சொல்லின் எவனோ மற்றே வென்வேல்
மையற விளங்கிய கழலடிப்
பொய்வல் காளையை யீன்ற தாய்க்கே (ஐங்.399)

எல்லா உயிர்களுக்கும் இன்பம் என்பது பொதுவானது. அவ்வகயின் பம் ஒழுக்கத்தின் அடிப்படையில் அமையவேண்டும் என்பதே பழங்காலந்-தொட்டு மக்களின் உயர்ந்த உணர்வாக இருந்துவருவதைக் காணமுடிகிறது. தலை மக்களின் களவுக் காலத்தில் நிகழ்வதாகக் கூறப்படும் வரைவுகடாதல், அறத்-தொடுநிற்றல், அம்பல், அலர், இற்செறிப்பு போன்றவை களவுமணத்திற்குச் சமுதாயத்தில் அவ்வளவாக வரவேற்பு இல்லை என்பதைக் காட்டுகின்றன. கள வுத்தலைவனே முறையாகத் தலைவியை மணம்புரிய வரும்போது சமுதாயம் அவனை வரவேற்கிறது.

மக்களின் அகவொழுக்கம் களவு கற்பு என இருகூறுகளாவன. நாடறி நன்மணம் எனப் போற்றப்படும் கற்பியலுக்கு நெறிப்படுத்துவது கள வொழுக்கம். கற்பென்பது நல்வாழ்வு என்றால் அக்கற்பினை அடைவதற்குரிய ஒரு நன்னெறியே களவாகும். இதனை

மாமயில் அன்னார் மறையிற் புணர்மைந்தர்

காமம் களவிட்டுக் கைகொள் கற்புற்றென (11:41-2)

எனப் பரிபாடலில் நல்லந்துவனார் காட்டுவர்.

இவ்வாறு மக்களது வாழ்வில் இயல்பாக அமையும் களவு என்னும் ஒழுக்கத்திற்கு இலக்கணம் வகுத்தத் தொல்காப்பியர், நாடறி நன்மணம் எனப் போற்றப்பட்ட 'கற்பு' எனும் ஒழுக்கத்திற்கும் இலக்கணம் வகுத்துள்ளார். கற்பு என்றால் என்ன என்பதை

கற்பெனப் படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபில் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்கொள் வதுவே
(கற்.1)

என்றார் தொல்காப்பியர். களவின்கண் ஒத்தாரிருவர் வேட்கை மிகுதியால் கூடி ஒழுகியவழிக் கரணத்தின் அமையாது இல்வாழ்க்கை நடத்தலாமோ எனின், அது கூடாது என்பதற்குக் கரணமொடு புணர என்றார். கரணம் என்பது வதுவைச் சடங்கு. காதலர்களைப் பெற்ற, தந்தை, தாய், தனையர் ஆகியோர் 'கொடைக்-குரிமரபினோர்' என்று இளம்பூரணர் கூறுவர். கொடுப்பக் கொள்வது கற்பு என்றமையால், அது கொடுக்குங்கால், களவு வெளிப்பட்ட வழியும், களவு வெளிப்படாத வழியும், மெய்யுறுபுணர்ச்சியின்றி உள்ளப்புணர்ச்சியான் உரிமைபூண்ட வழியும் கொள்ளப்பெறும் என்பதை அறிதல் வேண்டும். அவ்-வாறு கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதே பாதுகாப்பானது. ஆனால் அவ்வாறு செய்யாது களவுமணங் கொண்ட தலைவன் ஒருவன்,

கொடுப்பின் நன்குடைமையுங் குடிநிரல் உடைமையும்
வண்ணமும் துணையும் பொரீஇ எண்ணாது
எமியேந் துணிந்த ஏமஞ்சால் அருவினை
(குறிஞ்சிப்பாட்டு : 30-32)

என்று கூறுவதைக் காணலாம்.

களவுக்காலத்தில் தலைவி சுற்றத்தார் அறியாது தலைவனுடன் சென்று அவன் ஊரில் மணந்துகொள்வதும் கற்பென்று கொள்ளவேண்டும் என்பது

தொல்காப்பியரின் கருத்தாகும். இதனை அவர்

கொடுப்போர் இன்றியும் கரண முண்டே
புணர்ந்துடன் போகிய காலை யான. (கற்.2)

என்றார். இது புணர்ந்து உடன்போயினார் ஆண்டுக் கொடுப்போரின்றியும் வேள்வியாசான் காட்டிய சடங்கின் வழியாற் கற்புப்பூண்டு வருவதுமாம் என்று கூறுவர் நச்சினார்க்கினியர். எனவே கற்பிற்குக் கரணம் இன்றியமையாது வேண்டப்படுவதாயிற்று.

"தொல்காப்பியர் ஆதி ஊழியின் அந்தத்தே இந்நூல் செய்தலின் முதநூல் ஆசிரியர் கூறியவாறே களவு நிகழ்ந்த பின்னர்க் கற்பு நிகழுமாறுங் கூறித் தாம் நூல்செய்கின்ற காலத்துப் பொய்யும் வழுவும் பற்றி இருடிகள் கரணம் யாத்த வாறும் கூறினர்." (இளம்பூரணர் உரை.ப.251)

பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப (கற்.4)

இங்குப் பொய்யாவது செய்த ஒன்றினைச் செய்திலேன் என்றல் ; வழுவாது சொல் லுதலே அன்றி ஒழுக்கத்து இழுக்கி ஒழுகுதல். கரணத்தொடு முடிந்தகாலையின் அவை இரண்டும் நிகழாவாம். அதனால் கரணம் வேண்டுவதாயிற்று.

களவொழுக்கத்திற்கு உள்ளது போலவே கற்பொழுக்கத்திற்கும் பல-நிலைகள் உள்ளன. அவற்றைத் தொல்காப்பியர்,

மறைவெளிப் படுதலுந் தமரிற் பெறுதலும்
இவைமுத லாகிய இயனெறி திரியாது
மலிவும் புலவியும் ஊடலும் உணர்வும்
பிரிவொடு புணர்ந்தது கற்பெனப் படுமே.
(செய்யுளியல் : 179)

என்று கூறுகிறார். களவொழுக்கம் வெளிப்படுதலும்; களவொழுக்கமின்றித் தமர் கொடுப்பப் பெறுதலும் என்று சொல்லப்பட்ட இவை முதலாகிய இயற்கை நெறியில் தப்பாது மகிழ்தலும், புலத்தலும், ஊடுதலும், ஊடல்தீர்தலும், பிரிதலும்

என்று சொல்லப்பட்ட இவற்றொடு கூடிவருவது கற்பு எனப்படும். இயனெறி என்றதனால் கரணத்தின் அமைதல் இன்றியமையாததாயிற்று.

இவ்வாறாகக் கைகோள் இரண்டில் கற்பு என்பதற்கு மேற்கூறிய எல்லைகளை வகுத்துக் கூறிய தொல்காப்பியர், இன்னதற்கு இதுதான் முடிந்த பொருள் என்று அறுதியிட்டுக் கூறமுடியாத சொற்களுள் கற்பு என்பதும் ஒன்றாகும் எனக் கூறுகின்றார். தொல்காப்பியர் பொருளியல் நூற்பாவில் (51),

ஒப்பும் உருவும் வெறுப்பும் என்றா
கற்பும் ஏரும் எழிலும் என்றா
.. .. .. ..
ஆவயின் வரூவுங் கிளவி எல்லாம்
நாட்டியல் மரபின் நெஞ்சுகொளின் அல்லது
காட்ட லாகாப் பொருள என்ப

என்று கூறியுள்ளார். ஒப்பு முதலாகக் கூறப்பட்ட சொற்களெல்லாம் நாட்டில் வழங்குகின்ற மரபினாலே பொருளை மனத்தினால் உணரின் அல்லது மாணாக்-கர்க்கு இதுபொருள் எனவேறுபடுத்தி ஆசிரியன் விளக்கமுடியாத பொருளை உடையன என்பது மேற்கூறிய நூற்பாவின் பொருளாகும். இந்நூற்பாவில் தொல் காப்பியர் குறிப்பிட்டுள்ளது போல, **கற்பு** என்ற சொல் எவ்வாறெல்லாம் காலத்-திற்குக் காலம் நாட்டில் வழங்குகின்ற மரபுப்படி பொருள் உணர்த்தப்பட்டது, உணர்த்தப்பட்டு வருகின்றது என்பதை அவ்வக்காலந்தோறும் எழுந்த இலக்கண இலக்கியங்களின் வழி நம்மால் கண்டு உணர முடிகிகன்றது.

இந்தக் கற்பு என்ற சொல் எடுத்தாளப்பட்டுள்ள நூல்களுள் நமக்கு முதல் ஆதாரமாகக் கிடைக்கக் கூடியது தொல்காப்பியம் எனும் இலக்கண நூலேயாகும். தொல்காப்பியத்தில் கற்பு என்ற சொல் பதினான்கு இடங்களில் ஆசிரியரால் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவற்றை எல்லாம் தொகுத்துப் பார்க்கும்போது இல்வாழ்க்கைக்கு முன் நிகழ்வது களவொழுக்கம். களவொழுக்-கத்தின்பின் தலைவனும் தலைவியும் நாடறி நன்மணம் புணர்ந்து மேவும் இல்லற நெறியே கற்பொழுக்கம் என்பது பெறப்படும். தொல்காப்பியர் எந்தவொரு இடத்திலும் தற்கால வழக்கில் மகளிர்க்குமட்டுமே உரியவொரு தனிப்பண்-பாகக் கூறப்படும் கற்புடைமை அல்லது பத்தினித்தன்மை என்ற பொருளில் குறிப்பிடவில்லை என்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்
செயிர்தீர் காட்சிக் கற்புச்சிறந் தன்றெனத்
தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு
காமக் கிழவன் உள்வழிப் படினும்
தாவில் நன்மொழி கிழவி கிளப்பினும்
ஆவகை பிறவும் தோன்றுமன் பொருளே
(தொல்.கள.நூ.23)

என்றொரு நூற்பா தலைவி கூற்றாகத் தொல்காப்பியத்தில் இடம்பெறுகிறது. இதில் பெண்ணுக்குரிய பண்புகளுள் ஒன்றாகக் கூறப்படும் நாணம் என்பதைக் காட்டிலும் குற்றம் தீர்ந்த காட்சியினையுடைய கற்புச் சிறந்தது என முன்னோர் கூற்றை உட்கொண்டு தலைவன் உள்ள இடத்துச் செல்வதாகக் கூறும் தலைவி கூற்றாக இந்நூற்பா அமைந்துள்ளது. இந்த நூற்பா களவியலில் இடம் பெறுகிறது. களவில் தலைவனுடன் பழகும் தலைவி, எல்லாவற்றிலும் சிறந்த உயிரினும் சிறந்தது நாணம் ; அந்நாணினும் குற்றம் தீர்ந்த காட்சியினையுடைய கற்புச் சிறந்தது என்று முன்னோர் கூறியதை உணர்ந்து தலைவனிடம் செல்கின்றாள். இங்குச் செயிர்தீர் கற்பு என்று கூறப்பட்டதற்குக் குற்றம் கூற முடியாத இல்லறநெறி என்ற பொருளே பொருத்தமானது. நாணத்தினால் தொடர்ந்து களவொழுக்கத்தில் ஈடுபடுவதைவிட அவர்கள் களவுநெறி வெளிப்பட்டாலும் அது குற்றமற்ற கற்புநெறியிலே செலுத்தவல்லது என்று தலைவி துணிந்து கருதுவதாகும். கற்புநெறியில் ஒன்றுபட்ட தலைவனும் தலைவியும் பழகும் காட்சி செயிர்தீர் காட்சியாகும். இந்த நூற்பாவில் அதிலும் தலைவியின் கூற்றாக வரும் இந்நூற்பாவில் பெண்ணுக்கே உரிய பண்புகளுள் ஒன்றாகிய நாணம் என்பதுடன் கற்பு என்பதும் இணைத்துக் கூறப்படுவதால் காலப்போக்கில் கற்பு என்பதையும் பெண்மைக்குரிய சிறந்த பண்பாகப் போற்றும் பழக்கம் வழக்கில் வந்திருக்கலாம். அதுமட்டுமல்லாமல் சங்ககால, இடைக்கால இலக்கிய வளர்ச்சியில் கற்பு என்பது யாருக்கு உரியது எத்தகைய பண்பை விளக்கிநின்றது என்பவற்றை நுணுகி ஆராய்ந்து நோக்குகையில் இல்லறநெறி என்ற பொருளில் தொல்காப்பியர் முதலில் குறித்த கற்பு என்னுங் கைகோள் பெற்ற பொருள் மாற்றத்தை நம்மால் உணரமுடியும்.

காலத்தால் முந்தியதாகக் கருதப்படும் சங்ககால இலக்கியங்களில் ஏறத்தாழ ஐம்பது இடங்களில் கற்பு என்றசொல் பயின்று வருகிறது. அவற்றுள் குறுந்தொகைப் பாடலொன்றில் (156) எழுதாமல் கற்றலையுடைய வேதம் என்ற

பொருளில் ‘எழுதாக் கற்பி னின்சொல் உள்ளும்’ எனவருகிறது. பதிற்றுப்பத்தில் (43:31; 80:17) கல்வியை உடையாய் என்ற பொருளில் ‘தொலையாக் கற்ப’ என்ற தொடரமைந்துள்ளது. மற்றபிற இடங்களில் வரும் கற்பு என்ற சொல் சிறந்த அடைமொழிகளுடன் கூடி பெண்ணுக்குரிய ஒன்றாகவே கூறப்பட்டுள்ளதைக் காணலாம்.

கல்வி, கற்பு என்ற இரண்டு சொற்களும் வினைச்சொல் அடியான ‘கல்’ என்பதனின்றும் பெறப்பட்டவை. கற்றல், விவேகம் பெறல், இவற்றால் அறிவும் ஆற்றலும் பெறல் என்ற பொருளையுடையன. இவற்றுள் கற்பு என்ற சொல் சங்கப்பாடல்களில் ஆண்களோடு தொடர்புபடுத்திக் கூறப்படும்போது கல்வி, திறம், தேர்ச்சி என்ற பொருள்களிலும் ; பெண்களோடு தொடர்புடையதாகக் கூறப் படும்போது கற்புடைமை பத்தினித்தன்மை என்ற பொருளிலும் இடம்பெறுகிறது. இதற்கு உரையெழுதிய ஆசிரியர்களும் கற்பு என்ற சொல் மகளிரோடு தொடர்பு டையதாக வருமிடங்களிலெல்லாம் கற்புடைமை அல்லது பத்தினித்தன்மை என்றே பொருள் கூறியுள்ளனர்.

உலகமறையாகப் போற்றப்படும் திருக்குறளில் வள்ளுவர் ‘கற்பென்னும் திண்மை’ என்பார். இக்குறளில் கற்பு திண்மைப் பொருளாகக் கூறப்படினும் அது உள்ளத்தால் உணரக்கூடிய நுண்பொருளாகிய திண்மையே ஆகும். அத்திண்மை யின் ஆற்றலை மற்றொரு குறளில் வள்ளுவர் பொதுப்படக் கூறுகின்றார்.

எண்ணிய எண்ணியாங் கெய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின் (குறள். 666)

திண்ணிய உள்ளங்கொண்ட எவரும் எண்ணியதை எய்தலாம் என்றால் கற்புத் திண்மையைக் கடைபிடிக்கும் பெண்ணும் தான் எண்ணிச் சொல்லும் சொல்லில் எள்ளளவும் திறம்பாதபயனை எய்துவாள் என்பது பெறப்படுகிறது.

கொன்றை வேந்தன் என்ற நூலில் ஔவையார் “கற்பெனப் படுவது சொற்றிறம் பாமை” (14) என்றார். பெண்ணொருத்தித் தன்தலைவனையன்றிப் பிறரை எண்ணிப்பாராத திண்ணிய நிலையில் நிற்கத் தலைப்படுகின்றாளோ அப்பொழுதே அவளுக்குச் சொற்றிறம்பாமை என்னும் ஆற்றலும் வருகிறது. அதற்குக் குறிஞ்சிக் கலியில் கபிலரின் பாடலொன்று சிறந்த சான்றாக அமை-கிறது.

காமர் கடும்புனல் கலந்தெம்மோ டாடுவாள்

.. .. ..

பூணாக முறத்தழீஇப் போத்தந்தான் அவனகலம்
வருமுலை புணர்ந்தன என்பதனால் என்தோழி
அருமழை தரல்வேண்டின் தருகிற்கும் பெருமையோளே (39:1-6)

இக்கருத்தே திருக்குறளில் (55) வள்ளுவரால்,

தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை

என்று கூறப்பட்டுள்ளது. இன்னும் மணிமேகலை காப்பியத்தில் சீத்தலைச் சாத்தனார் திண்ணிய நெஞ்சினரான கற்புடைப்பெண்டிரை, 'மண்டிணி ஞாலத்து மழைவளம் தரூஉம் பெண்டிர்' (22 : 45-46) எனக் குறிப்பிடுகின்றார். இவ்வாறு காலப்போக்கில் கற்பு என்பது பெண்ணுக்குரிய ஓர் ஒப்பற்ற பண்பாக ஆக்கப்பட்ட நிலையை பல்வேறு இலக்கியச் சான்றுகளின்வழி அறியலாம். தற்காலத்து வாழ்ந்து மறைந்த கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் கற்பு என்பது ஆடவர் பெண்டிர் இருபாலார்க்கும் உரியநிலை என, "கற்புநிலை என்று சொல்லவந்தார் இருகட்சிக்கும் அந்நிலை பொதுவில் வைப்போம்" என்று முழங்கியதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

தனது காலத்திற்கும் முந்தைய சமுதாய அமைப்பிலிருந்தே தொல்காப்பியர் சடங்குடன் கூடிய திருமணமும் அதைத்தொடர்ந்த இல்லற வாழ்க்கையும் தலைமக்களின் கற்புநெறியாகும் என இலக்கணம் வகுத்துள்ளார். சங்ககால இலக்கியங்களிலும் கற்பு என்பது பத்தினித்தன்மை என்ற பொருளில் மட்டுமல்லாது ஆடவர்க்குரிய கல்வி, ஆற்றல், பயிற்சி என்ற பொருள்தருவதாகவும் பயன்படுத்தப்பட்டுள்ளமையை முன்பு கண்டோம்.

அதனால் சங்ககாலந் தொடங்கி இரட்டைக் காப்பியக் காலத்தும் அதன் பின்னரும் தமிழர் குறிப்பிட்ட கற்புக்கோட்பாட்டில் நிகழும் மாற்றம் தமிழர்க்கே உரியதுதானா அல்லது ஆரியப் பண்பாட்டின் தாக்கத்தால் விளைந்த ஒன்றா என்பது ஆய்வுக்குரியதாகும்.

## முல்லை சான்ற கற்பு

முல்லை சான்ற கற்பு என்ற தொடரமைப்பு முல்லைப்பாடல்களில் மட்டும் ஆளப்பட்டுள்ளமையே கற்பு என்ற சொல் எவ்வாறெல்லாம் முன்னும் பின்னும் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை அறியக் காரணமாயிற்று. தொல்காப்பியத்திலும் அதை அடுத்துத் தோன்றிய இலக்கியங்களிலும் கற்பு என்பதற்குத் தரப்பட்ட விளக்கங்களைக் கருத்தில் கொண்டு இனி முல்லைக்கும் கற்புக்கும் என்ன தொடர்பு என்பதைக் காண்போம்.

எங்கெல்ஸ் என்பார் கூறுவதுபோல உலகத்தின் ஆதிகாலச் சமூகத்தில் பொதுவுடைமை நிலவியதையும் அங்கு வரன்முறையற்ற புணர்வுகள் நிகழ்ந்ததையும் இங்கு நாம் கருத்தில் கொள்ளவேண்டும். அதுபோலவே தமிழரின் ஆதிகாலத்தில் நிலவிய புணர்வு நிலைகளைக் கருத்தில் கொண்டே புணர்தலும் புணர்தல் நிமித்தமும் என்ற உரிப்பொருளைத் தொல்காப்பியர் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். இவ்வுரிப்பொருளைக் கொண்ட குறிஞ்சித்திணை பழத்தமிழ்ச் சமுதாயத்தில் நிலவிய காதல்வாழ்க்கையைச் சித்தரிப்பதாகக் கூறலாம். இதன் அடுத்தநிலையாக ஆநிரைகளைப் பேணிக்காத்து அவற்றினால் பலன்பல பெற்று வாழ முனைந்த தனியுடைமைச் சமுதாயமாக முல்லை அமைந்திருத்தல் வேண்டும். ஆதிகால மக்கள் நாகரிக நிலைக்குமாறும் களனாக முல்லைநிலம் அமைந்தது. அப்பொழுது அவர்களது உடைமையாக ஆநிரைகள் போற்றப்பட்டன. தனியுடைமைத் தோன்றவே அங்குத் தலைமைப் பதவியும் அதனை விடுத்துச் செல்ல வாரிசுரிமையும் தோன்றலாயின. இந்த வாரிசுரிமையை நிலைநாட்ட ஒருவனுக்கு ஒருத்தி என்ற உறவை மேற்கொண்டு வாழவேண்டும் என்ற எண்ணமும், அதில் தவறு ஏதும் நிகழாமல் தடுத்துக்காக்கவும் கற்பு எனும் ஒழுக்கம் உருவாயிற்று. சமுதாயத்தில் இத்தகைய நெறிமுறைகள் தோன்றக் காரணமாய் அமைந்த நிலம் முல்லைநிலம். முல்லையின் காதல் வாழ்வு நாடறி நன்மணம் புணர்ந்து மேவும் கற்புநெறியைத் தோற்றுவித்தது. முல்லைமலர் மலர்ந்து மணம் பரப்பும் முல்லைநிலத்தில் தலைமக்கள் மகிழ்ந்து இல்லிருத்தல் முல்லைத்திணையின் உரிப்பொருளாயிற்று. இக்கொள்கை அடிப்படையில் தமிழில் குறிஞ்சிச் சமுதாயத்தை அடுத்துத் தோன்றிய முல்லைச் சமுதாயத்தில் கற்புநெறி உருப்பெற்றிருக்க வேண்டும். இதனைத் தொல்காப்பியர் இருத்தல் என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார். இந்த இருத்தல் என்ற சொல்லும் முல்லை என்ற சொல்லும் ஒன்றை ஒன்ற சார்ந்து இரண்டும் ஒருபொருள் கொண்ட தன்மையைச் சங்க இலக்கியத்தில் காணமுடிகிறது. இதனை முல்லைப்பாட்டிற்கு

உரை எழுதிய நச்சினார்க்கினியர் கூற்றினின்றும் அறியலாம். அந்த உரைப் பகுதியில், 'ஆற்றியிருந்து இல்லறம் நிகழ்த்திய இயற்கை முல்லையாகும் என்று கருதி இருத்தல் என்னும் பொருள்தர முல்லையென்று இச்செய்யுட்கு நப்பூதனார் பெயர் கூறினமையின்'' என்ற வரிகள் முல்லையும் இருத்தலும் ஒரே பொருளைத் தருவனவாக ஆளப்பட்டமையை உணர்த்துகின்றன. அன்பின் ஐந்திணை உரிப்பொருள்களுள் ஒன்றான இருத்தல் என்பது முல்லை என்ற சொல்லால் சுட்டப்பட்டது. இனி முல்லை என்ற சொல் எவ்வாறு கற்பு என்ற சொல்லோடு தொடர்புபடுத்திக் கூறப்பட்டது என அறிதல் வேண்டும்.

முல்லை என்பதும் கற்பு என்பதும் ஒன்றை ஒன்று சார்ந்து வழங்கிய மையைச் சங்கப் பாடல்களில் காணலாம். காட்டாக,

முல்லை சான்ற கற்பின் மெல்லியல்
மடமானோக்கின் வாணுதல் விறலியர் (சிறுபாண். 30-31)
முல்லை சான்ற கற்பின்
மெல்லியல் குறுமகள் உறையுமூரே (அகம் .274)

எனவரும் பாடலடிகளில் பயின்றுவரும் முல்லை என்பதற்கும் கற்பு என்பதற்கும் பொருள் என்ன என்பதைக் காணல் வேண்டும். அன்பின் ஐந்திணை குறித்து-வரும் இலக்கண விதிகளுள் முல்லை என்ற சொல் மணமுள்ள மலர் என்ற பொருளை உணர்த்துவதோடு முல்லை மலருக்குரிய இடமான முல்லைநிலத்-திற்குக் கூறப்பட்ட இருத்தல் எனும் உரிப்பொருளையும் உணர்த்தி நிற்பதாகும்.

அதுபோலக் கற்பு என்ற சொல் தொல்காப்பியத்தில் ஒரு ஒழுக்கமாக, அதாவது கரணம் மூலம் இணைந்த தலைமக்களின் இல்வாழ்வைக் குறித்தது. இந்த இரண்டு பொருள்களின் அடிப்படையில் **முல்லை சான்ற கற்பு** என்ற தொடருக்குப் பொருளாய் அமைவது **இருத்தல் பொருந்திய இல்லறநெறி** என்பதே ஆகும். கற்புநெறி புகுந்த தலைவனும் தலைவியும் தங்கட்குக் கற்பிக்கப்-பட்ட கடமைகளைச் செய்து இன்புற்று இல்லிருத்தலாகும்.

**கற்பு** என்பது தலைவன் தலைவி இருவர்க்கும் கற்பிக்கப்பட்ட நெறி அல்லது ஒழுக்கமாகும். இதனால் அன்பின் ஐந்திணைகளுள் முல்லைத் திணை யைச் சார்ந்த பாடல்கள் கற்பு என்பதற்கு விளக்கமாக அமையக் கூடியவையே ஆகும். முல்லைக்குரிய இருத்தல் ஒழுக்கம் தலைமக்கள் இருவராலும்

போற்றப்பட்டமையை முல்லைத்திணைப் பாடல்கள்வழி உணரமுடிகின்றது. தலைவன் தலைவி இருவரும் மகிழ்ந்திருந்து இல்லோம்பும் காட்சியும்; இருவரும் பிரிந்திருக்க நேருகையில் மீண்டும் இல்லிருக்க விழையும் பண்போடு தலைவி தலைவனை நினைந்து ஆற்றியிருத்தலும் ; தலைவன் தலைவியை நினைந்து ஆற்றியிருத்தலோடு, சென்றவினை முடிந்தவுடன் தலைவியை வந்தடைதலே நோக்கமாக விரைந்து வந்து மகிழ்வித்தலும் அப்பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும் இவற்றில் தலைவி மட்டுமன்றித் தலைவனும் கற்பு நெறி பிறழாதப் பண்பாளனாகவே சித்தரிக்கப்பட்டுள்ளான். இதுவே மருதத்திணைப் பாடல்களைப் பார்க்கும்போது தலைவன் பரத்தமை ஒழுக்கம் மேற்கொள்ளல் ; இதனால் தலைவி ஊடல் கொள்ளுதல் போன்ற நிலைகளைக் கூறும் பாடல்கள் காணப்படுகின்றன. ஓர் ஆணும் பெண்ணும் முறைப்படி இணைந்து வாழத்தொடங்கியதும் ஒருவர்க்கொருவர் கற்பிக்கப்பட்ட நெறியினின்றும் பிறழாது வாழ்ந்துவாட்டுதல் வேண்டப்பட்டது. இதற்கு உகந்த திணையாக முல்லைத்திணை அமைந்தது. எனவேதான் குறிஞ்சி சார்ந்த கற்பு என்றோ; மருதஞ் சார்ந்த கற்பு என்றோ கூறப்படாமல் **முல்லை சான்ற கற்பு** என்று தமிழ் உள்ளங்களால் சிறப்பித்துப் போற்றப்பட்டது.

பிற்காலத்தில் மேற்கூறிய விளக்கங்கள் மாறி அமைவதையும் நாம காணலாம். இருத்தல் என்ற உரிப்பொருளை உணர்த்தி நின்ற முல்லை என்ற சொல் அப்பொருளை இழந்து மலர் என்ற பொருளளவிலே நின்றது. பின்னர் அது பண்டைய மரபின் காரணமாகத் திருமணமான மகளிர் சூடும் மலராகக் கருதப்பட்டது. முல்லைமலர் திருமணமான மகளிரை அடையாளம் காட்டும் குறியீடாகப் பயன்பட்டது என்பர் பேராசிரியர் வ.சுப. மாணிக்கம். அதுபோலவே கற்பு என்பதும் இல்லறநெறி என்ற பொருளை இழந்து பத்தினித்தன்மை என்ற பொருளில் ஆளப்படுகிறது என்றே கருதவேண்டியுள்ளது. இதனையே ‘முல்லைச் சூட்டைக் கற்பிற்குத் தலையிலே சூட்டினார் என்க’ (2438) என்று சீவகசிந்தாமணியிலும் ; ‘தேவி முல்லை வளர்த்தற்குக் காரணம் கற்புடைமை என உணர்க’ என்று தக்கயாகப்பரணியிலும் கூறப்பட்டுள்ளமையால் உணரலாம். இவையல்லாமல் மேலே கூறப்பட்ட ‘முல்லை சான்ற கற்பு’ என்ற தொடருக்கு இக்கால உரையாசிரியர்கள் ‘முல்லை மலர் சூடுதற்கமைந்த கற்பு’ என்று பொருளுரைத்தனர். காலப்போக்கில் சமுதாயச் சூழலுக்கு ஏற்பச் சொற்களின் பொருள் மாற்றம் பெறுவதையும் இவற்றால் உணரமுடிகிறது. பிற்கால உளவியல் அறிஞர்கள் கற்பு என்ற மூலப்படிவம் வெண்மை நிறத்தின் வழியாக வெளிப்பட்டது ; சங்ககால படைப்பாழ் மனங்களில் கற்பு என்ற மூலப்படிவம் வெண்மை நிறமுடைய முல்லை

மலரின் வழியாகவும், மேலை இலக்கியப்படைப்பாழ் மனங்களில் வெண்ணிறப் பனியாகவும் வெளிப்படுத்தப்பட்டது என்பர்.

## முல்லை உரிப்பொருள்

ஆதிகாலத் தமிழ்ச் சமுதாயத்தின் காதல் வாழ்க்கையின் முதல்நிலை குறிஞ்சி எனப்பட்டது. தமிழரின் ஆதிசமூகத்தில் இருபாலார்க்கும் இடையே நிகழ்ந்த புணர்வு நிலைகளைத் தொல்காப்பியர் புணர்தல் என்ற உரிப்பொருளாகக் குறிப்பிட்டார். பழந்தமிழ் மக்களிடையே நாகரிகம் அரும்பத் தொடங்கிய நிலமாகச் சுட்டப்படுவது முல்லைநிலமாகும். இங்குத் தமிழரின் காதல் வாழ்விற்குச் சில விதிமுறைகள் வகுக்கப்பட்டன. தொல்காப்பியர் கூறும் **இருத்தல்** என்னும் உரிப்பொருள் முல்லைநிலத்தில் விளைந்த சமூகத்தின் காதல் வாழக்கையைக் குறிப்பதாக இருந்தது. அதற்கு முல்லை என்ற குறியீடு ஆகு பெயராய் இடம்பெற்றிருத்தல் வேண்டும். இக்கொள்கை அடிப்படையில் தமிழரிடையே குறிஞ்சிச் சமுதாயத்தை அடுத்துத் தோன்றிய முல்லைச் சமுதாயத்தில் இல்லறவொழுக்கம் என்பது உருப்பெற்றிருத்தல் வேண்டும். இதனையே தொல்காப்பியர் கைகோளுள் ஒன்றான கற்பு என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார்.

அன்பின் ஐந்திணை ஒழுகலாறுகள் எல்லா நிலத்தும் எல்லாக் காலத்தும் நிகழ்தற்கு உரியனவே எனினும் ஒவ்வொன்றற்கும் உரிய தனிச்சிறப்பியல்புகளைக் கருத்தில் கொண்டு அகப்பொருள் இலக்கண ஆசிரியர்கள் தமது கூர்த்தமதியால் ஆய்ந்தறிந்து இலக்கணம் வகுத்துள்ளனர். அன்பின் ஐந்திணை ஒழுக்கங்களையும் அவை இன்ன நிலத்திற்குரியவை என்பதையும்,

போக்கெல்லாம் பாலை ; புணர்தல் நறுங்குறிஞ்சி
ஆக்கஞ்சேர் ஊடல் அணிமருதம் - நோக்குங்கால்
இல்லிருத்தல் முல்லை ; இரங்கல் நறுநெய்தல்
சொல்லிருந்த நூலின் தொகை.

என்ற பழம்பாட்டால் அறியலாம் (ப.41 ; ந.சுப்புரெட்டியார் ; தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை). இந்த ஐந்திணைக்குரிய நிகழ்ச்சிகள் சிலபாடல்களில் மாறி வருவதும் உண்டு. இதற்குத் தொல்காப்பியர் "திணைமயக் குறுதல் கடிநிலை இலவே" என இலக்கணம் வகுத்தார். மேலும் எவ்விடத்தும் எக்காலத்தும் ஒப்ப நிகழும் உலகியல் போலாது, உள்ளோன் தலைவனாக இல்லது புணர்தல்

முதலாகப் புனைந்துரை வகையாற் கூறும் நாடக இலக்கணம் போல யாதானும் ஒரோவழி ஒருசாரார் மாட்டு உலகியலான் நிகழும் ஒழுக்கத்தினை எல்லார்க்கும் பொதுவாக்கி இடமும் காலமும் நியமித்துச் செய்யுட் செய்தல் ஒப்புமை நோக்கிச் செய்யப்பட்டதாதலின் என்று நச்சினார்க்கினியர் (அகத். நூ.3. உரை) விளக்கியுள்ளதை நாம் உணர்ந்தால் இவ்வைந்திணை ஒழுக்கம் விளக்கமுறும்.

## இருத்தல்

ஐந்திணைகளுள் முல்லைத்திணைக்குரிய உரிப்பொருளாக இருத்தலும் அதன் நிமித்தமும் கூறப்படுகிறது. தொல்காப்பியத்தில் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்னும் நானிலத்தில் முல்லைநிலம் முதற்கண் குறிக்கப்பெற்றும் ; முல்லைக்குரிய இருத்தல் ஒழுக்கம் புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் என்னும் ஐந்திணை ஒழுக்கங்களுள் நடுவண் அமைந்தும் விளங்குவதைக் காணலாம். ஐந்திணைக்குரிய ஒழுக்கத்தைத் தொல்காப்பியர்,

> புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
> ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை
> தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே (அகத்.16)

என்றார். எனினும் இந்நூற்பாவிலோ வேறு இடத்திலோ குறிஞ்சிக்குப் புணர்தலும், பாலைக்குப் பிரிதலும் ; முல்லைக்கு இருத்தலும் ; நெய்தலுக்கு இரங்கலும், மருதத்திற்கு ஊடலும் உரிப்பொருளாம் என்று வலியுறுத்திக் கூறவில்லை. இந்தத் தொல்காப்பிய நூற்பாவிற்கு உரையெழுதிய இளம்பூரணர், " புணர்தலும் பிரிதலும் இருத்தலும் இரங்கலும் ஊடலும் அவற்றின் நிமித்தமும் என்று சொல்லப்பட்ட இவை ஆராயுங்காலத்து ஐந்திணைக்கும் உரிப்பொருளாம்" என்கிறார். உரையாசிரியர் நச்சினார்க்கினியர், "தேருங்காலை என்றதனால் குறிஞ்சிக்குப் புணர்ச்சியும் பாலைக்குப் பிரிவும் முல்லைக்கு இருத்தலும், நெய்தற்கு இரங்கலும் மருதத்திற்கு ஊடலும் அவ்வந்நிமித்தங்களும் உரித்தென்று ஆராய்ந்துணர்க " என்கிறார். எனினும் இப்பிரிவுகளுக்குரிய காரணம் என்ன என்பது தெளிவாக்கப்படவில்லை.

இவ்வாறு ஐந்திணைகளுள் முல்லைத் திணைக்குரிய உரிப்பொருளாக இருத்தல் என்பது சுட்டப்படுகிறது. இந்த இருத்தல் ஒழுக்கம் தொல்காப்பிய

உரையாசிரியர்களாலும் பிற்காலத் திறனாய்வாளர்களாலும் பின்வருவனபோல விளக்கப்பட்டுள்ளது. இளம்பூரணர் 'இருத்தலாவது தலைமகன் வருந்துணையும் ஆற்றியிருத்தல்' (தொல். பொருள்.நூ.16) என்றும் ; உரையாசிரியர் நச்சினார்க் கினியர், 'இனித்தலைவி, பிரிவுணர்த்தியவழிப் பிரியார் என்றிருத்தலும், பிரிந்த வழிக் குறித்த பருவமன்றென்று தானே கூறலும், பருவம் வருந்துணையும் ஆற்றியிருந்தமை, பின்னர்க் கூறுவனவும் போல்வன இருத்தல் ; இனிப் பருவங்-கண்டு ஆற்றாது கூறுவனவும், தோழி பருவமன்றென்று வற்புறுத்தினவும், தலைவன் பாசறைக்கண் இருந்து உரைத்தனவும் அவை போல்வனவும் நிமித்த மாகலின் இருத்தல் நிமித்தம் ' என்றும் (தொல். பொருள். நூ.14) விளக்-கியுள்ளனர். மேலும் பத்துப்பாட்டுள் ஒன்றான முல்லைப்பாட்டிற்கு உரை-யெழுதிய நச்சினார்க்கினியர், 'இப்பாட்டிற்கு முல்லை என்று பெயர் கூறினார்; முல்லை சான்ற கற்புப் பொருந்தியதனால். இல்லறம் நிகழ்த்துதற்குப் பிரிந்து வருந்துணையும் ஆற்றியிருவென்று கணவன் கூறிய சொல்லைப் பிழையாமல் ஆற்றியிருந்து இல்லறம் நடத்திய இயற்கை முல்லையாம் என்று கருதி இருத்தல் என்னும் பொருள் தர முல்லையென்று இச்செய்யுட்கு நப்பூதனார் பெயர் கூறினமையிற் கணவன் வருந்துணையும் ஆற்றியிருந்தாளாகப் பொருள் கூறலே அவர் கருத்தாயிற்று (முல்லைப்பாட்டு. நச்.உரை.ப.272) என முல்லைப்-பாட்டுக்கு விளக்கம் தந்துள்ளார். ஆனால் முல்லைப்பாட்டின் தலைவி பெருமுது பெண்டிர் ஆற்றுவிக்கவும் ஆற்றாத தன்மையுடையவளாகவே காணப்-படுகின்றாள். இதனை நப்பூதனார்,

. . . . . . . . . . . தெவ்வர்
முனைகவர்ந்து கொண்ட திறையர் வினைமுடித்து
வருதல் தலைவர் வாய்வது ; நீநின்
பருவரல் எவ்வம் களை;மா யோயெனக்
காட்டவுங் காட்டவுங் காணாள் கலுழ்சிறந்து
பூப்போல் உண்கண் புலம்புமுத் துறைப்ப (18-23)

எனப்பாடியுள்ளதனின்றும் உணரலாம். இவ்வுரையாசிரியர்கள் கருத்தே பிற்காலத்திறனாய்வாளர்களால் பின்பற்றப்பட்டது. காட்டாக அவற்றுள் சிலவற்றைக் காண்போம்.

குறுந்தொகையின் முல்லைப் பாடல்களை ஆராய்ந்து உரை எழுதிய ஔவை சு. துரைசாமிப்பிள்ளை, 'ஆற்றியிருத்தலே பொருளாகத் தலைமக்கள்பால்

ஒழுக்க நிகழ்ச்சிகள் முல்லைத்திணைக்கு உரியவாய்ப் புலவர்பாடும் புகழ் பெறு கின்றன ' என்று கூறுவது எண்ணத்தக்கது (குறுந்தொகைச் சொற்பொழிவு கள்.ப.60).

'ஊழ்வயத்தான் தலைமக்கள் ஒருவரையொருவர் கண்டு காதலித்து, புணர்ந்து வாழ்வுழி வினைவயின் தலைவன் பிரிய நேருங்கால் ஒருவரை-யொருவர் உன்னி ஆற்றியிருத்தலும் அதன் நிமித்தங்களுமே முல்லைக்குரிய ஒழுக்கமாகும்' என்பார் வீ. குமாரசாமி ஐயர் (ஐங்குறுநூற்றுச் சொற்-பொழிவுகள். ப.220).

'தங்கணவன்மாரின் வருகையை எதிர்பார்த்து ஆற்றியிருத்தலையே இருத்தல் என்று சுருங்கக் குறிப்பிட்டனர்' என்பார் மு. வரதராசனார் (முல்லைத் திணை.ப.8).

'முல்லையாவது பிரிந்த தலைவனும் தலைவியும் ஆற்றியிருத்தல். அஃதாவது இருத்தல் எனப்படும்' (நற்றிணைச் சொற்பொழிவுகள்.ப.135).

சங்க இலக்கிய முல்லைத்திணைப் பாடல்களில் தலைவனைப் பிரிந்த தலைவி ஆற்றியிருந்ததாகச் சான்றுகள் இல்லை. ஆனால் உரையாசிரியர்களும் திறனாய்வாளர்களும் தலைவி ஆற்றாதிருத்தலையும் ஆற்றியிருத்தலாகக்-கொண்டு தொல்காப்பிய நூற்பா குறிப்பிடும் முல்லையின் இருத்தல் எனும் உரிப்பொருளுக்கு 'ஆற்றியிருத்தல்' என்றே விளக்கம் தந்துள்ளனர். அவர்களது கருத்தின்வழி அகத்திணைக்குரிய ஒழுக்கங்களை நிரல்படுத்தும்போது குறிஞ் சிக்குப் புணர்ச்சியும்; முல்லைக்கு ஆற்றியிருத்தலும் ; நெய்தலில் தலைவி இரங் குதலும் ; மருதத்தில் தலைவியின் ஊடலும் உரிப்பொருளாகக் கொண்டால் தலைவன் தலைவி இருவரும் இணைந்து இனிய இல்லறம் நடத்தி, விருந்தோம்பி சுற்றம்பேணி நல்லறம் நிகழ்த்துவதாகக் கூறப்படும் பொருளை எப்பிரிவில் அடக்குவது என்ற வினா எழுகின்றது.

## சங்க இலக்கியத்தில் இருத்தல்

'காரும் மாலையும் முல்லைக்குரிய' எனத் தொல்காப்பியரால் திட்ட வட்டமாக முல்லைத்திணைக்குரிய முதற்பொருள் கூறப்பட்டுள்ளது. இந்த இலக்கண விதிப்படி, கார்காலத்தில் நிகழும் தலைவன் தலைவியரது ஒழுக்-

கங்களையே முல்லையின் உரிப்பொருளாகக் கொள்ளல் வேண்டும். ஆனால் உரையாசிரியர்களின் கருத்துப்படி, தலைவன் வினைமேற்கொண்டு சென்ற பின்னர் தலைவி தனித்திருந்து அவனது பிரிவை ஆற்றியிருக்கும் நிலையைக் குறிக்கும். தலைவன் வினைமேற் செல்வது கார்காலத்தில் அன்று. கார்தொடங் கும் மழைக்காலத்தில் வேந்தர் போர் வினையை மேற்கொள்ளமாட்டார். இதனை ஐங்குறுநூற்றுப் பாடலொன்று (428)

தேர்செலவு அழுங்க, திருவிற்கோலி
ஆர்கலி எழிலிசோர் தொடங்கின்றே
வேந்து விழுத்தொழில் ஒழிய
யான்தொடங்கினனால் நின்புறந் தரலே

என்று கூறுகிறது. இதனால் கார்காலம் மழைமிகு காலமாதலால் போர் நடை-பெறாது என்பதும், போர் வினையால் பிரிந்தவர் தத்தம் இல்லம் நோக்கிச் செல்லும் காலமாக அமைகிறது என்பதும் புலனாகிறது. எனவே இவ்விரு செய்திகளும் ஒன்றற்கொன்று பொருத்தமுறாமையைக் காணலாம். எனவே முல்லைக்குரிய இருத்தல் ஒழுக்கம் ஆய்விற்குரிய ஒன்றாகிறது.

குறிஞ்சியிற் புணர்ச்சி மேற்கொண்ட தலைவன், தலைவியை மணஞ் செய்தல் வேண்டி வரைவிடை வைத்துப் பொருள்வயிற்பிரிதலும், பிரிந்து வந்த தலைவன் தலைவியை மணந்து இல்லத்தில் மிகழ்ந்து இருத்தலுமே (முல்லை) முறையாகும். சங்ககால அகப்பாடல்களில் தலைவியுடன் இருந்த தலைவனே போரின்பொருட்டு பிரிவு மேற்கொள்கிறான். எனவே தலைவன் தலைவியுடன் சேர்ந்து இல்லறம் நடத்திய நிலையையும் ; வினைமுடித்து வந்த தலைவன் தலைவியுடன் சேர்ந்து மகிழ்ந்து வாழும் நிலையையும் முல்லையின் உரிப்-பொருள் இருத்தலாகக் கொள்வது பொருத்தமுடையதாகும். குறிஞ்சியின் உரிப்-பொருள் தலைவனும் தலைவியும் புணர்தல் என்று கொண்டால் தலைவனும் தலைவியும் சேர்ந்து வாழும் வாழ்க்கையை முல்லையின் இருத்தல் என்ற உரிப் பொருளாகக் கொள்வதே பொருத்தமாகும். இக்கருத்திணை,

தடவரை மார்பன் தன்னமர் காதல்
மடவரல் புணர்ந்த மகிழ்ச்சிநிலை உரைத்தன்று (275)

என 'முல்லை' என்ற துறையின் விளக்கமாய் அமையும் புறப்பொருள் வெண்பா

மாலை பொதுவியற்படல நூற்பா வலியுறுத்தும். இந்த இருத்தல் ஒழுக்கத்தைச் சித்தரிக்கும் சங்க கால அகப்பாடல்கள் மிகக் குறைந்த அளவே உள்ளன.

திருமணத்திற்குப் பின்னர் தலைவனும் தலைவியும் இல்லிருந்து மகிழ்ந்து வாழும் வாழ்வியல் நெறியே முல்லைத்திணைக்குரியதாகும். இல்லற வாழ்வின் ஒவ்வொரு வளர்ச்சிநிலையினும் வாழ்வியல் நெறியின் அருமை பெருமைகளைத் தலைவனும் தலைவியும் அனுபவத்தால் உணர்கின்றனர். அவ்வாறு உணர்ந்து பெறும் உண்மைகளை இல்லறம் நல்லறமாக நடைபெற வாழ்வின் வளர்ச்சிப் படிகளாக அமைத்துக் கொள்கின்றனர். இல்லறக் கடமைகள் இவையென உணர்ந்து அவற்றைக் கடைப்பிடித்து வாழ்கின்றனர். இவ்வாறு ஒத்த அன்புள்ள ஒருவனும் ஒருத்தியும் இயைந்து வாழும் அகவாழ்வு மனநிறைவான வையத்துள் வாழ்வாங்கு வாழும் வாழ்வாகச் சிறக்கத் தலைவியிடம் தோன்றும் கற்புக்கால மெய்ப்பாடுகள் வழிவகுக்கின்றன. கற்பியல் வாழ்வு சிறக்கவும் நன்னெறிப் படவும் தலைவியிடம் தெய்வமஞ்சல், புரையறந்தெளிதல், இல்லது காய்தல், உள்ளது உவத்தல், புணர்ந்துழி உண்மை, பொழுது மறுப்பாதல், அருள்மிகவுடைமை, அன்புதொகநிற்றல், பிரிவாற்றாமை, மறந்தவை உரைத்தல், புறஞ்சொல் மாணாக்கிளவி என்னும் மெய்ப்பாடுகள் (தொல். பொருள்.நூ.268) நிகழ்வதாகத் தொல்காப்பியர் கூறுகின்றார்.

திருமணத்திற்குப் பின்னர் தலைவனும் தலைவியும் நடத்தும் இல்லற வாழ்வினைச் சங்கப்பாடல்கள் சில சித்தரித்துள்ளன. இருவரும் குறிக்கோள் வாழ்வைப் பின்பற்றி வாழ்ந்தனர். தலைவி உள்ளமெல்லாம் உவகை பொங்கத் தலைவனுடன் இணைந்து வாழ முற்பட்டாள். அன்பும் அருளும் அவளிடம் பெருக்கெடுத்தன. மென்மையும் இனிமையும் நிறைந்த இன்சொற்களால் தலைவன் உள்ளத்தைப் பிணித்துக்கொண்டாள். அதனால் தலைவனுடன் ஒன்றுபட்ட வாழ்க்கை அவளால் வாழமுடிந்தது என்பதை

அன்பும் மடனும் சாயலும் இயல்பும்
என்பு நெகிழ்விக்கும் கிளவியும் பிறவும்
ஒன்றுபடு கொள்கையொடு ஓராங்கு முயங்கி
இன்றே இவணம் ஆகி . . . . (அகம்.225.)

என்னும் அகப்பாடல் காட்டுகின்றது.

இல்வாழ்க்கையில் தலைவி கொண்ட மனநிறைவும் மகிழ்ச்சியும் குறிப்பிடத்தக்கன. திருமணத்திற்குப் பின்பு தலைவியைக் காணத்தோழி வருகின்றாள். அப்போது தலைவி தலைவனின் பண்புகளைக் கூறித் தன்னைத் திருமணத்திற்கு உடன்படச் செய்த தோழிக்கு மகிழ்ச்சியுடன் நன்றி கூறுகிறாள். ‘தலைவன் நல்ல குடியில் பிறந்தவன் ; கூடியவர்களைப் பிரியாதவன் ; அல்ல சொற்களைச் சொல் லாதவன் ; அன்புமிக உடையவன் ; பாண்மகன் எழுப்பும் சிறந்த இசையினைக் காட்டிலும் தலைவன் எனக்கு மிக இனிமையானவன் ; திருமண நாளினும் இப்போது மேலும் இனியனாக உள்ளான் ’ ; என்று கூறி மகிழ்கின்றாள்.

குடிநன்கு உடையன் கூடுநர்ப் பிரியலன்
கெடுநா மொழியலன் அன்பினன் எனநீ
வல்லகூறி வாய்வதிற் புணர்ந்தோய்
நல்லை காணில் காதலந் தோழி
.. .. ... ..
வதுவை நாளினும் இனியனால் எமக்கே (அகம்.352)

இப்பாடலின்வழி தலைவியின் மனநிலைவும் மகிழ்ச்சியும் புலப்படுகின்றன.

சங்ககால இலக்கியமான ஐங்குறுநூற்றில் முல்லைத்திணையில் நூறுபாடல்கள் பேயனார் என்னும் புலவரால் பாடப்பட்டுள்ளன. இந்த நூறுபாடல்களும் முல்லையின் உரிப்பொருளாகிய இருத்தலும் இருத்தல் நிமித்தமும் எனும் ஒழுக்கத்தை முறையாக விளக்குவனவாகவும், இவ்வொழுக்கம் நிகழும் முல்லை நிலத்தின் வருணனையாகவும் அமைந்துள்ளன. ‘செவிலிகூற்று பத்து’ என்ற தலைப்பிலமைந்த முதல் பத்து பாடல்கள் தலைவன் தலைவி மகிழ்ந்து இல்லறம் நடத்தும் சிறந்த இன்பியல் காட்சியாகப் பேயனாரால் பாடப்பட்டுள்ளது. தலைவி அன்பிற் சிறந்த தலைவனை மணந்து கற்பொழுக்கத்தில் ஒழுகுகின்றான். இல்லறத்தின் அருங்கலனென ஆன்றோர் புகலும் புதல்வனையும் பெற்றுத் தலைவனுடன் இனிது வாழ்கின்றாள். தலைவனும் தலைவியைப் பிரியாது அன்புடன் உறைகின்றான். அவர்கள் வாழும் மனை பல்வளமும் நிறைந்து பொலிவுடன் விளங்குகின்றது. இத்தகு தலைவியின் கடிமனை வாழ்க்கையைக் கண்டு செவிலி மகிழ்வுற்றாள். நற்றாய்க்குத் தான் கண்ட இனிய காட்சியைச் சித்தரிப்பதாய் இப்பகுதி அமைந்துள்ளது.

“அன்னாய், தன் இளங்கன்று இடையிலே கிடப்ப, இருமருங்கும்

மானும் பிணையும் கிடந்தது போலப் புதல்வன் நடுவிலே விளங்க. அவ்விருவரும் கிடந்த கிடக்கை தெளிவாகப் பெரிதும் இன்பந்தருவதாகும். இவ்வுலகமும் இதன் மேலுள்ளதாகிய வானுலகம் ஆகிய இரண்டன் கண்ணும் அவ்வின்பம் பெறுதல் அரிதாகும் (ஐங்.401). தன்புதல்வனை அணைத்துக் கிடந்த தாயின் புறத்தைத் தழுவி, அவள் கணவன் விருப்பமுடையவனாய் வதிந்து கிடந்த கிடக்கை, பாணர்களின் யாழின் நரம்பிடை எழும் இசைபோல இனிமைத்தாதலேயன்றி நற்பண்பினையும் உடையதாகும் (402). பரந்த பெருஞ்சிறப்பினையுடைய தந்தையின் பெயரையுடைய தன்மகன், முறுவல் விளங்கும் இனிய புன்னகையைச் செய்து சிறுதேருருட்டித் தளர்ந்த நடையினனாய் செல்லுதல் கண்டு, தலைமகற்குத் தான்காதலித்துப் புணர்ந்த மனைவிமாட்டுளதாகி அன்பு போல் அம்மகனிடை மேவிய அன்பும் பெரிதாய் இராநின்றது (403). தலைமகன் ஒளிபொருந்திய நுதலினையுடைய அரிவையாகிய தன் மனைவி மகனுக்குப் பாலூட்டத் தான் அவளது முதுகின்புறத்தே நன்கு தழுவிக்கிடந்தான் (404). முல்லைநில நாடனுடைய புதல்வற்குத் தாயாகிய தலைவி, ஒள்ளிய சுடர்விட்டெரியும் பாண்டிலில் ஏற்பட்ட செவ்விய விளக்குப் போல அவன் இல்வாழ்க்கைக்கு உரிய விளக்கமாயினாள் (405). தேன்நுகரும் வண்டினம் ஒலிக்கும் போது கள் நிறைந்த முல்லைக்காட்டனையுடைய நாட்டுக்குரியயோன், காதல் நிறைந்த மையுண்ட கண்களையுடைய மகன்தன்முன் விளையாட்டயர, தான்தன் காதலியைத் தழுவிய வண்ணம் அவளை இனிது நோக்கியிருந்தான் (406). மென்புலமாகிய முல்லைநிலத்தை உடைய நாட்டிற்குரியோன் தான் விரும்பிய காதலியைத் தழுவி உயிர்களை இசையின்பத்தில் படிவிக்கும் யாழில் பாணர் யாத்திசைத்த இசைப்பயனைத் தேர்ந்து நுகரும் இன்பம் போலும் புணர்ச்சியினை நுகருவானாயினான் (407). தலைவன் புறத்தொழுக்கம் இன்றி மனைக்கண் இருந்து அறஞ் செய்து புகழ்வளர்கும் திறம் போற்றிப் பாணர் முல்லைப் பண்ணைப் பாடவும், தலைவிபால் அயரா அன்பும் அழிவில் கூட்டமும் சிறந்த விளங்குமாறு தோன்ற ஒளிபொருந்திய நெற்றியையுடைய தலைவி முல்லைப்பூச் சூடவும், வெறுப்பில்லாத கொள்கையினையுடைய நெடுந்தகையாகிய தலைமகன் தன்புதல்வனொடு சிறந்து இனிதிருந்தனன் (408).

பாணர் முல்லை பாடச் சுடரிழை
வாணுதல் அரிவை முல்லை மலைய
இனிது இருந்தனனே நெடுந்தகை
துனிதீர் கொள்கைத்தன் புதல்வனொடு பொலிந்தே

(ஐங்.408)

தந்தை தன்புதல்வனை அணைத்திருக்க, மெல்லிய மொழியினையுடைய அப்புதல்வற்குத் தாயாகியாள் அவ்விருவரையும் தழுவிக்கிடந்தாள். ஆகவே அவர் கிடந்த கிடக்கை மிக இனிதாயிருந்தது. மேலும் அவ்வின்பத்துக்கு மிக்க பரப்பினையுடைய இவ்வுலகு முற்றும் ஒப்பாகும் (409). மாலைப் பொழுதில் இல்லின் முன்னுள்ள முற்றத்தில் குறுகிய கால்களையுடைய கட்டிலில் தலைமகன் தன்மனைவி துணையாகத் தன்புதல்வன் மார்பின்மேல் இவர்ந்து ஊர்தலால் எழும் மகிழ்ச்சியோடு கூடிய நகை கொள்ளற்கியைந்த இன்பக் காலத்திற்குப் பாணனது யாழ் செய்த பண்ணிசை ஒத்திருந்தது ; ஆயினும் அதன் பிணிப்பு அத்துணை வன்மை இலதாயிற்று காண்'', என்று செவிலித்தாய் மகிழ்ந்த உள்ளத்தாளாய்ப் போற்றுவதாகப் பேயனார் பாடியுள்ளார்.

தலைவனுக்கு வேண்டியவாறு அவன் உள்ளம் உவப்பத் தலைவி வாழ்ந்த வருகின்றாள் என அவளது இல்லறப் பாங்கைச் செவிலித்தாய் புகழ்ந்து கூறுவதை ,

முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்
தான்துழந்து அட்ட தீம்புளிப் பாகர்
இனிதுஎனக் கணவன் உண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே (குறுந்.167)

என்ற பாடலால் அறியலாம்.

இவ்வாறு இனிய இல்லறத்தில் ஈடுபட்டு வாழ்கையில் தலைவன் வேந்தனுக்கு உற்றுழி உதவப் போர்க்களம் செல்லவோ அல்லது தனது இல்வாழ்க்கைக்குத் தேவையான பொருளீட்டவோ தன்காதல் மனையாளைப் பிரிந்துசெல்ல நேரிடுவதுண்டு. அவ்வாறு பிரிவுநேர்கையில் தலைவன் தான் கார்காலத் தொடக்கத்தில் மீண்டு வருவதாகக் கூறிச்செல்வான். அவ்வாறு வினைவயின் பிரிந்து சென்ற தலைவன் தான் குறித்துச் சென்ற பருவம் வருவதற்கு முன்பே வினைமுடித்துத் தன்மனையாளை வந்தடைகின்றான். அப்பொழுது அவன் உள்ளம் நிறைந்த உவகையுடன் தன்தலைவியிடம் என்னவெல்லாம் கூறி மகிழ்கின்றான் என்பதை ஐங்குறுநூறு முல்லைத்திணையில் பேயனார் மிக அழகாகப் பாடியுள்ளார். ''அழகிய கூந்தலையுடைய நங்கையே ! அழகிய நம்முல்லைநிலத்தில் மேகந்திரண்டு மழைபெய்வதால் சிறந்த கார்ப்பருவம் தொடங்கிவிட்டது. நமது கானாற்றிலே பெருகிவரும் விருப்பந்தருகின்ற புதுப்புனலிலே நாம் விளையாட்டயர்வோம் ; விரைந்து என்னோடு வருவாயாக (ஐங்.411).

குலமகளிர்க்குரிய நற்பண்புகள் நிறைந்த நங்கையே ! உன்னுடைய நுதல் போன்று பல்வேறு மணமும் விரவிக்கிடக்கின்ற நமது முல்லைப் பரப்பிலே உன்னைப் போலவே மயில்கள் களித்துக் கூத்தாடுகின்றன. இந்நிலத்திற்கும், காதலர் இன்புற்று இனிதிருத்தற்கும் சிறந்த கார்ப்பருவம் தொடங்கிவிட்டது ; அது எதற்கெனில் நாம் ஒருவரை ஒருவர் நொடிப் பொழுதும் இன்றியமையேமாய் விரும்பி இன்புற்றிருத்தற்கே ஆகும் (413). நங்காய் ! உன்னைப் பிரிந்திருந்த காலத்து இடையறாது விரும்பி நினைத்த பருவமானது இனிய கார்ப்பருவம் ஆகும் ; அப்பொழுது இடையறாது விரும்பி நினைத்த முல்லை நிலமும் இம் முல்லை நிலமேயாகும் ; இப்பொழுது இப்புறவில் தம்மனதிற்கினிய காதலரோடு கூடியிருத்தல் மிகவும் இனிமையுடையதாகும். இப்பருவத்தில் அக் காதலர்தாம் பிரிவின்றி ஒருங்கிருந்து இன்புற்றால் இளமை பெரிதும் இனிதாகும். ஆதலால் இந்த இடத்தையும் காலத்தையும் செய்தவத்தால் பெற்ற நாம் இனிது இன்புற்றிருப்போம் வருக (415). மகிழ்ச்சியுடைய வண்டுகள் முல்லைநிலப் பரப்பில் கார்ப்பருவ வருகையால் மலர்ந்த மலர்களில் தேன் தேர்ந்துண்டு, அம்மலர்களின் நிறைந்த பூந்துகள் தம்மேல் படிதலாலே பொன்னிறம் பெற்றுப் புத்தழகுடன் இன்னிசை முரல்தற்கிடனான அழகிய புதர்களிடையே களிறுகள் அன்பால் தத்தம் பெண்யானைகளைத் தழுவி நின்றன. இனி நாமோ ஒளிவீசும் பொற்றொடி அணிந்த மடப்பத்தினையுடைய நங்காதலியை இனிதே கூடிக் களியா நின்றேம் ; முல்லையம் புறவும் கார்ப்பருவமும் வாழ்வதாக (416). இன்புற்றமர்ந்து வாழ்தற்கு இனிய முல்லை நிலத்தில் அதற்கியைந்த கார்ப்பருவம் தொடங்கியது ; இந்நிலக் கருப்பொருளாகிய காடுகள் நன்கு தழைத்து மலர்ந்து எங்கும் எழிலூட்டி நின்றன. எம்மாருயிர்க் காதலியும் எம்பிரிவினால் இழந்திருந்த பேரழகு எம் வருகையான் மீண்டும் வந்து விரவப்பெற்ற ஆர்வத்தோடு எம்மைத் தழுவிக் கொள்ளுவாளாயினாள் ; இனி எமக்குக் குறையேதுமில்லை (417)".

முல்லைநிலத் தலைவன் ஒருவன் தான் குறித்துச் சென்ற கார்காலத்தில் வினைமுற்றி மீண்டுவந்து தலைவியோடு இன்புற்ற போது,

வணர்ந்தொலி கூந்தல் மாஅ யோளொடு
புணர்ந்தினிது நுகர்ந்த சாரல் நல்லூர்
விரவுமலர் உதிர வீசி
இரவுப்பெயல் பொழிந்த உதவி யோயே. (நற்.139)
பெய்தினி வாழியோ பெருவான் யாமே
செய்வினை முடித்த செம்மல் உள்ளமொடு

இவளின் மேவினம். (குறுந்.270)

என்று மழையை வாழ்த்துகின்றான். முல்லைக்குரிய கார்காலம் உயிரினங்கள் புணர்ந்து மகிழும் வாழ்க்கைக்கு உகந்த காலமாகும்.

கற்புநெறியில் வாழும் தலைவனும் தலைவியும் வாழ்க்கையின் அனுபவங்களைப் பெற்று அவற்றின் நுட்பங்களை அறிந்து நன்னெறியில் வாழத்தலைப்படுவர். தலைவி இல்லறத்திற்கு ஏற்ற நல்லறங்கள் இவையென அறிந்து கடைபிடித்து வாழ்தல் சிறப்பாகும். இல்லற வாழ்வு சிறக்கத் தொல்காப்பியர்,

கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்
மெல்லியற் பொறையும் நிறையும் வல்லிதின்
விருந்துபுறந் தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள் (கற்.நூ.11)

எனக்கூறும் நல்லொழுக்க நெறிநின்று தலைவி வாழ்தல் வேண்டும்.

முல்லைப் பாடல்கள் தலைவியின் விருந்தோம்பல் பண்பாட்டைக் காட்டும் சிறப்பு மிக்கன. தலைவன் வினைமுடித்துத் திரும்பும்போது அவனுக்கு நனிவிருந்து படைக்க வேண்டும் என்னும் வேட்கையள் தலைவி. மெய்ம்மலி உவகையோடு நனிவிருந்து படைத்த தலைவியை

அரும்பெறற் காதலர் வந்தென விருந்து அயர்பு
மெய்ம்மலி உவகையின் . . . (குறுந்.398)

என்ற பாடலடிகள் உணர்த்தும். இல்லறக் கடமைகளுள் தலையாய பண்பாடு விருந்தோம்பல் ஆகும். தலைவன் தலைவி இருவரும் மனமகிழ்ந்து ஆற்ற வேண்டிய பண்பாட்டுக் கடமையாகும். எனவே இப்பண்பு மனமொத்த வாழ்வின் செம்மையைக் காட்டுவதாகும். இரவு நேரத்தில் விருந்தினர் வரினும் முகம் மலர்ந்து இனிது வரவேற்று உபசரிக்கும் பண்புடையவள் தலைவி என்பதை,

புறவி னதுவே பொய்யா யாணர்
அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின்

மெல்லியள் குறுமகள் (நற்.142:8-11)

என்னும் அடிகள் புலப்படுத்துகின்றன.

மேற்குறிப்பிட்டவாறு தலைவனும் தலைவியும் இணைந்து மகிழ்ந்து இல்லறநெறி போற்றும் பாங்கினைச் சித்தரிக்கும் முல்லைத்திணைக்கு உரிய பாடல்கள் 'இருத்தல்' என்னும் உரிப்பொருளை விளக்கும் சான்றாக அமைவன.

## இருத்தல் நிமித்தம்

இனிய இல்லறநெறியில் ஈடுபட்ட தலைவன் தனது வாழ்க்கைக்காகப் பொருள் ஈட்டுதற்பொருட்டோ அல்லது வேந்தனுக்கு உற்றுழி உதவப் போருக்குச் செல்லுதற்பொருட்டோ தங்காதல் மனையாளைப் பிரிய நேரிடுவ-துண்டு. இப்பிரிவு பொருளாதார அடிப்படையிலும் கடமையுணர்வு காரணமாக வும் அமைவது. அவர்களது இல்லறம் மேலும் சிறக்கப் பயன்படும் பிரிவாகவே உள்ளது. அச்சமயம் தலைவி மீண்டும் தலைவனோடு கூடி வாழ்தலையே தன்-கருத்தாக எண்ணி ஆற்றியிருப்பாள். அதுபோலவே தலைவனும் தன்கடமை கருதித் தலைவியைப் பிரிந்து வினைமேற் செல்வான். அவ்வாறு வினைமேற் செல்லும் தலைவன் 'கார்வரு பருவம் வருவேன்' (நற்.248 : 4) ; 'முன்னியது முடித்தனமாயின் நன்னுதல் வருவம் ' (நற்.169 :1) எனக் கூறிச் செல்வான். இதனால் தான் குறித்த கார்ப்பருவத்தில் தலைவன் தலைவியை வந்தடைதலும்; சிறிது காலந்தாழ்த்தி வினைமுடிந்தவுடன் வருதலும் உண்டு. தலைவன் தலைவி இருவரது ஆற்றாமை என்பது கார்காலத் தொடக்கத்தின் குறுகிய காலமேயன்றித் தொடர்ந்து நீடிப்பதன்று . கார்காலத் தொடக்கத்தில் தலைவன் வரக்காணாது தலைவிதன் ஆற்றாமையைத் தோழியிடம் கூறி வருந்துவாள். அதுபோல் தலைவனைப் பிரிந்த தலைவியின் நிலையறிந்து தலைவிக்கு ஆற்றாமை மிகா-வண்ணம் தோழி ஆற்றுவிப்பாள். மற்றொரு பக்கம் போர்வினைக்குச் சென்ற தலைவன் கார்கால மழை தொடங்கப் பாசறையில் தலைவியை நினைந்து ஆற்றாதிருப்பான் . போர்முடிந்ததும் முல்லைநாறுங் கூந்தலாளைக் காணும் பெருவிருப்பம் உடையவனாகவே காட்டப்பட்டுள்ளான். தேரைச் செலுத்தும் பாகனை விரைவாகச் செல்லுமாறு வேண்டுவான். இத்தகைய பொருளில் பாடப்-பட்ட பாடல்களே பெருமளவில் சங்க இலக்கியங்களில் முல்லைத் திணைக்-குரிய பாடல்களாக உள்ளன. இவை அனைத்தும் முல்லைத்திணையின் 'இருத்தல் நிமித்தம்' உணர்த்தும் பாடல்களாகக் கொள்ளத்தக்கன.

நற்றிணையில் இடம்பெற்றுள்ள முல்லைத்திணைக்குரிய பாடல்கள் 'இருத்தல் நிமித்தம்' என்ற பொருளுக்குரிய பாடல்களாக அமைந்துள்ளன. தலைவன் வினைவயின் பிரியக்கருதியதை அறிந்த தோழி, அவன் கவலையில்லாது சென்று வினைமுடித்து வருதல் கருதி, அவனிடம் ஐயனே ! எம்மை இங்கு நீங்கி வினைவயின் ஏகுவீராயின், யாம் வருந்தாது சீறூரின் கண்ணே உரைவோம். நல்ல குடியிலே பிறந்தாரைத் தனி வைத்தகாலை வருந்துதல் அவர்க்கியல்பன்றென உடன்பட்டுக் கூறுகின்றாள். இவ்வூர் தலைவனது ஊர் என்னும் நினைவே எம் பிரிவுத்துன்பத்தை ஆற்றி நும்மோடுறைவது போன்று அமைதிதரும் என்றாள்.

ஆடுடை இடைமகன் சூடப் பூக்கும்
அகலுள் ஆங்கண் சீறூ ரேமே
அதுவே சாலுவ காமம் அன்றியும்
எம்விட்டு அகறிர் ஆயின் கொன்னொன்று
கூறுவல் வாழியர் ஐய வேறுபட்டு
இரீஇய காலை இரியின்
பெரிய அல்லவோ பெரியவர் நிலையே (நற்:266)

அவ்வாறு பிரிவு மேற்கொள்ளும் தலைவன் கார்காலத் தொடக்கத்தில் திரும்பவருவதாகக் கூறுவான்.

சிறுவீ முல்லைத் தேங்கமழ் பசுவீ
பொறிவரி நன்மான் புகர்முகங் கடுப்பத்
தண்புதல் அணிபெற மலர வண்பெயல்
கார்வரு பருவம் என்றனர் . . . (நற் : 248)

தலைவன் குறித்துச் சென்ற கார்காலந் தொடங்க, தலைவன் வரக்காணாத தலைவிதன் ஆற்றாமையைத் தோழியிடம் கூறி வருந்துவாள்.

அருந்துயர் உழத்தலின் உண்மை சான்மெனப்
பெரும்பிறிது இன்மையின் இலேனும் அல்லேன்
கரைபொருது இழிதரும் கான்யாற்று இருகரை
வேர்கிளர் மாஅத்து அந்தளிர் போல
நடுங்கல் ஆனா நெஞ்சமொடு இடும்பை
யாங்கனந் தாங்குவென் . . . (நற் : 381)

தலைவன் பிரிவால் வருந்திய தலைவியைத் தோழி, முல்லை அரும்பும் பொழுது வருவேம் என்று அகன்ற தலைவன் மீண்டு வருமுன் அவை அரும்பும்படி வம்ப-மாரி பெய்யத்தொடங்கி இடிஇடித்துவிட்டது ; இது பருவமன்றென்றமையால் குறித்த பருவத்து வருவர் எனவும், பொய்ச்சூளால் அவர் அணங்கப்பெறுவரே என்று நீ வருந்தாதே எனவும் கூறி ஆற்றுவிப்பாள்.

மடவது அம்ம மணிநிற எழிலி
மலரின் மௌவல் நலம்வரக் காட்டி
கயலேர் உண்கண் கனங்குழை இவைநின்
எயிறேர் பொழுதின் எய்தரு வேமெனக்
கண்ணகன் விசும்பின் மதியென உணர்ந்தநின்
நன்னுதல் நீவிச் சென்றோர் நம்நசை
வாய்த்துவரல் வாரா அளவை அத்தக்
கல்மிசை அடுக்கம் புதையக் கால்வீழ்த்துத்
தளிதரு தண்கார் தலைஇ
விளியிசைத் தன்றால் வியலிடத் தானே (நற் : 316)

இதற்குள் தலைவன் வினைமுடித்த செய்தியைத் தோழி அறிகின்றாள். அதுதோன்ற தோழி தலைவியிடம் மடந்தாய் ! சென்று வினைமுடித்தமையால் உடன் சென்றிருந்த வீரர் பலரும் மலர்சூடி வந்தனர்காண் ; நம்தலைவரும் இப்ப னிக்காலத்து ஆங்குத் தங்கியிராது இன்னே வருவர் ; காக்கைத்தன் பார்ப்பைத் தழுவிக்கொண்டு சோற்றுப்பலியைக் கவரவேண்டிக் கிளையை அழைத்து மனையின்கண்ணே கூடினவாயிருக்கும் ; அதுபோல நீயும் நின் மகவைத் தழுவினையாகிக் கேள்வன் கொணருகின்ற நிதியத்தை அனுபவிக்குமாறு சுற்றத் தாரை அழைத்துச் சூழ இருத்தி மனையறம் நிகழ்த்துவாயாக என்றுகூறி ஆற்று விக்கின்றாள் (நற் : 367).

வினைமுடித்து மீளும் தலைவன் உடனே தலைவியைக் காணும் விருப் பால் தேரை விரைந்து செலுத்த வேண்டும் என்னுங் குறிப்புடனே தேர்ப்பாகன் கேட்குமாறு கூறுகின்றான். 'இரவுப் பொழுதாயினும் வந்த விருந்தைக் கண்டு மகிழா நிற்கும் ; யான் கூறிய சொற்பிழையாதபடி இல்லிருந்து நல்லறஞ் செய்யும் கற்பினையும் மென்மையான சாயலையும் உடைய நங்காதலி வாழும் பொய்யாத புதுவருவாய் உடைய ஊரானது ஈண்டுள்ள புறவின் கண்ணதாகும். ஆதலின் விரைந்து செல்லின் இன்னே அவளை மகிழ்ந்து முயங்கலாம். மழை

துளிப்பவும் அதற்குப் பெரிதும் வருந்தும் ஆட்டிடையன் மடிவிளியை அறிந்து பிறபுலம் புகாது மயங்கி நிற்கும். அதுபோல எங்காதலியும் யான் ஆற்றியிருந்திடுக என்று கூறிய என் கூற்றைக் கடவாது ஒருவாறு ஆற்றியிருப்பாள்காண்' என்ற பொருள் தோன்றக் கூறுவான்.

வானிகுபு சொறிந்த வயங்குபெயல் கடைநாள்
.. .. .. ...
புறவி னதுவே பொய்யா யாணர்
அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும்
முல்லை சான்ற கற்பின்
மெல்லியல் குறுமகள் உறைவின் ஊரே (நற் : 142)

வினைமுற்றி மீளும் தலைமகனை இடைசுரத்துக் கண்டோருள் ஒருவன், முன்பு இத்தலைவன் முன்பனிக்காலத்தில் ஆழிஅதிர இச்சுரத்தின் வழிச்சென்றான். இப்பொழுது கார்ப்பருவம் வரக்கண்ட தலைவன் குளிர்ந்த உள்ளத்தானாகி மீண்டு வருகின்றான். இவன் வாழ்வானாக ; இதற்கு யான் மகிழ்வேன் என்று மகிழ்ந்து கூறுகின்றான்.

மரந்தலை மணந்த நனந்தலைக் கானத்து
சென்றிசின் வாழியோ பனிக்கடு நாளே
இடைச்சுரத்து எழிலி உரைத்தென மார்பின்
குறும்பொறிக் கொண்ட சாந்தமொடு
நறுந்தண் ணியன்கொல் நோகோ யானே. (நற்.394)

தலைவன் குறித்த பருவம் கடந்ததனாலே தலைவி மிகவருந்துவாள் என்ற வாயில்களை நோக்கி, நீங்கள் வருந்த வேண்டாம். அவனது தேரைக் குதிரைகள் கொண்டு வந்து தந்தன ; அதுகண்ட தலைவி தானடைந்த துன்பமெல்லாம் நீங்குதலாலே விருந்து கொடுக்கும் விருப்பினளாய் உள்ளாள் என்று தோழி மகிழ்ந்து கூறுகின்றாள்.

சிறுவீ முல்லைப் பெரிதுகமழ் அலரி
தானுஞ் சூடினன் இளைஞரும் மலைந்தனர்
விசும்புகடப் பன்ன பொலம்படைக் கலிமாப்
படுமழை பொழிந்த தண்ணறும் புறவின்

நெடுநா ஒண்மணி பாடுசிறந்து இசைப்ப
மாலை மன்ற மணன்மலி வியனகர்த்
தந்தன நெடுந்தகை தேரே என்றும்
அரும்படர் அகல நீக்கி
விருந்தயர் விருப்பினள் திருந்திழை யோளே. (நற்:361)

மேற்கூறப்பட்ட பொருளில் பாடப்பட்ட பாடல்களே பெருமளவில் முல்லைத்திணைக்குரிய பாடல்களாக உள்ளன. இவை அனைத்தும் முல்லைத்-திணையின் 'இருத்தல் நிமித்தம்' உணர்த்தும் பாடல்களாகக் கொள்ளத்தக்கன.

சங்ககால அகப்பாடல்கள் அனைத்தையும் நோக்குகையில் தலைவன் தலைவியரிடையே பிரிவால் ஏற்படும் துன்ப உணர்வே பாடுபொருளாகப் பெரு-மளவில் அமைந்துள்ளதைக் காணலாம். இந்தப் பிரிவே தலைவன் தலைவியி டையே காதலை ஆழமாக்கவல்லது. பிரிவில்தான் காதலரிடையே பரிவும் அன்பும் பெருகும் ; ஒருவரையொருவர் உணர்ந்து போற்றும் பண்பும் வெளிப்-படும். துன்ப உணர்வைப் பாடும் கவிஞன் அந்நிலையிலுள்ள எல்லா மக்க-ளுக்கும் பொருந்துமாறு அவ்வுணர்வை வெளிப்படுத்துகின்றான். துன்ப உணர்வு மகிழ்ச்சிக்குரிய ஒன்றன்று எனினும் சிந்திக்க நீடித்து இன்பத்தைத் தருவதாகும். இம்மனநிலையே இலக்கியங்கள் துன்பச்சார்புடையதாகப் பெருமளவு படைக்கப்படுவதற்கும் விரும்பிப் படிக்கப்படுவதற்கும் காரணமா கின்றன எனலாம். இதுகுறித்து மு. வரதராசனார், "காதலைப் பாடும் புலவர்கள் காதலரின் இன்பநிலையைப் பாடுதல் மிகக் குறைவாகவே உள்ளது. பழந்தமிழ் இலக்கியத்தில் அகப்பொருள் பாட்டுக்களிலும் பாலைத்திணைப் பாட்டுக்களே பலவாக இருத்தல் காணலாம்" எனக்கூறுவது கருதத்தக்கது. மேலும் அவர் முல்லை , குறிஞ்சி மருதம் நெய்தல் திணைகளிலும் பிரிவுத் துயரத்தையும் ஏக்கத்தையுமே புலவர்கள் பாடினர் எனக் கூறுகிறார் (ப.91.இலக்கியத்திறன்). அதுபோல, சங்க இலக்கிய முல்லைத்திணைப் பாடல்களில் பிரிவை ஆற்றாது உள்ளத்தளவில் புலம்பும் பாடல்களே அதிகம் உள்ளன. அகப்பாடல்கள் குறிப் பாகக் கற்பொழுக்கம் கூறும் பாடல்களில் துன்ப உணர்வை வெளிப்படுத்தும் பாடல்கள் மிகுதற்குப் போரும், பொருளும், தலைவனின் மனமாற்றமுமே காரணங்களாகின்றன. அவ்வகையில் முல்லைத்திணைப் பாடல்களில் போரின் பொருட்டோ அல்லது பொருளீட்டவோ ஏற்படும் பிரிவினால் வெளிப்படும் துன்ப உணர்வே பாடுபொருளாய் அமைந்து இன்பம் பயக்கின்றது.

மேலும் குறிஞ்சித் திணைக்கு உரிப்பொருள் 'புணர்தல்' என்றாலும் புணர்ச்சிக்கு வாயிலாக அமையும் இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியற்கூட்டம், பகற்குறி, இரவுக்குறி, வரைவுவேட்கை போன்ற 'புணர்தல் நிமித்தங்களே' சங்ககால அகப்பாடல்களில் மிகுந்திருப்பதைப் போன்று முல்லைத்திணையில் தலைவனும் தலைவியும் சேர்ந்து வாழும் இருத்தல் ஒழுக்கத்தை வலியுறுத்தவே தலைவியின் ஆற்றாமையும், தலைவனின் ஆற்றாமையும் அடங்கிள்ள இருத்தல் நிமித்தப் பாடல்கள் மிகுதியும் அமைந்துள்ளன எனக்கூறலாம்.

இக்கால உரையாசிரியர்கள் முல்லைத்திணைப் பாடல்களில் தலைவி தலைவன் ஆற்றாதிருத்தலை ஆற்றியிருத்தலாகக் கூறி, அந்நிலையை முல்லைக்குரிய இருத்தல் ஒழுக்கமாக விளக்கினர். இவர்கள் தலைவனும் தலைவியும் இணைந்திருந்து இனிய இல்லறம் நடத்திய ஒழுங்கை இருத்தல் ஒழுக்கமாக எங்கும் விளக்கிக் கூறவில்லை. தொல்காப்பியப் பொருளதிகார உரையாசிரியர் களும் இக்காலத் திறனாய்வாளர்களும் கூறியுள்ள விளக்கங்களினின்று முல்லைத் திணைக்கு உரிப்பொருள் இருத்தல் என்பதா அல்லது ஆற்றியிருத்தல் என்பதா என்பதிலும் இருத்தல் நிமித்தம் என்பதில் எவையடங்கும் என்பதிலும் ஐயம் எழுதல் கூடும்.

சங்க இலக்கிய முல்லைத்திணைப் பாடல்கள் அனைத்தையும் நோக்கும் பொழுது நிலமும் காலமும் பொழுதும் மரமும் மலரும் புள்ளும் பிறவும் பின்னணியாக இருக்கக் கருத்தொருமித்த காதலர் இருவர் நடத்தும் இனிய இல்வாழ்க்கையினைச் சித்தரிக்கும் பாடல்கள் சிலவாகவும் ; வினைமேற் பிரிந்துசென்ற தலைவன் தான் குறித்த காலத்தில் திரும்ப வராத நிலையில் தலைவியின் ஆற்றாமையையும் பாசறையில் தலைவனது ஆற்றாமையையும் புலப்படுத்தும் பாடல்கள் பலவுமாக உள்ளன. கார்காலத் தொடக்கத்தில் தலைவி, தலைவனது ஆற்றாமையை உணர்த்தும் பாடல்களே முல்லைத்திணைப் பாடல்களாகப் பெருமளவு உள்ளதால் முல்லையின் உரிப்பொருளான இருத்தல் என்பதற்கு உரையாசிரியர் களும் திறனாய்வாளர்களும் 'ஆற்றியிருத்தல்' என்று பொருள் கொள்வதே பொருத்தமாகும் எனக்கருதியிருக்கலாம்.

இந்நிலையில் ஒரு தெளிவு காண முல்லைத்திணையின் உரிப்பொருளான இருத்தலும் இருத்தல் நிமித்தமும் என்பதில் இருத்தல் என்பதற்குக் தலைவனும் தலைவியும் இல்வாழ்க்கை மேற்கொண்டு ஒருவர் மற்றொருவர் உணர்வுகளைப் புரிந்து மதித்து வாழும் அகவொழுக்கமாகக் கூறுவதே

பொருத்தமாகும். வினைமேற் சென்ற தலைவன் குறித்த காலத்தில் வாராத நிலையில் துன்பம் மேலிடத்தலைவி, தலைவன் ஆற்றாமையைக் கூறும் பாடல்-களை இருத்தல் நிமித்தம் என்பதில் அடக்கிக் கூறினால் முல்லைத்திணையின் இருத்தலுக்கு ஆற்றியிருத்தல் என்று வலிந்து பொருள்கூற வேண்டியநிலை ஏற்படாது என்பதும் புலனாகும்.

# இயல் - மூன்று
# முல்லை நிலமக்கள்

பண்டைத் தமிழ்மக்களின் மனபாண்பும், வாழக்கைக் குறிக்கோளும், வாழ்வியல் நெறிகளும் பொருளிலக்கணத்தின் பாடுபொருளாயின. பண்டைத்-தமிழர் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தவர். அவர்களது வாழ்க்கையின் செம்மை குறித்து, இயற்கை வழியாக அறிவுரம் பெற்ற ஆன்றோர் பல ஒழுக்க நெறிகளைக் கண்டு, மக்கள் அறிந்து ஒழுகுமாறு தெரிவித்-திருக்கின்றனர். இவ்வொழுக்க நெறிகளைப் பொருளிலக்கணம் இயற்கைப்-பொருள்களின் வாயிலாக அறிவுறுத்தி வருகின்றது. நம்பொறிபுலன்களின் காட்சிக்கு அகப்பட்டு நிற்கும் இயற்கை முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என ஐவகையாகப் பிரித்துக் காட்டப்படுகின்றது. புலனெறி வழக்கிடைப் பயின்ற பொருள்கள் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என மூவகை யாகப் பிரிக்கப்பட்டன. முதற்பொருள் என்பது நிலமும் பொழுதும் ஆவன. கருப்பொருள்கள் தெய்வம், உணா, மா, மரம், புள், பறை, செய்தி, யாழ் போல் வன. உரிப்பொருள் புணர்தல், இருத்தல், பிரிதல், ஊடல், இரங்கல் என்பன.

ஈண்டு முல்லைத்திணைக்குரிய முதற்பொருள் காடும் காடுசார்ந்த நிலமும், கார்காலமும் மாலைப் பொழுதும் ஆவன.

**கருப்பொருள்**

| | | |
|---|---|---|
| தெய்வம் | : | திருமால் |
| உணா | : | வரகும் சாமையும் முதிரையும் |
| மா | : | உழையும் புல்வாயும் முயலும் |
| மரம் | : | கொன்றையும் குருந்தும் |
| புள் | : | கானக்கோழியுஞ் சிவலும் |
| பறை | : | ஏறுகோட்பறை |
| செய்தி | : | நிரை மேய்த்தலும் களைகட்டலும் கடாவிடுதலும் |
| யாழ் | : | முல்லையாழ் |
| பூ | : | முல்லையும் பிடவும் தளவும் தோன்றியும் |
| நீர் | : | கான்யாறு |
| ஊர் | : | பாடியுஞ் சேரியும் பள்ளியும் |
| பண் | : | முல்லைப்பண் |

| | | |
|---|---|---|
| தலைவன் | : | குறும்பொறைநாடன், அண்ணல், தோன்றல் |
| தலைமகள் | : | கிழத்தி, மனைவி |
| மக்கள் | : | இடையர்: இடைச்சியர், ஆயர் ஆய்ச்சியர், கோவலர் கோவிச்சியர், பொதுவர் பொதுவிச்சியர். |

முல்லைத் திணைக்குரிய உரிப்பொருள் இருத்தலும் அதன் நிமித்தமும் ஆகும்.

பழங்காலத்துத் தமிழ்மக்களின் வாழ்வியல் நெறியை அறிதற்குச் சங்ககால நூல்களே சிறந்த ஆதாரங்களாவன. காதல் வாழ்க்கை மேற்கொண்ட தலைவன் தலைவி இவர்களுடைய ஒழுக்கங்களையே இன்பநூலாகிய அகப்பொருள் இலக்கியங்கள் எடுத்தியம்புகின்றன. சங்கால எட்டுத்தொகை நூல்களுள் இன்பமே பொருளாகக் கொண்ட தொகை நூல்கள் நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, கலித்தெகை, அகநானூறு என்பனவாம். இவற்றுள் நல்லிசைப் புலவர் பலர் முதல், கரு என்னும் பொருள்களாலே காலமும் இடமுமாகிய அரங்கினைப் படைத்து, அவ்வரங்கில் தம்முள்ளத்தே தாமே படைத்துக்கொண்ட தலைவன் தலைவி தோழி, செவிலி, நற்றாய் பாங்கன் போன்ற உறுப்பினர்களைக் கொணர்ந்து நிறுத்தித் தமது கூற்றானன்றி அவ்வுறுப்பினர் கூற்றாகவே உரையாடல் நிகழ்வித்து ஓதுவார்கண்முன்னர் ஒரு நாடகக் காட்சிபோன்றே தோன்றுமாறு தம்கருத்தைச் சித்தரித்துள்ளனர். இவ்வாறு படைக்கப்பட்ட அகப்பொருள் பாடல்களில் முல்லைத்திணைக்குரிய பாடல்களில் இடம்பெறும் முல்லைநிலமக்கள் என்ற நோக்கில் அணுகுகையில் நாம் அவர்களைத் தலைமக்கள், மக்கள் என்ற இருவேறு நிலைகளில் பிரித்தறிய வேண்டியுள்ளது. முல்லைப் பாடல்களில் இடம்பெறும் தலைமகன் குறும்பொறைநாடன், அண்ணல், தோன்றல் என்றும் தலைமகள் கிழத்தி மனைவி என்றும் ; மக்கள் ஆயர் இடையர் ஆய்ச்சியர் இடைச்சியர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணலாம். இவர்களுள் தலைமக்கள் போர்வீரர், படைத்தலைவர், குறுநிலமன்னன் என்ற நிலைக்குரியவராகச் சித்தரிக்கப்பட்டுள்ளனர். தலைவன் வேந்தனுக்காகக் கடமை மேற்கொண்டு பிரிந்துள்ளான் என்று பல முல்லைப் பாடல்களில் குறிக்கப்படுகின்றன. போர் முடிந்து திரும்பும் போது போர்வல் இளையர் சூழத்திரும்புவதாகக் குறிப்பு உளது (அகம்:104; நற்:21). தலைவன் தானே தேரை ஓட்டிவராமல் பாகன் ஓட்டிவர அவனுடன் பேசிக்கொண்டு வருவதாகக் காட்டப்படுகின்றான். தலைவன் பாணர் பெருமகன் என்றும் கூறப்பட்டுள்ளான் (ஐங்.458). இக்குறிப்புகளால் வேந்தனுக்கு உதவுகின்ற நிலையில் எல்லையோரக் காவற்காடுகளில் உள்ள

சிற்றரசனாகவோ, படைத்தலைவனாகவோ தலைவன் காணப்படுகின்றான். தலைவனது பண்புகளாக வீரம் கொடை ஆகியவை கூறப்பட்டாலும் அவனது அன்பும் அருளுமே முல்லைப்பாடல்களில் காணப்படுகின்றன.

முல்லைநில வாழ்மக்கள் என்று வரும்போது அந்நிலத்திற்கே உரிய-வரான ஆயர் ஆய்ச்சியர் வாழ்க்கைநெறி சித்தரிக்கப்பட்டுள்ளது. எனவே இருவேறு நிலைகளிலும் சங்ககாலப் புலவர்கள் முல்லைநில மக்களின் வாழ்வியல் நெறியை எவ்வாறெல்லாம் எடுத்தியம்பியுள்ளனர் என்பதை அவர்கள் பாடிள்ள முல்லைத்திணைப் பாடல்களின் வழிநின்று காண்போம்.

**முல்லைக்குரிய தலைமக்கள்**

முல்லைக்குரிய உரிப்பொருள் இருத்தலும் அதன் நிமித்தமும் ஆகும். இருத்தலாவது தலைமக்கள் தமக்குச் சான்றோர் கற்பிக்கும் நெறிக்கண் நின்று, நல்லறமாய இல்லறம் புரிந்து வாழ்ந்திருத்தலாகும். தலைமகன் என்றும் தலைமகள் என்றும் வரும் வழக்காறுகளை நோக்கின், இவர் இருவர்பாலும் தலைமைக் குணங்கள் நிறைந்திருக்கும் என்பது பெறப்படும். இத்தலைமக்கள் ஊழ்வயத் தான் தம்மில்தாம் வயப்பட்டுக் கூடி அன்பாற் பிணிப்புண்டு, இன்புற்று, பின்னர்க் கரணவகையால் திருமணம் செய்துகொண்டு இல்லறம் புரியும் தகுதி பெறுவர். இல்வாழ்க்கை செம்மை எய்துவது குறித்துத் தலைமகன் பொருள் கருதியும், போர்க்காலங்களில் கடமை கருதி வேந்தற்குற்றுழி உதவும்பொருட்டும் தலைமகளைப் பிரிந்து செல்ல நேரிடுவதுண்டு. பிரிவுக்காலங்களில் தலைமகன் கார்காலத்திலோ அல்லது தான்மேற்கொண்ட வினைமுடிதற்குரிய காலத்திலோ மீண்டும் வருவேன் என்றுகூறிப் பிரிவான். அவன் சொல்லிய பருவத்தை எதிர்நோக்கி, தலைமகளும் அவன் பிரிவால் உண்டாகும் துன்பத்தைத் தாங்கி இல்லிருப்பாள். ஒரோசமயத்து தலைவி தலைவனை நினைந்து ஆற்றாது புலம்புமிடத்துத் தோழி, செவிலி முதலானோர் அவள் ஆற்றத்தகுவன கூறி ஆற்றியிருக்குமாறு செய்வர். பிரிந்து சென்ற தலைமகனும் தான் மேற்கொண்ட வினை-முடியும் வரை பிரிவுத்துயரை ஆற்றியிருப்பான். இவ்வாறு தலைமக்கள் இல்லறம் மேற்கொண்ட பாங்கும், பிரிவில் ஆற்றியிருக்கும் பண்பும் பொருளாகத் தலைமக்கள்பால் நிகழும் ஒழுக்க நிகழ்ச்சிகள் முல்லைத்திணைக்கு உரியவாய்ப் புலவர் பாடும் புகழ் பெறுகின்றன.

முல்லைப் பாடல்களில் இடம்பெறும் தலைமகன் வினைமேற்செல்லும்

68

தலைவன், பொருள்வழிச்செல்லும் தலைவன், இல்வதியும் தலைவன் என்ற மூன்று நிலைகளில் சிறப்பிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். தலைமகன் பொருள், வினை முதலியவற்றைக் குறித்துப் பிரியும் பான்மை உடையவனாயினும், தலைவியைப் பிரிந்தேகும் அவனது செயல் மிக்க நயமுடையதாகும். தலைவியோடு இல்லில் இருந்து வருகையில் தான் கருதிய பிரிவைக் குறிப்பாகவும் வெளிப்படையாகவும் தெரிவிப்பான். பொருளின் இன்றியமையாமையைப் புகழ்ந்த பேசுவான்; ஆள்வினை மாண்பை எடுத்தோதுவான்; தலைவியின் பிரிவச்சம் தீரும்வகையில் அன்புடைய மொழிகள் பலசொல்லித்தான் கருதிய பிரிவை மேற்கொள்வான். அவ்வாறு அவன் செல்லும் நெறியில் வாழும் விலங்குகளும் பறவைகளும் நிகழ்த்தும் அன்பொழுக்கம்தலைவனைத் தன் துணைவியாகிய தலைமகளை நினைந்து வருந்தக்காரணமாகும்.

மேற்கொண்ட வினையை முடிக்க விரையும் தலைமகன் தான் குறித்த பருவம் வரும் முன்பே அவ்வினையை முடித்து மீளுவது பெரும்-பான்மையாகும். வினைமுடியுமளவும் அதன்மேற்சென்ற அவனது உள்ளம் வினைமுடிவில் தோன்றும் இன்பத்தால், தன்பால் அன்புமிக்க தலைவியின் இன்பத்தை நினைக்கும். தலைமகளை, “உள்ளிய வினை முடித்தன்ன இனி-யோள்,” (நற்:3) என்றும் அவன் மகிழ்ந்து கூறக்காண்கின்றோம். அவன் மீண்டு விரைவாகச் சென்று தன் தலைவியைக் காண விரும்புகின்றான். அதனால் தன்தேரைச் செலுத்தும் பாகனுடன் சில தகுவன கூறத்தொடங்குவான்.

வினைமுடித்து மீளும் தலைமகன் தன் பாகனை நோக்கி, “ பாக, நாம் இதுகாறும் இவ்வினையை முடித்தற்பொருட்டு நெடுநாள் கழித்தோம் ; இந்நாட்-களையும் நோக்கின், இவை இன்பவுள்ளீடில்லாத பயனில் நாட்களாகும்” என்று சொல்லலுற்று,

எல்லாம் எவனோ பதடி வைகல்
பசுமுகைத் தாது நாறும் நறுநுதல்
அரிவை தோளிணைத் துஞ்சிக்
கழிந்த நாளிவண் வாழு நாளே (குறுந்.323)

என்று வருந்திக் கூறுகிறான். மேலும் தலைமகளைக் கூடியிருக்கும் நாள்களின் சிறப்பை நோக்கின்,

விரிதிரைப் பெருங்கடல் வளைஇய உலகமும்

அரிதுபெறு சிறப்பிற் புத்தேள் நாடும்
இரண்டும் தூக்கிற் சீர்சா லாவே
பூப்போல் உண்கண் பொன்போல் மேனி
மான்வரி அல்குல் குறுமகள்
தோள்மாறு படூஉம் வைகலோ டெமக்கே (குறுந்:101)

என்றே கூறுகின்றான். ஆதலால் தான் தலைவியைப் பிரிந்துறையும் நாட்களை இங்கே "பதடிவைகல்" என்று கூறுகின்றான். தலைவனின் உள்ளப்போக்கை உணர்ந்த பாகன் இனி தேரை விரையச் செலுத்துவதே பொருளாம் என்று கருதித் தேரை விரைந்தோட்டுவான்.

இதற்குள் கார்முகில் எழுந்த நல்ல மழையைப் பெய்யத் தொடங்குகிறது. இக்காலத்து மாலைப்பொழுது காதலரைப் பிரிந்து தனித்திருப்பார்க்கு வருத்தத்தைச் செய்யுமென்பதை இனிதறிந்த தலைவன் தான் கூறிச்சென்ற அதேகாலத்தில் தலைவியைச் சென்று சேர்ந்திடல் வேண்டும் என்ற விருப்பம் உடையவனாய், பாகனைத் தேரை விரையச் செலுத்தச் சொல்லுவான்.

துனிதீர் கொள்கைநங் காதலி இனிதுறப்
பாசறை வருத்தம் வீட நீயும்
கொய்சுவல் புரவிக் கைகவர் வயங்குபரி
வண்பெயற்கு அவிழ்ந்த பைங்கொடி முல்லை
வீசுகமழ் நெடுவழி ஊதுவண் டிரியக்
காலை யெய்தக் கடவுமதி . . . (அகம்.124)

வந்துவினை முடித்தனன் வேந்தனும் பகைவரும்
தந்திறை கொடுத்துத் தமரா யினரே
.. .. .. ..
முன்னியங் கூர்தி பின்னிலை ஈயாது
ஊர்க பாக ஒருவினை கழிய
.. .. .. ..
தண்குட வாயில் அன்னோள்
பண்புடை ஆகத் தின்துயில் பெறவே (அகம்.44)

இனி வினைமுற்றி மீண்ட தலைவன் தன்கடிமனை அடைந்து

தலைவியோடு கூடி இன்புற்றிருக்கின்றான். தான் கூறிச்சென்றது போலவே கார்ப்பருவம் வருமுன்பே வந்தடைந்த தலைமகன் மனைவியோடு இனி-திருக்கையில் கார்முகில் மழை பொழிகிறது.

கார் கலந்தன்றால் புறவே பலவுடன்
ஏர்பரந் தனவாற் புனமே யேர்கலந்து
தாதார் பிரச மொய்ப்பப்
போதார் கூந்தன் முயங்கினள் எம்மே. (ஐங்.417)

தலைவன் வினைமுடித்தவழித் தலைவியைக் காண்டற்குப் பெரிதும் வேட்கை உடையவனாய் விரைந்து வந்தமையை அவளிடம் கூறி மகிழ்விக்கின் றான். இக்கருத்தமைந்த பாடல்கள் ஐங்குறுநூற்றில் இடம்பெற்றுள்ளன. காட்டாக,

"மடந்தாய் ! கார்ப்பருவம் தொடங்கும் இற்றைநாள் நின்நினைவு இடையீடின்றி எம்மை வருத்துதலால் வருந்துகின்ற நெஞ்சமொடு, நின்னுடைய பேரழகினை மீண்டும் நினக்குத் தருதற்கு மிகவிரைந்து வந்தேன் ; நினக்குக் குறித்துச் சென்ற கார்ப்பருவம் தப்பாமல் விழிப்புடன் பேணி நின்னை நினைந்து வந்தேன்" என்றெல்லாம் உளமகிழ்வுடன் தலைவியிடம் தலைவன் கூறுவான்.

தலைவியின் மகிழ்ச்சி கண்ட தலைவன், "முகிலே யாம் வருமுன் பெய்திருப்பையாயின் வினைமுடியாமையானும் தனிமையானும் யாம் பெரிதும் துன்புற்றிருப்போம். இப்போது செய்வினை முடித்த செம்மல் உள்ளமொடு இவளின் மேவினேமாகி, குவளையினது புதியமலர் மணங்கமழும் நறிய மெல்லிய கூந்தலாகிய மெத்தென்ற படுக்கையின்கண்ணே கிடப்பேமாயினேம். ஆதலின் இனிமேல் நீ மின்னிச் சிதறி இடியிடித்து மழைபெய்து வாழ்வாயாக" என்று உவகையாற் கூறுகின்றான்.

கடிப்பிடு முரசின் முழங்கி இடியிடித்துப்
பெய்தினி வாழியோ பெருவான் யாமே
செய்வினை முடித்த செம்மல் உள்ளமோ
டிவளின் மேவின மாகிக் குவளைக்
குறுந்தாள் நாள்மலர் நாறும்
நறுமென் கூந்தல் மெல்லணை யேமே. (குறுந்.270)

இவ்வாறு தலைமகன் தான்மேற்கொள்ளும் வினையின்கண் கடமை

உணர்வு உள்ளவனாகவும் ; தன் மனையாளிடம் மாறாத அன்புடையவனாகவும் காட்டப்பட்டுள்ளான். மேலும் தான் வினைமுடித்து வருங்காறும் தலைவியை ஆற்றுவித்திருந்த தோழியையும், தான் நினைத்தவாறு தேரை விரையச் செலுத்திய தேர்ப்பாகனையும் தலைமகன் பாராட்டும் பண்புடையவனாகவும் காட்டப்பட்டுள்ளான்.

"சங்க இலக்கியங்களில் காட்டப்படும் தலைவியானவள் "கற்பும் காமமும் நற்பாலொழுக்கமும், மெல்லியற் பொறையும் நிறையும், வல்லிதின் விருந்து புறந்தருதலும், சுற்றம் ஓம்பலும், பிறவுமன்ன கிழவோள் மாண்புகள்" எனத் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள தலைமைப் பண்புகள் நிரம்ப உடையவளாகத் திகழ்கின்றாள். தலைவனும் தலைவியும் சுற்றமும் நட்பும் போற்ற இனிய இல்லறம் நடத்துகின்றனர். களவுக் காலத்தும் கடிமணக் காலத்தும் தலைவன் செய்த தலையளியை நினைந்து மகிழ்ந்து இருக்கும் தலைமகள் வருந்த, த லைமகன் பொருள் குறித்தும் வினைகுறித்தும் பிரிந்து செல்ல நேரிடும். அவ்வாறு தலைவன் பிரிந்தவழி, தலைவி துயர் மிகுந்து, தோழியர் முதலானோர் தேற்றத் தேறி, அவன் பிரியும் போது வற்புறுத்த சொல்லைப் பற்றுக்கோடாகக் கொண்டு ஒருவாறு ஆற்றியிரந்து, தலைவன் குறித்துச் சென்ற பருவத்தின் வரவு நோக்கித் தலைவி இல்லிருந்து நல்லறம் செய்து வருகின்றாள்.

தலைவன் குறித்துச் சென்ற பருவம் வருகின்றது. தலைவி தலைவனின் வருகையை எதிர்நோக்குகின்றாள். கார்காலம் தொடங்கியதைக் கண்ட தலைவி தோழியிடம் முல்லைகள் மலர்ந்தன ; முல்லைநிலம் கார்ப்பருவத்தாலே சிறந்து விளங்கிற்று ; நந்தலைவரோ இன்னும் வந்திலர் ; மாலைக் காலமும் வந்துவிட்டதே ! யான் என்செய்வேன் என்று வருந்திக் கேட்கின்றாள்.

முகைமுற் றினவே முல்லை முல்லையொடு
தகைமுற் றினவே தண்கார் வியன்புனம்
வாலிழை நெகிழ்த்தோர் வாரார்
மாலை வந்தன்றென் மாணலங் குறித்தே (குறுந்.188)

இவற்றைக் கேட்கும் தோழி இது பருவமன்று என்று வற்புறுத்துகின்றாள். ஆனால் தலைவி அவள் கூற்றை மறுத்துத் தலைவன் வருவதாகக் கூறிச்சென்ற கார்காலம் இதுதான் என்று வலியுறுத்திக் கார்கால நிகழ்ச்சிகளை மிக அழகாக

எடுத்துரைக்கின்றாள். இக்கருத்தமைந்த பாடல் அகநானூற்றில் இடைக்காடனார் பாடலாக இடம்பெற்றுள்ளது.

பேருறை தலைஇய பெரும்புலர் வைகறை
ஏரிடம் படுத்த இருமறுப் பூழிப்
புறமாறு பெற்ற பூவல் ஈரத்து
ஊன்கிழித் தன்ன செஞ்சுவல் நெடுஞ்சால்
வித்திய மருங்கின் விதைபல நாறி
இரலை நன்மான் இனம்பரந் தவைபோல்
கோடுடைத் தலைக்குடை சூடிய வினைஞர்
கரங்குபறைச் சீரின் இறங்க வாங்கிக்
களைகால் கழிஇய பெரும்புன வரகின்
கவைக்கதிர் இரும்புறங் கதூஉ உண்ட
குடுமி நெற்றி நெடுமாத் தோகை
காமர் கலவம் பரப்பி ஏமுறக்
கொல்லை உழவர் கூழ்நிழல் ஒழித்த
வல்இலைக் குருந்தின் வாங்குசினை இருந்து
கிளிகடி மகளின் விளிபடப் பெயரும்
கார்மன் இதுவால் தோழி போர்மிகக்
கொடுஞ்சி நெடுந்தேர் பூண்ட கடும்பரி
விரியுளை நன்மான் கடைஇ
வருதும் என்றவர் தெளிந்த போழ்தே. (அகம்.194)

பருவவரவு கண்டு தலைவி வருந்துவது ஒருபுற மிருக்க, தோழியும் இதனைக்காணின் நம் தலைமகள் எவ்வாறு ஆற்றுவாள் எனக்கலங்கி நிற்கின்றாள். தோழியின் துன்பத்தைக் கண்ட தலைவி அவளைத் தேற்றுவதும் தன்கடனாதலை உணர்கின்றாள். தோழியைப் பார்த்து, “தோழி, கொன்றை புதிய பூக்களை மலர்ந்து கானத்தில் கார்வரவு காட்டுகின்றது ; எனினும் இதனைக் கார்ப்பருவம் என்று தேறேன் ; கார்ப்பருவமாயின் காதலர் தவறாமே வந்திருப்பர்; வாராமையால் இதனைக் காரென்று கொள்ளேனாயினேன் ; மேலும் நிலம் புடைபெயர்வ-தாயினும் காதலர் கூறிய சொல் புடைபெயர்தல் இலர் ” என்று கூறுவாள்.

. . . புதுப்பூங் கொன்றைக்
கானம் கார்எனக் கூறினும்

யானோ தேறேன் அவர்பொய் வழங்கலரே (குறுந்.21)
அம்ம வாழி தோழி காதலர்
நிலம்புடை பெயர்வ தாயினும் கூறிய
சொற்புடை பெயர்தலோ இலரே (நற்.289)

என்கிறாள்.

மற்றொருமுறை தலைமகள் தோழியை அழைந்துத் "தோழி, இதோ கார்ப்பருவம் வந்துவிட்டது ; பிச்சியின் அரும்புகள் நன்கு சிவந்தன ; இதுகண்டு நான் மருள்வேனாயினேன் ; காரணம் ஆற்றாமையன்று ; கார்மழையின் முழக்கத்தை அவர் கேட்பின், நம்மை நினைந்து செய்வினை முடியாது மீள்வரோ என்று அஞ்சும் அச்சமே தவிர வேறன்று" (குறுந்.94) என்கிறாள். மேலும் செய்வினை "முடியாது மீளுதல் ஆண்மையன்று எனப்பெரியோர் கண்ணினர். இதனை முன்பு துணியாத என்நெஞ்சம், இப்போது துணிந்தமையின், யான் ஆற்றியிருப்பேனாயினேன். இத்துணிவிற்கு என்மனத்து வண்கண் துணையாயிற்று" என்பாள்,

. . . . . . . . . காதலர்
பேணா ராயினும் பெரியோர் நெஞ்சத்துக்
கண்ணிய ஆண்மை கடவ தன்றுஎன
வலியா நெஞ்சம் வலிப்ப,
வாழ்வேன் தோழிஎன் வன்க ணானே (குறுந்.341)

என்று பெருமிதம் தோன்றக் கூறுகின்றாள்.

என்றாலும் தலைவன் வரவு நீட்டித்தவிடத்து தலைவிக்கு ஆற்றாமை மிகுகின்றது. தலைவனிடம் சென்று தன்நிலையை எடுத்துரைக்க வல்ல தூதினை அனுப்ப எண்ணுகின்றாள். அவ்வாறே தூதுவிட்டுத் தலைவன் வரவு நோக்கி இருக்கும் தலைமகட்கு ஒருநாள் பாணன் வந்து தலைவனது வருகையை உணர்த்துகின்றான். அதுகேட்டு எல்லையில் இன்பமுறும் தலைவி,

நீகண் டனையோ கண்டார்க் கேட்டனையோ
ஒன்று தெளிய நசையினம் மொழிமோ
வெண்கோட் டியானை சோணை படியும்
பொன்மலி பாடலி பெறீஇயர்

யார்வாய்க் கேட்டனை காதலர் வரவே (குறுந்.75)

என்று வினவி, அவர் வருகையை உணர்த்தி நீ யான் தரும் பெருநிதியைப் பெற்றுச் செல்வாயாக என்று மகிழ்ந்து கூறுகின்றாள். மேலும் மாலைப் பொழுதில் பிரிந்துசென்ற தம்தலைவர் மீண்டு வருதலைக் காணும் மகளிர் தவம் பெரிதும் செய்தோராவர் எனும் பொருள்படத் தோழியை நோக்கி,

நோற்றோர் மன்ற தோழி தண்ணெனத்
தூற்றுந் துவலைப் பனிக்கடுந் திங்கள்
. . . . . . . . . புன்கண் மாலை
அரும்பெறற் பொருட்பிணிப் போகிப்
பிரிந்துறை காதலர் வரக்காண் போரே (குறுந்.344)

என்று கூறுகின்றாள்.

வினைமுற்றிய தலைவன் மீண்டும் வரும்நாளில் தலைவி தன்துயர் எல்லாம் மறந்து விருந்துசெய்யும் விருப்பினளாய் முயன்று இனிய விருந்துணவைச் செய்து மனமகிழ்வுடனும் இன்னகையுடனும் காணப்படுவாள்.

சங்க இலக்கிய அகப்பாடல்களில் தலைமக்களையடுத்துச் சிறந்த இடம் பெறுபவள் தோழியாவாள். தலைவிக்கு நிகரான சீரும் சிறப்பும் உள்ளவள் ; தலைவியின் நலமே தன்வாழ்வின் குறிக்கோளாகக் கருதும் இயல்புடையவள் ; இவள் தலைமகளை வளர்த்த செவிலியின் மகளாவாள் ; . அறிவும் அன்பும் மிக்கவள் ; இளமையிலிருந்தே இவள் தலைமகளுக்கு இன்றியமையாத் துணையாய் இருந்து இன்ப துன்பங்களில் பங்குகொள்வாள்.

களவுக்காலத்தில் தலைமகளுக்கு உறுதுணையாய் இருந்த தோழி அவர்கள் மணந்து இல்லறம் புரிவதைக் கண்டு மகிழ்ச்சியடைகின்றாள். இவ்வாறு இருக்கும் நாளில் தலைவன் வினைபொருட்டுப் பிரிய நேருகையில், தலைமகளை ஆற்றுவிக்கும் பொறுப்புத் தோழிக்கு உண்டாகிறது. தலைமகளை ஆற்றுவிப்போர் நுண்ணறிவும் மென்மொழியும் உடையவராய் இருத்தல் வேண்டும். தோழி இத்தகுதி பெற்றவளாய் விளங்குகின்றாள்

தலைவனது பிரிவினால் ஆற்றாளாகிய தலைவியை ஆற்றுவிக்கத்

தொடங்கி, முதற்கண் தலைவனது அன்புமிகுதியைக் கூறித் தேற்றுகின்றாள். அவள் தலைவியை நோக்கி, தலைவியே ! தலைவன் நின்பால் பெரிதும் விருப்ப முடையவன் ; அவன் சென்ற வழியும் மனத்தே அன்பு தோற்றுவிக்கும் அமைதி யுடையதாகும் ; அதனால் தாம் குறித்த பருவத்தில் வந்தடைவர் என்று கூறித்-தேற்றுகின்றாள்.

நசைபெரி துடையவர் நல்கலு நல்குவர்
பிடிபசி களைஇய பெருங்கை வேழம்
மென்சினை யாஅம் பொளிக்கும்
அன்பின தோழியவர் சென்ற வாறே (குறுந்.37)

அப்பொழுது தலைவனது வருகை நீட்டிக்கின்றது ; தலைமகள் பிரி-வாற்றாது பெரிதும் துயரடைகின்றாள். தலைவியின் துன்பத்தைப் போக்க-விழையும் தோழி அறிவுடைப் பெருமக்களை அணுகித் தலைவன் மீண்டு வருங்காலத்தை அறிய முயலுகின்றாள். தோழி அறிவனை நோக்கிப் ‘பெரியீர் ! நீயிர் எப்பொழுது கடைப்பெயல் வாடைவரும் என்று எமக்குக் கூறுமின் ; ஏனெனில் அதுவே எந்தலைவர் எம்பால் மீண்டுவருங்காலமாகும். அவ்வாறு கூறுவீராயின் செந்நெல்லாகிய சோற்றை வெண்ணெயோடே ஓரில்லத்தில் பிச்சையாகப் பெற்று நிரம்பவுண்டு, சேமச்செப்பில் தண்ணீரும் பெற்று மகிழ்வீராக’, என்று கூறிக்கேட்கின்றாள் (குறுந்.277).

பின்னரும் தலைமகளது பிரிவுத்துன்பம் மிகுகின்றது. கார்ப்பருவமும் வந்துவிடுகிறது. அதனால் தலைவியை ஆற்றுவிக்கும் கடமை தோழிக்கு மிகுகின்றது. அவள் தலைவியை நோக்கி, ‘தோழி, இப்போது வரும் மழை வம்பமழை ; இதனை மெய்யான மாரியெனப் பிறழக் கொண்டு கொன்றைகள் மலர்ந்திருக்கின்றன. தலைவர் குறித்த கார்ப்பருவம் இதுவன்று ; அவர் குறித்த பருவம் வருமுன்பே இவை மலர்ந்தன ; நீ கவலற்க’ என்று தேற்றுகின்றாள்.

மடவ மன்ற தடவுநிலைக் கொன்றை
கல்பிறங் கத்தஞ் சென்றோர் கூறிய
பருவம் வாரா அளவை நெரிதரக்
கொம்புசேர் கொடியிணர் ஊழ்த்த
வம்ப மாரியைக் காரென மதித்தே (குறுந்.66).

தலைவன் வருநாட்கு இடைக்காலத்தில் தலைவியின் மெலிவுகண்ட

தோழி தலைவியை நோக்கிக் கார்ப்பருவம் வந்துவிட்டது ; இனித் தலைவர் தவறாமல் வருவார் என்று எடுத்துரைக்கின்றாள்.

முல்லை வைந்நுனை தோன்ற இல்லமொடு
பைங்காற் கொன்றை மென்பிணி அவிழ

கருவி வானம் கதழுறை சிதறிக்
கார்செய் தன்றே கவின்பெறு கானம்

மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்
உவக்காண் தோன்றும் குறும்பொறை நாடன்
ஆய்தொடி அரிவைநின் மாணலம் படர்ந்தே (அகம்.4)

குறித்த பருவத்தில் தலைவன் வந்துழித் தோழி தலைமகளிடம் அவனது வரவினையும் அன்புடைமையையும் பாராட்டிக் கூறுகின்றாள்.

மாபுதல் சேர வரகிணர் சிறப்ப
மாமலை புலம்பக் கார்கலித் தழைப்பப்
பேரமர்க் கண்ணி நிற்பிரிந் துறைநர்
தோடுணை யாக வந்தனர்
போதவிழ் கூந்தலும் பூவிரும் புகவே (ஐங்.496).

வினைமுற்றி மீண்டு வந்த தலைமகனைத் தோழி மனதார வாழ்த்திப்-பாராட்டுவதாகப் பலபாடல்கள் உள்ளன. கரிய பெரிய வானம் அதிரும்படி முழங்கப் பெய்த மழையினால் நிலம் குளிர்ந்து காடுகள் தளிர்த்தன ; உழவர்கள் ஏர்மங்கலம் பாடுகின்ற இனிய குரல் ஒலிப்பவும் மான்கள் திரியவும் நிரம்ப மழையைப் பெய்து கார்ப்பருவம் உலகிற்கு உதவியது. தலைவனே தலைவியின் துன்பத்தைப் போக்கும்படி அரியதோர் செவ்வியில் மீண்டு வந்தனை. பெருமானே ! நீ

இனிதுசெய் தனையால் வாழ்கநின் கண்ணி
வேலிசுற்றிய வால்வீ முல்லை
பெருந்தார் கமழும் விருந்தொலி கதுப்பின்
இன்னகை இளையோள் கவவ

மன்னுக பெருமநின் மலர்ந்த மார்பே (அகம்.314)

என்று மகிழ்ந்து கூறுகின்றாள். மேலும் தலைவனே ! மாலைப் பொழுதில் அரியவினை முடித்த பெருமிதம் நிரம்பிய உள்ளத்தோடு நீவந்து சேர்ந்தது

கடவுட் கற்பொடு குடிக்குவிளக் காகிய
புதல்வற் பயந்த புகழ்மிகு சிறப்பின்
நன்ன ராட்டிக் கன்றியும் எனக்கும்
இனிதா கின்றால் சிறக்கநின் ஆயுள் (அகம்.184)

என்று கூறி வாழ்த்துகின்றாள்.

முல்லைத் திணைக்குரிய பாடல்களில் சில தோழியின் தாயாகிய செவிலியின் கூற்றாகக் காணப்படுகின்றன. "ஆய்பெருஞ் சிறப்பின் அருமறை கிளத்-தலின், தாய்எனப் படுவோள் செவிலியாகும்" என்பார் தொல்காப்பியர், தலைமகள் தலைமகனோடு கூடி இல்லறம் செய்து வருகையில் அவர்களைக் கண்டு மகிழ வருகின்றாள். தலைவனது காதற்சிறப்பும், இருவரது வாழ்க்கைச் சிறப்பும் செவிலிக்குப் பெருமகிழ்ச்சியைத் தருகின்றன. அவள் பின்னர் தன்மனைக்குச் சென்று தலைமகளின் நற்றாயைக் கண்டுத் தான்கண்ணுற்ற அரிய காட்சிகளை இனிது எடுத்துரைக்கின்றாள். இப்பொருளமைந்த இருபாடல்கள் குறுந்தொகையிலும் (குறுந்.167 ; 242), செவிலிகூற்றுப்பத்து என்ற தலைப்பில் பத்துப்பாடல்கள் ஐங்குறுநூற்றிலும் உள்ளன.

கானங் கோழிக் கவர்குரல் சேவல்
ஒண்பொறி எருத்தின் தண்சிதர் உறைப்பப்
புதல்நீர் வாரும் பூநாறு புறவில்
சீறூ ரோளே மடந்தை ; வேறூர்
வேந்துவிடு தொழிலொடு செலினும்
சேந்துவரல் அறியாது செம்மல் தேரே. (குறுந்.242)

இப்பாடல் செவிலி நற்றாயிடம் கூறுவதாக அமைவது. "தலைவன் தலைவியைப் பிரியாது உறைகின்றான் ; எச்செயல் குறித்தும் பிரிந்து செல்வதில்லை ; அரசனது ஏவல் கடத்தற்கரிதாதலின், அதன்பொருட்டு மாத்திரம் அரிதிற் சிலகால் வேற்றூர் போவான் ; போயினும் உடனே மீள்வான்" என்பது இதன் கருத்தாம்.

தலைமகள் முல்லைநிலத்துச் சீறூரில் உள்ளாள் ; முல்லைப் புறவில் புதல்கள் பல இருக்கின்றன. அவற்றில் மழைத்துளி நிறைந்து சொட்டுகிறது. அப்புதலில் வாழுங் கானங்கோழியின் கழுத்திடத்தே அங்கே சொட்டிய நீர்த்துளிகள் துளிக்கின்றன என்று செவிலி கூறுவது, தலைவியது இல்லத்தின் செல்வச்செழிப்பையும், தலைவன் அருள்நிரம்பிய அறச்செயல் புரிவதையுங் குறிக்கின்றது.

மாங்குடிகிழார் என்ற புலவர் புறநானூறு (335) பாடலொன்றில் முல்லைநிலச் சீறூர் ஒன்றில் வாழுங் மக்களுடைய வாழ்க்கைக் கூறுகளை அவரணியும் பூவும், உண்ணும் உணவும், அவரிடை நிலவும் குடிவகையும், பரவும் கடவுள் நிலையும் வகுத்துக் கூறுகின்றார். முல்லைநிலத்துச் சிறுகுடியில் வாழ்வோர் குரவு, தளவு, குருந்து, முல்லை என்ற நான்கு மலர்களை அணிவர்; அவர்க்கு உணவாவன வரகு, தினை, கொள், அவரை என்ற நான்குமாம்; அவரிடையே நிலவும் குடிவகை துடியன், பாணன், பறையன், கடம்பன் என்ற நான்குமாம். குடிவகையில் வேளாளர், வணிகர், அரசர், அந்தணர் எனப்பொதுவகையில் பலகுடிகள் இருக்கின்றன எனினும், மேலே கூறிய பூவணிந்து, வரகு முதலியவற்றைக் கொடையாகப் பெற்றுண்ணும் வகையில் சிறந்த குடிகளாதலின் துடியன் முதலாயினாருடைய குடிகளை எண்ணி "இந்நான்கல்லது குடியுமில்லை" என்றார். மறங்கிளர்வித்துப் புகழ்பாடிச் சிறப்பெய்துவித்தலின் அணியோடும் உணவோடும் ஒன்றாக நால்வர் குடியினையும் எண்ணி உரைத்தார். இவர்கள் புரக்கப்பட வேண்டிய குடிகளாகக் கருதப்பட்டனர்.

முல்லைத்திணைப் பாடல்களில் இடம்பெறும் பாணன் உயர்நிலையில் வைத்தெண்ணப்படுவதைக் காணலாம். பாணன் தலைமக்களிடம் அன்புள்ளவனாய் அவர்களுடன் இனிதிருந்து தனது இசையால் மகிழ்விக்கச் செய்வான். தலைமகன் வினைவயின் பிரியநேர்கையில் அவர்களிடையே தூதுவனாகச் சென்று துன்பம் தவிர்ப்பான். இவ்விரு நிலைகளில் இப்பாடல்களில் பாணன் சித்தரிக்கப்பட்டுள்ளான். பாணர் என்பார் இசைபாடுவதிலும், யாழ் மீட்டுவதிலும் சிறந்துவிளங்கினர். பாணர்கள் "படுமலைப்பாலை என்னும் பண்ணை இசைத்த இசையினது இன்னொலி வானளாவி நிறைந்தது. அந்த மேலான ஒலிபோன்ற நல்ல இசையுண்டாகும்படி முல்லைநிலத்தில் மழைபொழிகின்றது" (குறுந். 323), என்று பாணரது இசைத்திறமைக் கூறப்பட்டுள்ளது. முல்லைநிலத் தலைமக்கள் இல்லறநெறி மேற்கொண்டு நாடோறும் தம்மில் லிருந்து தமது பாத்துண்டு காதலின்பம் துய்த்து வாழ்கின்றனர்.

அப்பொழுது பாணர் அவர்களின் இன்பத்தை மேலும் உணர்ந்து அனுபவிக்கும் வண்ணம் முல்லைப் பண்ணை இசைத்து இன்புறுத்துவர். தலைமக்களும் பாணர் களின் இன்பம் பிறத்தர்க்குக் காரணமானபண்ணாற்றொடுத்த பாடலின் சுவையை நன்கு உணர்ந்து இன்புற்று வாழ்வர். இதனை ஐங்குறுநூற்றுப் பாடல்கள்,

> நயந்த காதலித் தழீஇப் பாணர்
> நயம்படு முரற்கையின் யாத்த பயன்தெரிந்து
> இன்புறு புணர்ச்சி நுகரும்
> மென்புல வைப்பின் நாடுகிழ வோனே (ஐங்.407)
> 'பாணர் முல்லை பாட' .....(ஐங்.408)

என்று குறிப்பிடுகின்றன.

போர்மேற் சென்ற தலைவன் தான்மேற்கொண்ட வினை நீட்டித்த- விடத்துக் குறித்த பருவத்தே தான் வரயியலாமையை உணர்த்தித் தலைவியை ஆற்றுவிக்கப் பாணனைத் தலைவியிடம் தூதாக அனுப்புவான். அதுபோலவே துன்பநிலையைத் தலைவனிடம் சென்று கூறுமாறு தலைவியும் பாணனைத் தலை வனிடம் தூதாக அனுப்புவதுண்டு.

தலைவன் வினைமேற் சென்ற நாட்டிற்குச் செல்வதாகப் பாணன் தலை வியிடம் கூறி விடைபெறுகின்றான். அப்பொழுது தலைவி

> புலர்புகழ் சிறப்பினுங் குரிசில் உள்ளிச்
> செலவுநீ நயந்தனை யாயின் மன்ற
> இன்னா அரும்படர் எம்வயிற் செய்த
> பொய்வ லாளர் போலக்
> கைவல் பாணவெம் மறவா தீமே (ஐங்,473)

என்று அவளது துன்பநிலையைத் தலைவற்கு உணர்த்துமாறு யாழ்மீட்டுவதில் வல்லவனான பாணனிடம் கூறுகின்றாள். தலைவியின் வேண்டுகோளை உணர்ந்த பாணன் தூதனாய்ச் சென்று அவரை விரைந்து அழைத்துவருவேன் என்று கூற, அதுகேட்ட தலைவி தன் ஆயத்தாரிடம் பாணனது பண்பு மிக நன்று என்று பாராட்டிக் கூறுகின்றாள் (ஐங்.474).

பிரிந்துறையும் தலைமகன், தலைவி விட்ட தூதாய்ச் சென்ற பாணனைக் கண்டு மகிழ்ந்து தலைவியின் நிலையை ஆர்வமோடு வினவுகின்றான்.

நீடின மென்று கொடுமை தூற்றி
வாடிய நுதல ளாகிப் பிறிதுநினைந்
தியாம்வெங் காதலி நோய்மிகச் சாஅய்ச்
சொல்லியது உரைமதி நீயே
முல்லை நல்யாழ்ப் பாணமற் றெமக்கே. (ஐங்.478)

தலைமகளின் தூதாகச் சென்ற பாணன் தலைவனிடம், அன்புடையாளை நீ இவ்வாறு துன்புறவிடுத்து அமைந்திருத்தல் நின்றலமைக்குத் தகவன்று ; தலைவியிடம் நீ இவ்வாறிருப்பின் எளியேமாகிய எம்மிடம் எத்தகையையோ ! அறிகிலேம். இப்பொழுதே சென்று அவளுக்கு அருள்செய்யாயாயின் நினக்கு யாங்கள் வழிவழி வருகின்ற பாணரும் ஆகேம் ; எமக்கு நீயும் தலைவனாந் தன்மையுடையை இல்லைகாண் என்று எடுத்துரைக்கின்றான்.

நினக்கியாம் பாணரும் அல்லேம் எமக்கு
நீயுங் குருசிலை யல்லை மாதோ
நின்வெங் காதலி தன்மனைப் புலம்பி
ஈரிதழ் உண்கண் உகுத்த
பூசல் கேட்டும் அருளா தோயே. (ஐங், 480)

இப்பாடலின்வழி, பாணனின் பேரன்பும் உரிமையும் விளங்கித் தோன்றும். மேற்கூறியவற்றால் பாணர்கள் தலைமக்களால் நட்புகொள்ளக்கூடிய பெருந்-தன்மையுடையராய் இருந்ததை உணரலாம். பாணர், பறையர், துடியர், கடம்பர் என்னும் நாற்குடி மக்களும் சிறந்த குடிப்பிறப்பாளர்பால் வழிவழி உரிமை உடையவராக வாழ்ந்து வருவது பண்டைக்கால வழக்கம். முல்லை-நிலக் காவற்காடுகளில் தலைவர்களாக இருந்த குறுநிலமன்னர்களுடன் பாணர்கள் தங்கியிருந்து இசைக்கலையால் அவர்கள் புகழ்பாடி மகிழ்ந்திருந்து அவர்களால் புரக்கப்பட்டனர் எனக்கருதலாம்.

முல்லைப் பாடல்களில் இடம்பெறும் மற்றொரு இன்றியமையாத துணைவனாய் இருப்பவன் தேர்ப்பாகன் ஆவான். சங்க இலக்கிய முல்லைப்-பாடல்களில் 'வினைமுற்றிய தலைவன் தேர்ப்பாகற்கு உரைத்தது ' என்ற

துறையிலமைந்தவையாகப் பலபாடல்கள் உள்ளன. தனது கடமை தவறாது வினையாற்றிய தலைவன் வினைமுடிவில் தோன்றும் இன்பத்தால் விரைந்து சென்று தன் காதலியைக் காண விரும்புவான் அதனால் தனது தேர்ப்பாகனுடன் சில தகுவன கூறலுறுவான்.

தலைமகன் தன் பாகனை நோக்கி, பாக ! நாம் இதுகாறும் எடுத்தவினை முடித்தற்பொருட்டு நெடுநாள் கழித்தோம். அதனால் வாணனது சிறுகுடியிலுள்ள சோலை என மணக்கும் கூந்தலையும் ஒளிபொருந்திய வளையலையுமுடைய நம் தலைவியின் தோளிணையை முயங்குதற்பொருட்டு, நினது நல்ல தொழிற்றிறம் அமைந்த நீண்ட தேர் மிகவிரைந்து செல்வதாக என்கிறான்.

சென்றுவினை முடித்தன மாயின் இன்றே
கார்ப்பெயற்கு எதிரிய காண்டகு புறவில்
மணங்கமழ் முல்லை மாலை ஆர்ப்ப
உதுக்காண் வந்தன்று பொழுதே வல்விரைந்து
செல்க பாகநின் நல்வினை நெடுந்தேர்
. . . . . . . . .
தண்டலை கமழுங் கூந்தல்
ஒண்டொடி மடந்தை தோளிணை பெறவே (அகம்.204)

இதையொத்த கருத்தமைந்த பாடல்கள் பல அகநானூற்றிலும் நற்றிணையிலும் இடம்பெற்றுள்ளன.

வினைமுடித்து மீண்டு வரும்போது காதலியை நினைந்து வருந்திய தலைமகனைத் தேர்ப்பாகன் நோக்கி, ‘மனைவியினுடைய தோளிலே துயிலுதலை விரும்பினோய், வருந்தாதேகொள் ; நின் கண்ணி வாழ்க ; நீ விரும்பிய காதலியினூர் இப்புறவத்துள் இருக்கின்றதாதலின், விரையச் சென்று காணுமாறு தேரைச் செலுத்துவேன் காண் எனத் தலைவன் மனம் மகிழுமாறு கூறுகின்றான்.

புறவிற்று அம்மநீ நயந்தோள் ஊரே
எல்லிவிட் டன்று வேந்தெனச் சொல்லுபு
பரியல் வாழ்கநின் கண்ணி காண்வர
விரியுளைப் பொலிந்த வீங்குசெலல் கலிமா
வண்பரி தயங்க எழீஇத் தண்பெயல்

கான்யாற் றிடுமணல் கரைபிறக் கொழிய
வெவ்விருந் தயரும் மனைவி
மெல்லுறைப் பணைத்தோள் துயிலமர் போயே (நற்.121)

இப்பாடலில் முல்லைத்திணை தலைமகளுக்குரிய மனைவி என்ற சொல் ஆளப்பட்டுள்ளதைக் காணலாம். மற்றொரு குறுந்தொகைப் பாடலில் வினை முற்றிய தலைவன் பாகனை நோக்கி, நெடியவழியிலே செல்வேம் எனில், இன்றுபோய்த் தலைவியின் துன்பத்தைக் களைதல் அரிதென எண்ணினையாகிப் புதுவதாகக் குறுகிய வழியொன்றை உண்டாக்கி அவ்வழியிலே விரைந்து வந்தமையானே தலைவிக்கு இறந்துபாடு எய்தாமற் காத்தனை ; நீ தேர்தந்தாய் என்றல் புல்லிது, தலைவியையே உயிரோடு தந்தாய் எனமனமகிழ்ந்து கூறிப்-பாராட்டுகின்றான்

சேயாறு செல்வா மாயின் இடரின்று
களைகலம் காமம் பெருந்தோட் கென்று
நன்றுபுரிந் தெண்ணிய மனத்தை யாகி
முரம்புகண் உடைய வேகிக் கரம்பைப்
புதுவழிப் படுத்த மதியுடை வலவோய்
இன்று தந்தனை தேரோ
நோயுழந் துறைவியை நல்க லானே (குறுந்.400).

அகநானூற்றுப் பாடலொன்றில் அரசனுக்குத் துணையாகச் சென்ற தலைவன் போரில் வெற்றி பெற்றதும் தலைவியை நினைந்து மிகவிரைந்து வந்து சேர்ந்தவன், தன்மனம் போல மிக விரைந்து தேரைச் செலுத்திய பாகனை மனந்திறந்து பலவாறு பாராட்டுகின்றான். "பாகனே, விரும்பிய காதலொடு யானும் பெரியதேரில் ஏறியமர்ந்ததை அறிந்தேனேயன்றி, இங்கு வந்துற்ற தன்மையை நன்கு அறிந்திலேன். முல்லைக்காட்டிலே உள்ள சிறிய ஊரிடத்தே தலைவியின் இல்லின்கண் தேரை நிறுத்தி, 'இறங்குக' என்ற நின்சொற்கேட்டு மருட்சியுற்றேன். நீதான் காற்றினைக் குதிரையின் வடிவாகப் பூட்டி வந்தனையோ அன்றி நினது மனத்தினை அங்ஙனம் பூட்டி வந்தனையோ கூறுவாயக என்று வியந்துகூறி, பெருந்தகைமையுடைய தலைவன் தனது மலையை ஒத்த மார்பில் பாகனைத் தழுவிக்கொண்டு தன்மனைக்கண் உடன்கொண்டு செல்கின்றான். தலைவியும் விருந்தோம்பும் சிறப்பினைப்-பெற்றாள்".

இருந்த வேந்தன் அருந்தொழில் முடித்தெனப்
புரிந்த காதலொடு பெருந்தேர் யானும்
ஏறிய தறிந்தன் றல்லது வந்தவாறு
நனியறிந் தன்றோ இலனே தாஅய்
முயற்பறழ் உகளும் முல்லையம் புறவில்
மெல்லியல் அரிவை இல்வயின் நிறீஇ
இழிமின் என்றநின் மொழிமருண் டிசினே
வான்வழங் கியற்கை வளிபூட் டினையோ
மானுரு வாகநின் மனம்பூட் டினையோ
உரைமதி வாழியோ வலவ எனத்தன்
வரைமருள் மார்பின் நளிப்பனன் முயங்கி
மனைக்கொண்டு புக்கனன் நெடுந்தகை
விருந்தேர் பெற்றனள் திருந்திழை யோளே (அகம்.384)

முல்லைத்திணைப் பாடல்களில் தலைமக்களான தலைமகனுக்கும் தலைமகளுக்கும் இடையே ஏற்படும் இன்னலைப் போக்கி இன்பம் சேர்க்கும் ஆதார சுருதிகளாகப் பாணனும் பாகனும் சித்தரிக்கப்பட்டுள்ளனர்.

## முல்லைநில மக்கள்

சங்க இலக்கிய அகப்பாடல்களில் இடம்பெறும் மாந்தர்களைப் பற்றிக்-கூறும்போது தலைமக்கள் என்று போற்றப்பட்ட தலைவன், தலைவி ஆகிய இருவரது வாழ்க்கை நெறியே பெருமளவு விவரிக்கப்பட்டுள்ளது. கலித்-தொகையில் முல்லைக்கலி என்ற பகுதி நீங்க மற்ற எல்லாப் பாடல்களிலும் போர்வீரனே தலைவனாக்கப்படுகின்றான். ஆனால் முல்லை நிலத்தில் ஆயர்கள், வேடர்கள், உழவர்கள் என்னும் மூவகைப்பட்ட மக்கள் வாழ்ந்தனர் என்பது சங்ககாலப் புறப்பாடல்களாலும், அகப்பாடல்களில் சில குறிப்புகளாலும், முல்லைக்கலியாலும் பெறப்படும் செய்தியாகும். தொல்காப்பியர் நிலத்தலை மக்களையும் தலைவர்களாகக் கொண்டு பாடலாம் என்பர். முல்லைப் பாடல் களில் தலைமக்களே தலைவர்களாக உள்ளனர். ஆயர் முல்லைக்கலியில் மட்டும் தலைவர்களாகக் காட்டப்பட்டுள்ளனர். வேடர்கள், உழவர்கள் பற்றி ஒரு சில குறிப்புகளே கிடைக்கின்றன. முல்லைக்கலியின் முதல் ஏழு பாடல்களில் ஏறுதழுவும் இளைஞன் தலைவனாகவும் அவன் மேல் காதல்கொள் பவளாகத் தலைவியும் உள்ளனர். இப்பாடல்களில் தலைவன் தலைவியரிடையே

பிறதொகைப் பாடல்களில் கண்ட உயர்பண்பைக் காணாததால் 'வினைவல பாங்கர்' எனத்துறை வகுத்தோர் கூறியுள்ளனர். இவர்கள் குறிக்கோள் மாந்தராக இன்றி நடப்பியலில் உள்ள மாந்தர்களாகக் காட்டப்பட்டுள்ளனர் எனக்கருத லாம். ஆயர்களைத் தலைவர்களாகக் கொண்டதாக இப்பாடல்கள் உள்ளன. தலை-வனைப் பொதுவன் என்ற சொல்லாலும் ஆயர்களைப் பொதுவர் என்றும், ஆய்ச்சியர்களைப் பொதுமகளிர் என்ற சொல்லாலும் குறிப்பிட்டுள்ளமை பிறபாடல்களில் காணாத ஒன்றாக உள்ளது.

## ஆயர் வாழ்வியல்

தமிழகத்தில் வாழ்ந்த பண்டைத் தமிழ் மக்களுள் சீரும் சிறப்பும் பெற்று வாழ்ந்தவர் ஆயரினத்தவர். அவர்களது வாழ்க்கை காடும் காடுசார்ந்த இடமுமான முல்லைநிலத்தில் அமைந்தது. இங்குக்காடு என்பது குறிஞ்சி நிலக்காடு போன்று மரச்செறிவுடையதன்று ; இளங்காடு என்று கூறும் வகையில மைந்த நிலப்பகுதியாகும். இங்கு ஆடுமாடுகளின் மேய்ச்சலுக்குரிய புல்வெளி கள் நிறைந்திருந்தன. இங்குக் கொன்றை, காயா, குருந்தம், மல்லிகை, முல்லை, பிடவு, தவளம் முதலிய மரஞ்செடி சொடிகளும் எழிலூட்டி நின்றன.

முல்லை நிலத்தில் பயரிட்டு வாழ்ந்த குடிமக்கள் இருந்த சீறூர் சில-வேயாம். அவர்களது வீட்டு முற்றத்தில் பெண்யானைகள் நின்றாற்போல வர-கினைக் கொண்ட குதிர்கள் நின்றன. வீட்டுப் பந்தரில் யானையின் காலையொத்த வரகுதிரிகை நடப்பட்டிருந்த்து. வீட்டையடுத்த கொட்டிலில் குறிய வண்டி, வண்டி உருளைகளும் கலப்பைகளும் சுவரில் சாய்த்து வைக்கப்பட்டிருந்தன. வீடு வரகு வைக்கோலால் வேயப்பட்டிருந்தது. இச்சீறூர் மக்கள் உழவுத்தொழிலில் பயின்ற பெரிய எருதுகளைக் கலப்பையிற் பூட்டி, உடும்பின் முகத்தை ஒத்த பெருங்கொழு நிலத்தில் மறைய அழுத்தி முறபட வளைய உழுதனர் ; பின்பு விதைத்தனர் ; களை எடுத்தனர் ; பயிர் விளைந்ததும் அறுவடை செய்தனர்.

முல்லைநிலத்தில் வாழ்ந்த மக்களுள் பெரும்பாலோர் நிரைமேய்க்கும் தொழிலில் ஈடுபட்டவர். இவர்கள் பற்றிய செய்திகள் ஆற்றுப்படை நூல்களிலும், புறநானூற்றிலும், முல்லைக்கலியிலும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் நாம் ஆயர்களின் வாழ்க்கைமுறை குறித்து நன்கு அறிந்து கொள்ளலாம். ஆயர்களுள் ஆடவர் கோவலர், இடையர், பொதுவர் என்றும் ; ஆய்ச்சியர் கோவித்தியர், இடைச்சியர், பொதுவியர் என்றும் அழைக்கப்

பெறுவர். காடும் காடுசார்ந்த நிலமுமே ஆயரினத்தார் வாழும் பகுதியாகலின் அங்கே பல்வகைப் பறவைகளும் விலங்குகளும் மிகுதியாகக் காணப்படும். எனினும் கானக் கோழியும் சிவலும் அதிகம் வாழும் பறவை இனங்கள் என்றும்; முயல், சிறுமான், உழை முதலியன பெரும்பான்மையாகக் காணப்படும் விலங்கினங்கள் என்றும் அறியலாம். ஆயர்கள் பெரும்பாலும் காடுறை வாழ்வே மேற்கொண்டதால் அதனை ஒட்டியே அவர்தம் ஊர்களும் பாடி, சேரி, பள்ளி என்று விளங்கின. அங்கு அவர்கள் வாழ்வு நடத்தச் சிறுகுடில்கள் அமைத்தனர். அவை குரம்பை எனப்பட்டன. அக்குரம்பைகள் கழிகளால் கட்டப்பட்டு, வரகுக்கற்றையால் வேயப்பெற்றவை ; அக்குரம்பையுள் நுழைய சிறுவாயில் இருந்தது ; குரம்பையின் கூரையைத் தாங்கி நிற்பவை குறிய கால்கள் ; அக்கால்களில் ஆட்டுக்குட்டிகள் நின்று தின்பதற்கேற்பத் தழைகள் கட்டப்பட்டிருந்தன ; குரம்பையின் உள்ளே ஆட்டுக்கிடாயின் தோல்களைப் பாயிலாகக்கொண்டு காவலனாக அவ்வீட்டு முதியவன் படுத்திருந்தான் ; குரம்பையின் எதிரில் முற்றம் இருந்தது; அதில் தாம்புகள் கட்டின குறிய முளைகள் இருந்தன ; அம்முளைகளில் செம்மறியாடுகள் கட்டப்பட்டு அவற்றுடன் வெள்ளாடுகளும் இருந்தன ; எருமிகுதியாக உண்டாகின்ற அவ்விடம் இடுமுள்வேலியால் சூழப்பெற்றிருந்தது. (பெரும்; 147-154)

நிரைமேய்த்தல் தொழிலில் ஈடுபடும் ஆயர்கள் ஆடுமாடுகளை ஓட்டிச் சென்று வளமான புல்வெளிகளிலே வயிறார மேய்த்துக் கான்யாறுகளில் நீருட்டிக் குழலிசைத்து வாழ்ந்து மகிழ்வர். ஆயர்கள் இவ்வாறு சீறூரை அடுத்தும் தொலைவிலுமாக அமைந்த மேய்ச்சல் பகுதிகளிலே பொழுதெல்லாம் தொழில் மேற் சென்று வாழ்வர். இந்த ஆயர்கள் செருப்புவிடாமற் கிடந்த வடு-வழுந்தின வலிமையான கால்களை உடையவர் ; நிரைகளை மேய்க்கும் கோலினைக் கையில் உடையர் ; மரங்களை வெட்டும் கோடரி பிடித்தமையால் தழும்பேறிய வலிய கையினர் ; இரண்டு தோள்களிலும் உறியினையுடைய காக்கள் மேலே இருந்தமையால் உண்டான தழும்பினைத் தோளில் உடையவர் ; பசுகறந்த பாற்கையைத் தடவின தலைமயிரை உடையவர் ; மலர்களை அணிந்தவர் ; ஒற்றை ஆடையர் ; பாற்சோற்றை உண்பவர் ; பால் வைக்கும் கறவைக் கலங்கள் வைத்த உறியையும் கழுவொடு சூட்டுக்கோல்களை இட்டுச் சுருக்கிய தோற்பைகளையும் தம்முடன் எடுத்துச் செல்பவர் ; நீண்டு வளர்ந்த கொன்றைக் காயால் செய்த குழலை இனிமை தோன்ற இசைப்பர் ; வழுவின சொல்லையுடையவர் ; தத்தம் ஆநிரைகளோடு மழையால் நனைந்த முல்லை நிலத்தில் வாழ்பவர் (கலி : 106 : 1-5).

ஆயர்கள் ஆநிரைகளைக் காத்தோம்புவதால் அவர்களைப் புறநானூற்றுப் பாடலொன்று (390) "அறவை செஞ்சத்து ஆயர்" என்று புகழ்ந்து கூறுகிறது. இதனை இளங்கோவடிகளும் "ஆகாத் தோம்பி ஆப்பயனளிக்கும் கோவலர் வாழ்க்கை கொடும்பாடில்லை" (சிலப் : 15 : 120-21) என்றார். ஆயர்கள் ஓட்டிச் செல்லும் பசுக்களும் எருதுகளும் அகன்ற புல்வளர்ந்த நிலத்தில் பரந்து மேய்ந்தன. பின்னர் பூக்கள் நிறைந்த மரங்களின் பெரிய நிழலில் தங்கி அசையிடா நின்றன. அந்நேரத்தில் கோவலர்கள் பூக்கள் நெருங்கிய முல்லைச் செடிகளினின்றும் பூக்களைப் பறிப்பர் (புறம் ; 339). பள்ளமுண்டாகச் செய்யப்பட்ட பசிய ஓலைக் குடையில் புதலிடத்தே மலர்ந்த முல்லைப் பூவைப் பறித்துச் சேமிப்பர் (புறம் : 352) ஆநிரைகள் காட்டில் மேயும் பொழுது, மூங்கிற் கழியில் தீக்கடைகோலின் உதவிகொண்டு செய்யப்பட்ட துளையில் வாயை வைத்துப் பலவகை இனிய ஓசையை எழுப்புவர் ; சிறிது நேரம் பாலைப் பண்ணை வாசிப்பர். பின்பு குமிழினது உட்பொய்யாகிய கொம்பிடத்தே வளைத்துக்கட்டின விரலால் தெறித்து வாசிக்கும் மரக்கயிறாகிய நரம்பினையுடைய வில்யாழில் குறிஞ்சிப் பண்ணை வாசிப்பர்.

பகற்பொழுது கழிந்து, வெம்மையடங்கி, முல்லை மலரும் மாலைப்பொழுது தொடங்கும். அப்பொழுது பலவாகிய கறக்கும் ஆனினங்கள்தம் கன்றொடு காடுதொறும் தாவிவர ஆயர்கள்தம் வாயில் குழல் வைத்து ஊதுவர் (அகம்.354). எருதுகள் எப்பொழுதும் தன்னுடன் இருந்தலை விரும்பிய தமது இளைய பசுக்களைத் தழுவிக்கொண்டு ஊரின்கண் மீண்டுவரும் பொழுதில் யாவும் ஒருங்கு சேர்ந்து கன்றுகளை அழைக்கும் குரலினவாய்த் தொழுவிலே நிறையப் புகும். பசுக்கள் பூண்டுள தெள்ளிய மணிகள் இனிதாய் ஒலிக்கும் ; அம்மணியோசை ஆயர்தங் குழலிசையோடு கலந்து மெலிதாக ஒலிக்கும்.

> மதர்வை நல்லான் மாசில் தெண்மணி
> கொடுங்கோல் கோவலர் குழலொடு ஒன்றி
> ஐதுவந் திசைக்கும். (நற்.69)

தொலைதூரம் சென்று ஆடுகளை மேய்த்துச் செல்லும் இடையன் சில நேரங்களில் காட்டுப்பகுதியிலேயே தங்க வேண்டிவரும். அப்பொழுது அசையும் தலையினையுடைய செம்மறியாட்டின் தொகுதியைக் காக்க, கடையும் கோலினின்றும் எழுந்த சிறுதீயை விறகிற் சேர்த்து, வலிய தாம்பினால் கட்டப்-

பட்ட உறியுடையோனும், பானையுடையோனும் தோற்படுக்கை உடையோனும், நுண்ணிய மழைத்துளி தனது ஒரு பக்கத்தை நனைத்திடக் கோலினைக் காலுடன் சேர்த்து ஊன்றித் தனியே நிற்கின்றவனுமான இடையன் வாயை மடித்து எழுப்பும் சீழ்க்கை ஒலி விரைந்து சென்று ஒலித்தலின் துள்ளி விளையாடும் ஆட்டுக்-குட்டிகளைக் கவரப் பார்க்கும் குள்ளநரி அஞ்சி ஓடி முட்புதர்களில் சென்று ஒளித்துக்கொள்ளும் (அகம்:274). இடையன் வாயைக் குவித்து எழுப்பும் விளி ஒலியை அறிந்து சிறிய தலையை உடைய ஆட்டுக்கூட்டம் பிறபுலம் புகாது ஒடுங்கிநிற்கும் இயல்பின (நற்:142). இரவுப் பொழுதில் கொடிய விலங்குகள் ஆடுகளை நெருங்காதவாறு தீமூட்டி இடையர் இரவுப்பொழுதைக் கழிப்பர் (நெடுநல் : 404).

ஆயர்குலத்து மகளிர் இருள்பிரியும் விடியற்காலத்து எழுந்து இறுகத் தோய்ந்த இனிய தயிரைக் கடைந்து வெண்ணெய் எடுப்பர். ஆய்மகள் தயிர்தோய்க்கும் அழகினைப் புறநானூற்றுப் பாடலொன்று (276) “ ஆய்மகள் வள்ளுகிர்த் தெறித்த குடப்பால் சில்லுறை ” என இயம்புகின்றது. ஆயமகளிர் பூவாற் செய்த சுமட்டைத் தலையிலே வைத்து அதன்மேல் தயிர்புள்ளியாகத் தெறித்த, வாயையுடைய மோர்ப்பானையை வைத்துக் கொண்டு குறிஞ்சிநிலம் சென்று மோரை விற்பர். ஆயமகளிர் மாமை நிறத்தினர்; மூங்கில் போன்ற தோள்களை உடையவர் ; கருமணல் போன்ற கூந்தலையுடையவர் ; தாளுருவி என்னும் அணியைக் காதில் அணிந்துகொள்வர் ; இப்பெண்கள்தாம் மோர்விற்ற முதலைக்கொண்டு நெல்முதலியவற்றை வாங்குவர் ; நெய்விற்று வந்த விலைக்கு ஈடாகப் பாலெருமையையும், நல்ல பசுவையும், கரிய எருமை நாகினையும் வாங்குவர் ; இவற்றொடு வீடுதிரும்புவர் ; வரகினது குற்றுதலுற்ற வடிக்கப்பட்ட சோற்றையும், வேளைப்பூவை உப்பிட்டு வேகவைத்து வெள்ளிய தயிரில் கலந்தட்ட புளிங்கூழையும் உண்பர்.

கவைக்கதிர் வரகின் வைப்புறு வாக்கல்
தாதெரு மறுகிற் போதொடு பொதுளிய
வேளை வெண்பூ வெண்டயிர்க் கொளீஇ
ஆய்மகள் அட்ட அம்புளி மிதவை . . . .(புறம் : 215 : 1-4).

முல்லை நிலத்து ஆயர் இடையர் என்றும் பொதுவர் என்றும் அழைக்-கப்பட்டனர்.

மாசுண் உடுக்கை மடிவாய் இடையன் (புறம்: 54)

பல்லான் பொதுவர் கதழ்விடைகோள் காண்மார் (கலி: 103: 5)

என்று வருவதைக் காணலாம். இடையர், பொதுவர் என்ற பெயர்கள் காரண-வகையால் அமைந்த பெயர்கள் என்று நுட்பமாக விளக்குவார் ஔவை சு.துரைசாமிப்பிள்ளை. " குறிஞ்சி முல்லை மருதம் மூன்றனுள் முல்லை ஏனை இரண்டற்கும் இடையில் நிற்றலால் முல்லை நிலத்து ஆயரை இடையர் என்றும் ; முல்லை நிலத்துவாழும் ஆநிரைகளின் பாற்பயன் (மோர், தயிர், நெய் முதலியன) ஏனை எல்லா நிலத்தவர்க்கும் பொதுவாய்ப் பயன்படும் சிறப்புப் பற்றி அதனை நல்கும் ஆயரைப் பொதுவர் என்றும் குறிப்பதுண்டு." (ப. 855. ஐங்குறுநூறு. அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பதிப்பு).

ஆயர்கள் உலகத்துத்தோன்றிய தொன்மையான குடிமக்களுள் ஒரு-சாரார் ஆவர். பழம்புகழுடைய பாண்டிய மன்னர் குலத்தொடு வைத்து எண்ணத்தக்க பழம்பெருமையுடையவர்கள். இயற்கையின் கொடுமையையும் தன் ஆற்றலினால் வென்றுவிட்ட வாடாத புகழையுடைய குடி பாண்டியக்குடி. தொல்லிசைநட்ட அந்தப் பாண்டியக் குடியொடு தோன்றியவர் ஆயர்.

வலியினால் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன்
தொல்லிசை நட்ட குடியொடு தோன்றிய
நல்லினத்து ஆயர் (கலி : 104)

கி.மு. மூன்றாம் நூற்றாண்டளவில் சந்திரகுப்தமௌரியர் அவையில் கிரேக்கத் தூதுவனாக இருந்த மெகத்தனிசு வடஇந்தியாவை மனத்துள் கொண்டு எழுவகைச் சாதிகளைக் குறிப்பிடுகின்றார். 1. தத்துவ ஞானிகள். 2. உழவர் 3. ஆயர் 4. கம்மியர் 5. பொருநர் 6. அதிகாரிகள் 7. மந்திரத் துணைவர். இவ்வேழ சாதியினரும் அயல்சாதியில் திருமணம் செய்து கொள்ள முடியாது என்றும் ; எந்தச் சாதியாலும் தம்தொழிலை விடுத்து வேறுதொழிலைச் செய்ய முடியாது என்றும் மெகத்தனிசு குறிப்பிடுகின்றார் (ப.90. க.ப. அறவாணன், தமிழர் மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள்).

இதுகாறும் முல்லைநில மக்களான ஆயர்களின் புறவாழ்க்கையைக் கண்டோம். இனி ஆயர்கள் வாழ்ந்த அகவாழ்வு இல்லறநெறிக்குச் சிறந்த சான்றாக, அடிப்படையாக எவ்வாறு விளங்கியது என்பதைக் காண்போம். சங்க கால அகப்பாடல்களில் தலைமக்களே தலைவர்களாக உள்ளனர். ஆனால்

முல்லைக்கலியில் மட்டும் முல்லைநிலமக்களாகிய ஆயர்கள் தலைவர்களாக இடம்பெற் றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் முல்லைக்கலிப்பாடல்கள் அகத்திணைக்குரிய முதற்பொருள், கருப்பொருள் ஆகியவற்றைக் கொண்டுள்ளதேனும் முல்லைத்திணைக்கு உரிய இருத்தல் எனும் உரிப்பொருளைப் பாடாது, குறிஞ்சித்திணைக்குரிய புணர்தலைப் பாடியுள்ளன. இது மற்ற முல்லைத்திணைப் பாடல்களின் மரபிற்க மாறுபட்டதாகும். கலித்தொகையில் முல்லைக் கலியில் இடம்பெறும் 17 பாடல்கள் களவு வாழ்க்கையை உணர்த்துகின்றனவே அல்லாமல் கற்புநெறிக்குரிய வாழ்க்கையைப் புலப்படுத்தும் பொருளில் அமையவில்லை. இந்தப் பதினேழு பாடல்களில் ஏழுபாடல்கள் ஏறுதழுவலைப் பற்றியவை. தமிழருக்கே உரிய வீரமும் காதலும் இணைந்த காட்சியே ஏறு தழுவல். ஆயர்தம் வாழ்வில் ஏறுதழுவல் ஓர் உயிர்க் கொள்கையாய் அமைந்தது. ஏறுதழுவி வெற்றிபெற்றவனே ஆயமகளை மணப்பதற்குத் தகுதியுடையவன் என்ற கொள்கை உயிர்நிலையாய் அமைவதைப் பல பாடல்கள் குறிப்பிடுகின்றன.

## ஏறுதழுவல்

ஏறுதழுவல் என்பது கொல்லேறுகளைத் தழுவி அடக்குதலாகும். இது ஏறுகோள் என்றும் வழங்கும். இவ்வேறுதழுவலே இன்று காளைப்போர், சல்லிக்கட்டு, மஞ்சுவிரட்டு எனப்பல பெயர்களில் வழங்குகிறது. மேனாடுகளில் இவ்விழா Bull fight என்று வழங்குகிறது. ஏறுதழுவி மணக்கும் இம்மணத்தினை நச்சினார்க்கினியர் எண்வகை மணத்துள் ஆசுரம் என்ற மணத்தின்பாற்படும் என்பர். ஆசுரமாவது, கொல்லேறு கொண்டான் இவளை எய்தும் ; மாலை சூட்டப்பட்டான் இவளை எய்தும் ; வில்லேற்றினான் இவளை எய்தும் ; இன்னதொரு பொருள் தந்தான் இவளை எய்தும் ; என இவ்வாறு சொல்லிக்கொடுப்பதாகும்.

பின்னாளில் தொல்காப்பியத்திற்கு உரையெழுதியவர்களுள் ஒருவரான புலவர் குழந்தை "ஆசுரமணம் முல்லைக்கலியின் ஏறுதழுவல் மணத்தினும் வேறானது " என்பார். முன்பின் அறிமுகமில்லாத ஒருவன் கொல்லேறு கொள்ளினும் வில்லேற்றினும் அவனுக்கு ஒருத்தியை அவள் பெற்றோர் கொடுக்கும் அளவினது ஆசுரமணம். முல்லைக்கலியில் இடம்பெறும் ஏறுதழுவலோகளவொழுக்கமாகிவரும் காதலியின் ஏற்றை அவள் காதலனே கொள்ளும் ஒருவகை வீரக்குறிப்பாகும். அயலானொருவன்

ஏறுதழுவல் முல்லைத்திணை ஆகாது எனக் கூறுவர்.

இதனை டாக்டர் வ.சுப. மாணிக்கம், 'காளையை அடக்கியவனுக்கே பெண்கொடுப்பது முல்லை வழக்கம். எவன் மடக்கினும் அவனுக்குப் பெண் மணப்படுவாள். காளையை அடக்கியவனை விரும்பாத போதும் மணக்க வேண்டுமா ? அன்ன அன்பின் மணம் அகத்திணைக்கு முரண்காண்.

கோளாளர் என்னொப்ப ரில்லென்ன நம்மானுள்
தாளாண்மை கூறும் பொதுவன் நமக்கொருநாள்
கோளாள னாகாமை யில்லை அவற்கண்டு
வேளாண்மை செய்தன கண் (கலி : 101 : 43-46)

என்றபடி ஏறுதழுவாமுன்னரே ஆயமகனுக்கும் ஆயமகளுக்கும் உள்ளப்-புணர்ச்சி உண்டு என ஆசிரியர் நல்லுருத்திரனார் புலப்படுத்துதலின், ஏறுகோள் வழக்கம் அகத்திணைக்கு இயைந்து ஒழுகுகின்றது' எனக் குறிப்பிட்டுள்ளமை ஈண்டு அறிதற்குரியது (ப.412-13 ; முதற்பதிப்பு ; டாக்டர் வ.சுப. மாணிக்கம், தமிழ்க்காதல்; பாரிநிலையம், சென்னை, 1962.) இவற்றால் முல்லைக்கலி கூறும் ஏறுதழுவல் முல்லைநில மக்களான ஆயரின் களவுநெறி கற்பு நெறியாக மாறிச்சிறப்புறப் பயன்படும் பாலமாக அமைந்தது எனலாம். இவ்வாறு தான்காதலிக்கும் தலைவியைத் தன்வீரம் மேம்பட்டுத் தோன்றுமாறு காளையை வென்றடக்கித் திருமணம் செய்துகொள்ளும் பழக்கம் முல்லைநில மக்களான ஆயரிடம் காணப்படுகிறது. ஏறுதழுவல் சங்க இலக்கியத்தில் குறிப்பாகக் கலித்தொகையில் முல்லைக்கலியில் மட்டுமே காணப்படுகிறது. ஏறுதழுவலைச் சித்தரிக்கும் முல்லைக்கலிப்பாடல்களை ஏறுதழுவும் ஆயர்களின் வருணனை, ஆயமகளிர் வருணனை, ஏறுகளின் வருணனை, ஏறுதழுவும் காட்சிகளின் வருணனை என்று வகைப்படுத்திக் காணலாம்.

ஆயர் கோட்டினத்தாயர், கோவினத்தாயர், புல்லினத்தாயர் என மூவகைப்படுவர் அவர்கள் வாழும் இடம் குறும்பென்றும் சிறுகுடி என்றும் கூறப்படும். மூவகை ஆயரும் ஏறுதழுவி மணமுடிக்கும் உரிமையுடையவர். மூவகை ஆயருள் எவன் அஞ்சாது ஏறுதழுவி அடக்குகின்றானோ அவனையே ஆய்த்-தியர் மணப்பர் ; உவந்து கூடுவர். ஏனையோரை ஆய்த்தியர் உள்ளத்தாலும் உள்ளார். ஆயர்கள் உயிரினங்களைப் பாதுகாக்கும் தொழிலுடையவர் ஆதலாலே அவற்றிற்கு நரி, புலி முதலிய கொடிய விலங்குகளால் துயர்நேராது

காத்தற் பொருட்டும் ; கள்வர் முதலியோரால் அவை கவர்ந்துகொள்ளாமைப் பொருட்டும் ஆயர்கள் வீரமறவர்களாகவும் இருத்தல் இன்றியமையாததாயிற்று. இக்காரணத்தாலேயே ஆயர்கள் தம்மகளிரை மணக்கவரும் ஆயர்களின் வீரத்தையும் வலிமையையும் அறிந்தே மகட்கொடை நேரும் வழக்கத்தையும் உடையவராக இருந்தனர். தம்மகட்குக் கணவனாக எண்ணுபவன் ‘எமது ஆற்றல் மிக்க ஏற்றினை எதிர்த்துத் தழுவி அடக்குதல் வேண்டும்’ என, பறையறைந்து அறிவிப்பர்.

ஓஒஇவள், பொருபுகல் நல்லேறு கொள்பவர் அல்லால்
திருமாமெய் தீண்டல ரென்று கருமமா
எல்லாருங் கேட்ப அறைந்தறைந் தெப்பொழுதுஞ்
சொல்லாற் றரப்பட்டவள் ;
சொல்லுக ; பாணியே மென்றா ரறைகென்றார்
(கலி : 102 : 9-13)

ஏறுதழுவல் நடக்கின்ற இடம் பரந்த வெளியாயிருக்கும். அங்கு ஆயர் பிடவம்பூவும் செங்காந்தள் பூவும் காயாம்பூவும் பிறபூக்களும் கலந்து தொடுத்த அழகிய கண்ணியைத் தலையில் சூடிச்செல்வர். அங்குச் செல்வதற்கு முன் நீர்த்துறையிலும் ஆலமரத்தின் கீழும் பழைய வலியினையுடைய மாமரத்தின் கீழும் உறையும் தெய்வங்கட்குச் செய்யும் முறைமைகளைப் பரவித் தொழுவிற்குச் செல்வர்.

துறையு மாலமுந் தொல்வலி மராஅமும்
முறையுளி பராஅய்ப் பாய்ந்தனர் தொழூஉ ;
(கலி : 101 : 13-14)

ஏறுதழுவல் நடக்கும் இடத்திற்கு ஆயமகளிர் வருவர். அவர்கள் பிடவம், முல்லை, தோன்றி, கொன்றை முதலிய மலர்களைத் தொடுத்து தலையில் சூடி, தழை, கோதை, இழை இவற்றினை அணிந்து, பூக்கரை அமைந்த நீலநிற ஆடை உடுத்து, முல்லையும் முகையும் பீலிமுருந்தினையும் போன்ற பற்களை உடையவராய், பெரிய குளிர்ச்சி பொருந்தின கண்களை உடையவராய், இனிமை பொருந்திய சொல்லினராய், பொன்னால் செய்த மகரக்குழை அணிந்த காதினராய் வந்து ஏறுதழுவலைக் காணும் விருப்பொடு பரண்மேல் ஏறி வரிசையாக இருப்பர். மகளிரும் சிறாரும் தமக்குத் தீங்க நேராவண்ணம் பரண் அமைத்து அதன்மேனின்று காண்பது வழக்கம்.

ஏறுதழுவல் இடத்தில் விடப்பட்ட ஏறுகள் கணிச்சிபோல் சீவிய கூரிய கொம்பினையுடையன. நெற்றியில் சுட்டிகொண்ட காரேறும், செம்புள்ளிகள் நிறைந்த வெள்ளேறும், வெள்ளிய காலும் கரிய உடலுமுள்ள ஏறும், சிவந்த உடலும் வெண்புள்ளியும் கொண்ட எருதும், இளம்பிறைக் கொம்பும் சிவந்த உடலுமுள்ள கொம்பேறும், வாலியோன் மேனி மானும் வெள்ளேறும், திருமறு மார்பனைப் போன்ற காரேறும், முக்கணான் நிறம் போன்ற கபிலையும், சேய்நிறம் மானும் செவ்வேறும், சங்குபோல் சுட்டி கொண்ட காரேறும், வாலி யோனைப் போன்று சிவந்த மறுவினையுடைய வெள்ளேறும், இந்திரன் கண்கள் போன்று பல புள்ளிகளையுடைய கொல்லேறும், வெள்ளுடை உடுத்த முருகன் போன்று வெள்ளிய காலும் செவ்விய உடலும் உடைய ஏறும், இன்னும் பலவகைத்தாகிய ஏறுகளும் அங்கே ஊழித்தீ, கணிச்சி போலச் சுழன்று திரிதர

எழுந்தது துகள்
ஏற்றனர் மார்பு
கவிழந்தன மருப்புக்
கலங்கினர் பலர் (கலி : 102 :21-24)

பின்னர் ஏறஞ்சாப் பொதுவர் ஏறுகளின் மீது பாய்கின்றனர். ஒன்று ஒருவனைக் கோட்டால் குத்திக் குடரைச் சரிக்கின்றது. இன்னொன்று குத்திக் குடர்சரித்துக் கோட்டிற் கொண்டு குலைக்கின்றது. சில ஏறுகள் பொதுவரைத் தெரிந்து தெரிந்து குத்துகின்றன. கொம்பெலாங் குருதிப் பூச்சு. கொம்புகளைச் சுற்றிலும் குடர்கள் சுற்றிக்கொள்கின்றன. ஒரு பொதுவன் ஓர் ஏற்றின் மீது பாய்ந்து மார்பிறுகப் புல்லிக் கொம்பினைப் பிடித்துக் கழுத்திற் கிடக்கின்றான். பாயும் பொதுவர்தம் உடல்களை ஏறுகள் உழலை மரத்தைப் போலத் துளைக்கின்றன. குருதி பெருகி வழிவதால் அவர் கையெல்லாங் குருதி ; அதனால் கையில் வழுவழுப்புமிக, மணலை அள்ளிக் கையைப் பிசைந்து உடம்பிலுந் தூவிக் கணமுந் தாழாராய்க் கடல்மீது பரதவர் சிறு மிதவையில் ஏறினாற்போல எளிதாக ஏறுகளைத் தழுவுகின்றனர்.

ஆங்குப் பரண்மேலிருந்து மகளிர் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளும் பேச்சுகளும் ஏறுதழுவும் வீரர்களைக் குறித்தே இருக்கும். 'அதோ ஏற்றின் மீது கிடக்கும் அப்பொதுவன் இவள்தன் தோள்மீது கிடப்பான் ; அக்கபி லையைத் தழுவுகின்றான் இக்காரிகையைத் திண்ணமாய்க் கூடுவான் ; அச்செவ் வேற்றினைத் தழுவலுறுகின்றான் இத்தலைவியின் வேய்த்தோளில்

துயிலப்பெறுவான் ; ' என்றின்னவாறு பேச்சுகள் ஆங்கு மகளிர் கூட்டத்து நிகழும். மேலும் ஏறுபாய்ந்து அதனாலுண்டான புண்களை மார்பு கொண்டொற்றி அதன் வெம்மையாலே ஆற்றுவேன் என்பாளொருத்தி. குருதிப் புள்ளிகள் தோய்ந்த உடம்பினால் தயிர்ப் புள்ளிகள் செறிந்த என்னுடலைத் தலைவன் தழுவுமேல் அது என் தோளிற்கு அழகு செய்யும் என்பாள் மற்றொருத்தி. ஆயரெல்லாம் கொல்லேற்றுத்தலைக் கண்டஞ்சுதலும், ஆய்ச்சியர் ஏறுதழுவாத பொதுவர்தோள் விரும்புதலும் இடையர் குடிக்கண்ணே ஒன்றாக நிகழ்தல் இல்லை என்பாள் பிறிதொருத்தி.

ஆங்கு ; போரேற் றருந்தலை அஞ்சதலும் ஆய்ச்சியர்
காரிகைத் தோள்கா முறுதலும் இரண்டும்
ஓராங்குச் சேறல் இலவோ . . . . . (கலி : 106 : 42-43)

இவ்வாறு ஏறுதழுவலைப் போற்றும் ஆயமகளிர் கொல்லேற்றினைக் கண்டு அஞ்சுவானை மறுபிறப்பிலும் தழுவார். உயிரை ஒருபொருட்டாக எண்ணாது ஏற்றின்மீது ஒய்யெனப் பாய்ந்து தழுவுகின்றார்க்கே ஆய்த்தியர் தோள் புல்லுதற்கு எளிதாகும். கொலைத்தொழிலையுடைய ஏற்றினது கொம்பினிடையே தாம் விரும்பும் மகளிருடைய மார்பின் முலையிடையே விழுமாறுபோல வீழில், ஆயர் தத்தம் மகளிர்க்கு முலைவிலை வேண்டார்.

விலை வேண்டார் எம்மினத் தாயர் மகளிர்
கொலை ஏற்றுக் கோட்டிடைத் தாம்வீழ்வார் மார்பின்
முலையிடைப் போலப் புகின் (கலி : 103 : 71-73)

மேற்கூறிய நிகழ்ச்சிகளை எல்லாம் தோழி தலைவிக்கு எடுத்துக்-காட்டுவதும் உண்டு. இவற்றைக் கேட்கும் தலைவிக்குத் தலைவன் தனக்குக் கிடைப்பானோ என ஐயந்தோன்றின் தோழி குழலொலி கேட்டு அதனை நன்னிமித்தமாகக் கொண்டுத் தலைவியைத் தேற்றுவாள்.

அணிமாலைக் கேள்வன் தரூஉமா ராயர்
மணிமாலை யூதுங் குழல் . . . . (கலி : 101 : 35-36)

அந்நிமித்தத்தைத் தோழி தலைவனிடமும் சென்று கூறிப் பின்னர் தலைவியிடம் தலைவனும் ஒருபொழுது ஏறுதழுவி உன்னை மணந்துகொள்வான் என்று

ஆற்றுவிப்பாள்.

அப்பொழுது அவ்விடத்தில் ஏறுகளும் வருந்தின ; இடையரும் புண்மிக்கார் என்று எல்லாம் விலக்குகையினாலே தம்மைக் கொள்ளுதற்கு நின்ற பொதுவரோடே தாம் புணர்தற்கு வேண்டும் நிமித்தங்களைப் பெற்றுக் கரிய கூந்தலையுடைய பொதுமகளிர் எல்லாரும் முல்லைமலர் நிரம்பிய குளிர்ந்த சோலையில் விளையாடுதற்குச் செல்வர். அங்கு ஏறுதழுவி வெற்றி பெற்றவனுக்கும், அதனால் அவனுக்குப் பரிசிலாகிய ஆய்மகட்கும் வெற்றி விழாக் கொண்டாடிக் குரவைக்கூத்து நிகழ்த்துவர். முல்லை நிலத்திலே இவன் ஏறுதழுவின புகழ் குறிஞ்சி நிலத்து ஊர்மன்றங்களிலும் பரவியது.

தண்ணுமைப் பாணி தளரா தெழூஉக
பண்ணமை யின்சீர்க் குரவையுள் தெண்கண்ணித்
திண்டோள் திறலொளி மாயப்போர் மாமேனி
அந்துவ ராடைப் பொதுவனோ டாய்ந்த
முறுவலாள் மென்தோள்பா ராட்டிச் சிறுகுடி
மன்றம் பரந்த துரை . . . . . .

(கலி : 102 : 34-39)

ஏறுதழுவலில் வெற்றி பெற்ற ஆயனை வாழ்த்திய பிறகு, குரவையாடி வழுதி வாழ்க என்று தெய்வத்தை வேண்டுவர். 'பெரிய கடலிடத்தே பரந்து கிடக்கின்ற பழைய நிலத்தை ஆளும் உரிமையோடே பொருந்தின எம்முடைய பாண்டியன் இந்த அகன்ற இடத்தையுடைய உலகின்கண்ணே வாழ்வானாக என்று அவ்விடத்துக் கெடாத சீரிய புகழையுடைய தெய்வத்தைப் பரவுவோம்,' என்று பாடிக் குரவையாடுவர்.

குரவை தழீஇயாம் மரபுளி பாடித்
தேயா விழுப்புகழ்த் தெய்வம் பரவுதும்
மாசில்வான் முந்நீர்ப் பரந்த தொன்னிலம்
ஆளுங் கிழமையொடு புணர்ந்த
எங்கோ வாழியரிம் மலர்தலை உலகே

(கலி : 102 : 75-79)

பாடிமிழ் பரப்பகத் தரவணை யசைஇய

ஆடுகொள் நேமியாற் பரவுதும் நாடுகொண்
டின்னிசை முரசிற் பொருப்பன் மன்னி
அமைவரல் அருவி யார்க்கும்
இமையத் தும்பரும் விளங்குக எனவே.
(கலி : 105 : 71-75)

## களவும் கற்பும்

இயற்கைப் புணர்ச்சியும் இடந்தலைப்படலும் ஆகியவற்றை உள்ளடக்கிய களவுநெறி ; மறைவெளிப்படலும், தமரில் பெறுதலும் ஆகிய கற்புநெறி என்ற இருநெறிகளைக் கொண்ட ஒழுக்கத்தைத் தொல்காப்பியர் 'கைகோள்' என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார். சங்ககால எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான கலித்தொகையில் முல்லைத்திணைக்குரிய முல்லைக்கலி ஆயரினத்-தாரைத் தலைவனாகக் கொண்டு சோழன் நல்லுருத்திரனாரால் பாடப்பட்டது. முல்லைக்கலிப் பாடல்கள் முழுவதையும் நன்கு நுணுகிப்படிக்குங்கால் அவற்றில் களவு, கற்பு என்று தொல்காப்பியரால் சிறப்பிக்கப்படும் இரு கைகோளும் பின்னிப் பிணைந்து அமையுமாறு ஆசிரியர் பாடியுள்ளதை உணர்ந்து மகிழலாம். முல்லைக்கலியில் முல்லைநிலத்தாராலேயே அந்நாளில் கடைபிடிக்கப்பட்ட ஏறுதழுவல் நிகழ்ச்சி மிகச்சிறப்பாகச் சித்தரிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். மணப்பருவமடையும் ஆயர்குலத்தலைவியை அவள்பொருட்டு வளர்க்கப்படும் வல்லேற்றினை அடக்குபவன் எவனோ அவனே தலைவிக்கு மணமாலை சூட்டும் தகுதி பெறுவான். தகுதியும் பாதுகாப்பும் கருதி ஏறுதழுவி மணமுடிக்கும் முறை ஆயர்குலத்தாரிடையே மேற்கொள்ளப்பட்டது. இம்மண முறையை உரையாசிரியர் நச்சினார்க்கினியர் ஆசுரம் என்பதோடு ஒத்தது என்பார். ஆனால் முல்லைநில மணமுறையான இந்த ஏறுதழுவலும் அகத்திணை மரபிற்குரிய ஒன்றாகவே முல்லைக்கலியில் ஆசிரியரால் பாடப்பட்டுள்ளது. ஏறுதழுவலைச் சித்தரிக்கும் பாடல்களில் களவொழுக்கச் செய்திகள் பெருமளவு அமையினும் களவுநெறியில் காணும் இன்பம் கற்புநெறியின்பாற்பட்ட இன்ப-மாகத் திகழத் துடிக்கும் உணர்ச்சி உள்ளத்தைப் பலபாடல்களில் ஆசிரியர் வெளிப் படுத்தியுள்ளார். களவுநெறிப்பட்ட காதலரே பின்னர் ஆயர்குல மரபைப் பேணி ஏறுதழுவி வெற்றி பெற்று மணம்புரிந்தனர். இதற்கான சான்றுகள் தலைவன், தலைவி, தோழி ஆகியோரின் கூற்றுகள்வழி அறியலாம்.

ஆயரினத்தில் ஆடவர் குலத்தொழில் மேற்கொண்டு தனியே

செல்வதும், இளநங்கையர் மோர், பால், நெய் விற்றற்பொருட்டுத் தனியே செல்வதும் இயல்பாய் அன்றாடம் நடைபெறும் நிகழ்ச்சியே ஆகும். அவ்வாறு செல்கையில் ஆயர்குல இளைஞனும் நங்கையும் சந்தித்து உரையாடி மகிழ்ந்து காதல் உடையவராதலும் இயற்கையின் நியதிக்கு ஒத்ததாயிற்று. அவ்வாறு இடை வழியில் சந்தித்துக் காதல் கொள்ளும் ஆயிரினத் தலைவனும் தலைவியும் ஒத்த தகுதியுடையவ்ராகவே இருப்பர் என்பது அவர்களது,

> தளரியல் என்னறிதல் வேண்டின் பகையஞ்சாப்
> புல்லினத் தாயர் மகனேன் மற்றியான்
> ஒக்குமன் ;
> புல்லினத் தாயனைநீ யாயிற் குடஞ்சுட்டு
> நல்லினத் தாயரெமர் ; (கலி : 113 : 6-10)

என்ற உரையாடல்வழி அறியலாம். ஒக்கம் என்றதால் யாம் பிறப்பு முதலியவற்றால் ஒப்புடையோம் என்பதுபட அவள் உடன்பாட்டைக் குறிப்பாலுணர்த்தி நின்றது. இயற்கைப் புணர்ச்சியாலும் இடந்தலைப்பட்டும் தலைவன் தலைவியரிடையே அன்பு நீடித்தாலும் ஊரறியப் பெற்றோர் இசைவுடன் திருமணம் செய்து கொள்ளவேண்டும் என்ற உறுதிப்பாடு இவர்களிடம் பெரிதும் காணப்படுகிறது.

காதல் வாழ்விலே ஆயரிளைஞன் தன் இச்சையைத் தீர்த்து இன்புறுதலையே கருதினாலும், தலைவியோ விரைவில் மணம்பெறவேண்டும் என்பாள். தலைவியின் பெற்றோர் தலைவன் தம்தகுதிக்கு ஏற்றவனா போட்டியில் வெற்றி பெறுவானா என்பதிலேயே கருத்தாயிருந்தனர். எவ்வளவுதான் முல்லைக் காட்டிலே தனித்துக்கண்டு இளைஞன் வற்புறுத்தினாலும் அவனிடமிருந்து மீளவே முயலுகின்ற பெண்மையின் இயல்பு மிகவும் அருமையாகப் பல கலிப்பாடல்களில் சித்தரிக்கப்பட்டுள்ளது. ஆயமகள் திருமணம் நடைபெறுவதற்கு முன் காதலனுடன் கூடிப்பின் அவனால் வஞ்சிக்கப்பட்டால் "இவ்வொரு நாள் இன்பத்தால் காலமெல்லாம் மகிழ்ந்திருப்பேன்" என எண்ணித் துணிந்து அவன் காதலை ஏற்றுக்கொள்வாள்.

> மாயப் பொதுவன் உரைத்த உரையெல்லாம்
> வாயாவ தாயின் தலைப்பட்டாம் பொய்யாயின்
> சாயலின் மார்பிற் கமழ்தார் குழைத்தநின்

ஆயித முண்கண் பசப்பத் தடமென்றோள்
சாயினும் ஏஎ ருடைத்து . . . (கலி : 112 : 21-25)

தலைவியானவள் முல்லைக்கொடிபடர்ந்த சோலையில் வந்து தலைவன் தன்னிடம் பேசிய காதல்மொழிகளை எல்லாம் தன்தோழியிடம் கூறுவாள். 'தோழியே அவனிடம் சென்று ஆயமகளிரை வரைந்து கொள்ளும் இலக்கணத்தை அறிவித்துப் பின்னர் என்னுடைய தந்தையும் யாயும் இக்களவொழுக்கம் அறியும்படி அறத்தொடு நிலைவகையால் உரைப்பாயாயின், தலைவன் உற்ற நோயன்றி யான் உற்ற நோயையும் மிகப்போக்குவை இதனைக் குறிக்கொள்' என்று தலைவி தோழியிடம் கூறுவாள்.

சொல்லிய வாறெல்லாம் மாறுமா றியான் பெயர்ப்ப
அல்லந்தான் போலப் பெயர்ந்தான் அவனைநீ
ஆயர் மகளிர் இயல்புரைத் தெந்தையும்
யாயு மறிய உரைத்தீயின் யானுற்ற
நோயுங் களைகுவை மன். (கலி : 111 : 21-24)

ஓரோர் சமயம் தலைவியின் காதல் வெளிப்பட்ட விடத்து, அவளது பெற்றோர் உடனே அவளைக் காதலித்தவனுக்கே விரைந்து மணமுடிக்கத் துணிவர். முல்லைக்கலியில் வரும் தலைவி ஒருத்தித் தன் காதலனாகிய ஆயர் மகன் சூடிவந்த முல்லைக் கண்ணியைத் தன் கூந்தலிலே சூடிக்கொண்டாள். அப்பூவானது செவிலித்தாய் வெண்ணெய் தேய்க்க விரித்த மயிரோட நற்றாயுந் தந்தை முதலியோரும் இல்லில் இருக்க அவர்கள் நாணும்படிச் செவிலி முன்னே வீழ்ந்தது. அதனால் தலைவியின் களவொழுக்கம் வெளிப்பட்டது. அஞ்சி நடுங்கிய உள்ளத்தினளாய் தளர்ந்து நடந்து சென்று பக்கத்திலுள்ள கானத்தில் தலைவி ஒளிந்து கொள்கிறாள். செவிலித்தாயும் அப்பூ வந்தவிதம் யாது என்று கேட்டுச் சினக்கவில்லை. இப்பண்புடைமை செவிலியின் நனிநாகரிகத்தை உணர்த்து தலை அறியலாம். பின்னர் தலைவி ஒளிந்திருந்த இடம்தேடி வந்து அவளது தோழி ஆறுதல் வார்த்தைக் கூறுகின்றாள். தலைவியே நின் தலைவன் கண்ணியை நீ சூடினாயாயின் அதற்கேற்ப நம்முடைய சுற்றத்தாரும் நின்னை அவனிடத்தே அடுத்தலைச் செய்தனர். அதுவேயன்றி உடனே திருமணமும் செய்துவைப்பர் அஞ்சாதே என்று ஆற்றுவிக்கின்றாள்.

அஞ்சல், அவன்கண்ணி நீபுனைந்தா யாயின் நமரும்

அவன்கண் அடைசூழ்ந்தார் நின்னை அகன்கண்
வரைப்பின் மணல்தாழப் பெய்து திரைப்பில்
வதுவையும் ஈங்கே அயர்ப அதுவேயாம்
அல்கலுஞ் சூழ்ந்த வினை. (கலி : 115 :17-21)

## திருமணமுறை

அந்நாளில் ஆயர்குடியில் பிறந்தவர் ஏறுதழுவலில் வெற்றி-பெற்றாலன்றி மணந்து இல்லறம் புகத்தகுதி பெறார். ஆயர் மகளிரும் கொல்-லேறுகண்டு அஞ்சுவானை விரும்புமாட்டார். ஒரோவொருகால் பெற்றோர் முலைவிலை கொண்டும், தம்மக்களின் காதலை அறிந்தவிடத்தும் மணமுடித்து வைத்தல் உண்டு. ஆனால் இது ஆயரினப் பெருங்குடித் தலைவர்பால் பெரும்பாலும் நிகழ்வதில்லை. கொல்லேற்றின் கோடுகளுக்கு இடையே அஞ்சாது வீழ்ந்து அடக்குபவனிடம் ஆயர்குலத்தலைவர் தம்மகளிர்க்கு விலையாகப் பரிசப்பொருள் எதுவும் வேண்டார்.

காதலும் கடிமணமும் ஆயரிடையே காணப்பட்ட ஒரு தனித்த பண்பாகும். கொல்லேறு தழுவலால் பலர் புண்படவும் உயிர் துறக்கவும் நேர்ந்த போதிலும் தங்குடிப்பெருமையையும் மரபையும் மறவாது போற்றும் இயல்புடையவரான ஆயர் அதனைக் கைவிடாது உறுதியுடன் ஓம்பினர். ஆயர்குல இளைஞனும் கன்னியும் தம்முள் தாமே கலந்து காதல் வயப்பட்டவராயினும் ஊரறியப் பெற்றோர் இசைவுடன் திருமணம் நடைபெறும் நாளை எதிர்நோக்கி இருப்பர். எல்லா உயிரினங்களும் மகிழ்ந்து வரவேற்கக்கூடிய கார்காலம் தொடங்கியதும் தொழில்மேற் சென்ற ஆயர் எல்லோரும் வீடுதிரும்புவர். அப்போது மணப்பருவமுள்ள மகளிரை மணக்க விரும்பும் இளைஞர் ஏறுதழுவி வெற்றிகொள்ளும் ஆண்மையுடையவரானல் முன்வரலாம் எனப் பறையறைந்து அறிவிப்பர். மணப்பருவமுள்ள மகளிர் அனைவர்க்கும் மணமகன் தேடும் ஏறுதழுவல் நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் ஒரே இடத்தில் நடத்தும் பழக்கம் முல்லைநில மக்களிடையே காணப்பட்டுது.

நல்லாரை ஆயர் முறையினால்
நாண்மீன்வாய் சூழ்ந்த மதிபோல் மிடைமிசைப்
பேணி நிறுத்தார் அணி. (கலி: 104 : 26-28)

ஏறுதழுவல் நடக்கும் களத்தில் எல்லோரும் குழுமிய பின்னர் தனித்தனியே இன்னின்ன காளையைத் தழுவி வெல்பவன் இன்னின்னாரை மணந்து வாழும் உரிமை உடையவனாவான் என்றும் அறிவிக்கப்படும்.

கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்
புல்லாளே ஆயமகள் ;
அஞ்சார் கொலையேறு கொள்பவ ரல்லதை
நெஞ்சிலார் தோய்தற் கரிய வுயிர்துறந்து
நைவாரா ஆயமகள் தோள் ;
வளியா அறியா உயிர்காவல் கொண்டு
நளிவாய் மருப்பஞ்சும் நெஞ்சினார் தோய்தற்
கெளியவோ ஆயமகள் தோள் ; (கலி : 103 : 63-70)

எனவரும் முல்லைக்கலி அடிகளும்; "கொல்லேறு கொண்டான் இவள் கேள்வன் " என ஊரார் போற்றும் உரையை ஆயமகள் விரும்புவாள் என்ற செய்தியும் ஆயரிடையே ஏறுதழுவல் என்பது எந்த அளவு வன்மையாக வேரூன்றி இருந்தது என்பதைக் காட்டும்.

ஏறுதழுவல் நிகழ்ச்சி முடிந்ததும் ஏறுகளை எல்லாம் மேயும் நிலம் நோக்கிச் செலுத்திவிட்டு மகிழ்ச்சியை வெளிப்படுத்த அழகிய ஆய்ச்சியரும் ஆயரும் பொழிலிடம் சென்று குரவை ஆடுவர். அப்பொழுது கொலையேற்றி னைத் தழுவியதால் விழுப்புண்பட்ட மார்பையுடைய பொதுவனை வாழ்த்திப்-பாடுவர்.

பாடுகம் வம்மின் பொதுவன் கொலையேற்றுக்
கோடு குறிசெய்த மார்பு . . . . (கலி : 104 : 63-64)

பின்னர் திருமணவிழா நடைபெறுவதற்காக ஆயர் தமது இல்லத்தைச்-செம்மண்கொண்டு பூசி பொலிவுபெறுமாறு செய்வர். மனைமுற்றத்தில் புது-மணல் பரப்பிச் சரிசெய்தனர். தம்குலவழக்கப்படி எருமைக்கோடு நட்டு இறைவனை வழிபடத் தொடங்குவர்.

தருமணல் தாழப் பெய்து இல்பூவ லூட்டி
எருமைப் பெடையோ டெமரீங் கயரும்
பெருமணம். (கலி : 114 : 12-14)

பின்னர் ஆயர்கள் புதுமணல் பரப்பப்பட்ட இடத்தில் திரையிட்டு அங்கு மண-மக்களை வைத்துச் சடங்க செய்வர் என்பது,

> வரைப்பின் மணல்தாழப் பெய்து திரைப்பில்
> வதுவையும் ஈங்கே அயர்ப . . . . (கலி : 115 :19-20)

என்றதால் உணரலாம்.

## ஆயரின் கடவுள் நம்பிக்கை

ஐந்திணைகளுள் முல்லை நிலத்திற்குரிய தெய்வமாக, 'மாயோன் மேய காடுறை உலகமும் ' என்றதால் திருமால் கொண்டாடப்பட்டார். பொதுவாக ஆயரினத்தார் மாயோனைத் தங்குல தெய்வமாகப் போற்றி வழிபடும் இயல்-பினர். மேலும் பல சிறுதெய்வ வழிபாடுகளும் அவரிடையே காணப்பட்டன. ஏறுதழுவுதற்குச் செல்லுமுன்னர் நீர்த்துறைகளிலும், ஆலமரத்தடியிலும் மாமரங் களிலும் உறையுந் தெய்வங்களை ஆயர்கள் வணங்கினர். அத்தெய்வங்களுக்கு மாலை அணிவித்து மகிழ்வர். புதிய மாலைகளை அணிவிக்கும்போது, பழைய மாலைகளைப் புறத்தே வீசி எறிய மாட்டார்கள். கடவுளர்க்கு அளித்த மாலை பிறர்கால்களில் மிதிபடுவது கூடாது என்று எண்ணுவது அக்காலத்திலேயே ஆயரிடையே உள்ள ஒரு பண்பாகக் காணப்படுகிறது. எனவே அவற்றை அத்தெய்வங்கள் அமர்ந்திருந்த மரக்கிளைகளின் மேல் வீசி எறிவர். இவ்வாறு நாள்தோறும் வீசியெறிந்த மலர்மாலைகள் பல அம்மரக்கிளைகளில் தொங்கிக் கொண்டிருக்கும்.

"ஆளும் கடம்பும் அணிமார் விலங்கிட்ட மாலை " (கலி :106:28) ஏறுதழுவி வெற்றி பெற்ற பின்னர் ஆயர்கள் ஒன்றுகூடித் தம்வழிபடு தெய்வ மான திருமாலின் பெருமைகளைக்கூறி வழிபடுவர்.

> "தொல்கதிர்த் திகரியாற் பரவுதும்" (கலி : 104 : 88)
> "பாடிமிழ் பரப்பகத் தரவணை யசைஇய
> ஆடுகொள் நேமியாற் பரவுதும்" (கலி : 105 : 71-72)

ஆயர்கள் எதிர்பாராது நடக்கும் செயல்கள் எல்லாம் தெய்வத்தின் அருளால் நேர்வது என்று நம்பினர். காட்டாக, ஏறுதழுவலில் கொல்லேற்றுடன்

ஆயரிளைஞன் ஒருவன் போரிடுங்காலத்து, அவன் மார்பில் அணிந்திருந்த மாலையை அது கொம்பால் தூக்கியெறிய, அம்மாலை அவன் காதலியின் கூந்தலில் சென்று விழ அவள் அதை அன்போடு எடுத்துச் சூடிக்கொண்டாள். இச்செய்தியை அறிந்த தலைவியின் தாய், தந்தையொடும் தமையன்மாரொடும் கலந்தாய்ந்து, தெய்வமாகிய திருமால் இவளுக்கு இவனைத் திண்ணிதாகக் கொண்டுவந்து காட்டிற்று என மகிழ்ந்து அந்த ஆயனுக்கே மகளை மணஞ்செய்து கொடுக்கத் துணிந்தாள்.

> மண்ணிமா சற்றநின் கூழையுள் ஏறவன்
> கண்ணிதந் திட்ட தெனக்கேட்டுத் திண்ணிதாத்
> தெய்வமால் காட்டிற் றிவட்கென நின்னையப்
> பொய்யில் பொதுவற் கடைசூழ்ந்தார் தந்தையோ
> டையன்மார் எல்லாம் ஒருங்கு . . .
> (கலி :107 : 31-35)

மேலும் ஆயர் என்றும் குறைபடாத பெரும்புகழ் தெய்வத்தைப் பரவுவர் என்பது "தேயா விழுப்புகழ்த் தெய்வம் பரவுதும்" எனவரும் முல்லைக்கலியடியால் உணரலாம்.

## முடிவுரை

ஆதிகால மக்கள் நாகரிகநிலைக்கு மாறும் இடமாக முல்லைநிலம் அமைந்தது. வேட்டையாடி உணவுண்டு மலைகளில் திரிந்த மக்கள் பின்னர் உணவுப்பொருள்களின் தேவை கருதி மலைகளை அடுத்த காடுகளில் சென்று. வாழத்தலைப்பட்டனர். அங்கு ஆடு, மாடு, எருமை போன்ற விலங்குகளைப் பழக்கி அவற்றைப் பேணிக்காத்து, அவை அளிக்கும் பால், தயிர், வெண்ணெய் முதலியவற்றை விற்று ஒவ்வொரு ஆயரும் சொத்துடையவராயினர். அவர்களுடைய உடைமையாக ஆநிரைகள் போற்றப்பட்டன. பின்னர் அவர்களுடைய உடைமையைக் காக்க வாரிசுரிமை தேவைப்பட்டது. இந்த வாரிசுரிமையை நிலைநாட்ட ஒருவனுக்கு ஒருத்தி என்ற உறவை மேற்கொண்டு வாழ வேண்டும் என்ற எண்ணமும், அதில் தவறேதும் நிகழாமல் தடுத்துக்காக்கக் கற்பு என்ற ஒழுக்கமும் உருவாயிற்று. முல்லை நிலத்தில் நாடறி நன்மணம் புரியும் பழக்கம் ஏற்பட்டது. ஆகவே இல்லிருத்தலை இலக்கணமாகக் கொண்ட முல்லை வாழ்க்கைக்கு மற்ற திணை வாழ்க்கைகளுக்கு இல்லாத தனிச்சிறப்பும்

பெருமையும் உண்டு.

முல்லை நிலத்தில் எண்ணற்ற ஆடுமாடுகளை வைத்திருப்பவன் செல்வத்தால் அடையக்கூடிய எல்லா முதன்மைகளையும் பெற்றான். அவனே மற்ற எல்லார்க்கும் தலைவன் ஆனான். இவ்வாறு மக்கள் சமூகமாய்க் கூடி ஒரு தலைவன் கீழ் வாழும் வாழ்க்கை முறை முல்லை நிலத்தில் தோன்றியது. அந்நாளில் முல்லைத் தலைவனுக்குச் செல்வமாக விளங்கியவை மாடுகளே. அது பற்றியே மாடு என்ற சொல்லுக்குச் செல்வம் என்ற பொருளும் பின்னாளில் வழக்கில் வந்தது. அம்முல்லைநிலத் தலைவன் 'கோ' அல்லது 'கோன்' எனப்பட்டான். இவனே தமிழ்நாட்டு முடிவேந்தனின் முன்னோடியாகலாம் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். கோன் என்ற சொல்லாட்சி முல்லைநிலப்பகுதியில் ஆடுமாடுகளைக் காக்கும் தலைவனையும் அரசனையும் குறிப்பதுவும் இவர்கள் கருத்திற்கு வலிமைதரும். எனவே வீரம் மிக்க முல்லைநிலத் தலைவன் மன்னனானான். பின்னர் முடியுடை மூவேந்தர்களுக்குத் துணையாய் முல்லை நிலச் சீறூர் மன்னன் வாழத்தொடங்கினான். புறத்திணை முல்லைப் பாடல்களும் அகத்திணை முல்லைப் பாடல்களும் முல்லைநிலத்தலைவர்கள் வேந்தர்களுக்குத் துணையாயிருந்து உதவியமையைக் குறிப்பிடுகின்றன.

முல்லை நிலத்தில் வாழும் வாழ்க்கைக்கு உகந்த காலமாகக் கார்காலம் அமைகிறது. அக்காலத்தில் முல்லைக்காடு கண்கவரும் வனப்புமிக்க நிலமாகக் காட்சிதரும். இதனால் சங்க இலக்கிய முல்லைத்திணைப் பாடல்களில் நிலமும் பொழுதும் மரமும் மலரும் புள்ளும் விலங்கும் பிறவும் பின்னணியாக இருக்கக் கருத்தொருமித்து நாடறி நன்மணம் புணர்ந்த தலைவனும் தலைவியும் நடத்தும் இனிய இல்வாழ்க்கை உரிப்பொருளாய் அமைந்தது. முல்லையில் காணும் பிரிவுத் துயரும் இல்லறநெறியில் ஒருவருக்காக ஒருவர் ஆற்றியிருக்கும் பண்பை வெளிப்படுத்தும். முல்லைத்திணைத் தலைமக்கள் அவர்களுக்கென்று கற்பிக்கப்பட்ட நெறியின்றின்றும் பிறழாமல் வாழ்ந்து காட்டுவது மற்ற திணைகளில் காணப்படாத தனிச்சிறப்பாகும். கொல்லேறு தழுவி மணம் முடிக்கும் முறை முல்லைநில மக்களிடமே காணப்படுகிறது. ஏறுதழுவல் நிகழ்ச்சி முல்லைக் கலியில் மட்டுமே காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது. முல்லைநில ஆயர்களால் காதலும் வீரமும் இருகண்களாகப் போற்றப்பட்டன. இவர்கள் விலங்கினங்களைப் பேணிக்காக்கும் அறநெஞ்சமுடையவர்கள். இரவுப் பொழுதாயினும் வரும் விருந்தினரை மகிழ்ச்சியோடு வரவேற்கும் பண்புடையவர்கள், முல்லைநில மக்கள் முறையான வாழ்க்கையை வாழ்ந்ததோடு

அவர்களது பொழுதுபோக்கும் இனிய முறையில் அமைந்தது குறிப்பிடத்தக்கது. முல்லைநிலத்தாரே இன்னோசையால் உயிரினங்களை மகிழவைக்கம் குழல், யாழ் என்ற இசைக்கருவிகளைக் கண்டெடுத்து அவற்றில் இனிய பண்களை இசைத்துக்காட்டி இசைக்கலைக்கு முன்னோடிகளாய்த் திகழ்ந்தவராவர்.

முல்லைநில மக்கள் தமது புறவாழ்விலும் அகவாழ்விலும் சிறந்த குறிக்கோள்களை உடையவராக வாழ்ந்தனர். தமிழ் மக்களுடைய நாகரிக, பண்பாட்டு வளர்ச்சியில் இம்முல்லை நிலமும் அந்நில வாழ்க்கையும் ஒரு சிறந்த நிலையை அடைந்துள்ளதோடு மருதநில வாழ்க்கைக்கு அது அடிப்படையாகவும் அமைந்துள்ளது.

# துணை நூல்கள்

1. இலக்கியம் ஒரு பூக்காடு ; கோவை இளஞ்சேரன் ; இராக்போர்ட்டு பப்ளி கேஷன் ; சென்னை ; 1982.

2. ஐங்குறுநூற்றுச் சொற்பொழிவுகள் ; சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் ; சென்னை.

3. ஐங்குறுநூறு ; மூன்றாம் தொகுதி ; அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு ; 1958.

4. கலித்தொகை ; கழக வெளியீடு ; சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் ; சென்னை ; 1969.

5. கலித்தொகைச் சொற்பொழிவுகள் ; கழக வெளியீடு ; சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம் ; சென்னை.

6. குறுந்தொகை ; பதி.மு.சண்முகம் பிள்ளை ; தமிழ்ப் பல்கலைக்கழகம் ; தஞ்சாவூர் ; 1985.

7. குறுந்தொகைச் சொற்பொழிவுகள் ; கழக வெளியீடு ; சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம் ; சென்னை ; 1972.

8. சங்க இலக்கியங்களில் வரைவு கடாதலும் அறத்தொடு நிற்றலும் ; டாக்டர் இராம சண்முகம் ; சரவணா பதிப்பகம் ; மதுரை 20 ; 1993.

9. சங்க இலக்கியத்தில் முல்லைத் திணை ; ஜ. அண்ணாமலை ; சென்னைப் பல்கலைக் கழக முனைவர் பட்ட ஆய்வேடு ; 1977.

10. சங்க இலக்கியம் - முருதம் ; இரா. குளோரியா சுந்தரமதி ; திருவனந்த-புரம் ; 1973.

11. தெ.பொ.மீயின் ஆய்வுத்திறன் ; டாக்டர் மே.அ. பாலமுருகன் ; காவ்யா பதிப்பகம் ; பெங்களூர்.38 ; 1992.

12. தொல்காப்பியம் பொருளதிகாரம் இளம்பூரணம் ; கழக வெளியீடு ; சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் ; சென்னை ; 1967.

13. தொல்காப்பியம் பொருளதிகாரம் ; நச்சினார்க்கினியர் உரை ; சைவ-

சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் ; சென்னை ; 1977.

14. நற்றிணைச் சொற்பொழிவுகள் ; கழக வெளியீடு ; சைவசித்தாந்த நூற்-
பதிப்புக் கழகம் ; சென்னை ; 1957.

15. புறப்பொருள் வெண்பாமாலை ; ஐயனாரிதனார் ; மூன்றாம் பதிப்பு ;
கமர்ஷியல் அச்சுக்கூடம் ; சென்னை ; 1924.

16. முல்லைக்கொடி ; புலவர் கா.கோவிந்தன் ; சஞ்சீவியார் பதிப்பகம் ;
சென்னை-5 ; இரண்டாம் பதிப்பு ; 1984.

17. முல்லைத் திணை ; டாக்டர் மு. வரதராசனார் ; பாரிநிலையம் ; சென்னை.

18. முல்லைப்பாட்டு ஆராய்ச்சி ; மறைமலையடிகள் ; கழக வெளியீடு ;
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் ; சென்னை ; 1962.

19. முல்லைப் பாடல்கள் ; டாக்டர் நா. செயராமன் ; மதுரை பப்ளிஷிங்-
ஹவுஸ், மதுரை ; 1976.

20. முல்லை வாழ்க்கை ; டாக்டர் நா. ஆறுமுகம் ; கன்னி பதிப்பகம் ; காஞ்சி-
புரம் ; 1989.

********

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 600 113

அண்மை வெளியீடுகள்

| | | ரூ. பை. |
|---|---|---|
| சங்கத் தமிழர் வாழ்வியல் | .. | 75.00 |
| தமிழக மேடைநாடகப் பெண் கலைஞர்கள் -குறிப்பேடு | .. | 25.00 |
| A Grammar of Contemporary Literary Tamil | .. | 80.00 |
| Cilappatikaram | .. | 100.00 |
| காதம்பரி மூலமும் வசனமும் | .. | 125.00 |
| Tani Pacura Togai | .. | 30.00 |
| Dedication | .. | 25.00 |
| Temple Chimes | .. | 20.00 |
| Nala Venba | .. | 45.00 |
| Tamil Heroic Poems | .. | 40.00 |
| Six Long Poems from Sangam Tamil | .. | 30.00 |
| Kurinci-P-Pattu-Muttollayiram | .. | 40.00 |
| Kuruntokai | .. | 110.00 |
| Landscape and Poetry | .. | 50.00 |
| Tamil Culture and Civilization | .. | 60.00 |
| Tolkappiyam and Astadhyayi | .. | 110.00 |
| தமிழக மகளிர் தொடக்க காலமுதல் ஆறாம் நூற்றாண்டு வரை | .. | 50.00 |
| தமிழில் நவீன நாடகம் | .. | 70.00 |
| இலக்கியத்தில் சோதிடம் | .. | 65.00 |
| சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும் | .. | 80.00 |
| தொல்காப்பியம்-பொருள்-புறத்திணையியல் பகுதி - 1 | .. | 50.00 |
| தொல்காப்பியம்-பொருள்-புறத்திணையியல் பகுதி - 2 | .. | 65.00 |
| சோதிடவியல் | .. | 70.00 |
| மூலிகைக் கற்பங்கள் | .. | 80.00 |
| அமிர்த மதன கூத்து நாடகம் | .. | 90.00 |
| சித்த மருத்துவ மணிகள் | .. | 75.00 |
| கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைச் சுவடிகள் விளக்க அட்டவனை (முதல் தொகுதி) | .. | 85.00 |
| Tamil Scripts - Work Book | .. | 50.00 |
| Work Book Written Tamil | .. | 50.00 |
| விடுதலைக்கு முன் தமிழ் நாவல்களில் பெண்கள் | .. | 30.00 |
| திருக்கோயில்களில் தொழில் சமுதாய உறவுகள் | .. | 25.00 |
| தமிழ்க் காட்சி நெறியியல் | .. | 46.00 |
| இருபதாம் நூற்றாண்டின் இலக்கியக் கோட்பாடுகள் | .. | 30.00 |
| ஒப்பிலக்கியம்:கொள்கைகளும் செயல்முறைகளும் | .. | 15.00 |
| கருணையம்மன் அந்தாதி | .. | 22.00 |